கலைஞர் பற்றிய படைப்புகள் ஆய்வடங்கல்

பெ. கோவிந்தசாமி

பஏ 7205

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

கலைஞர் பற்றிய படைப்புகள்
ஆய்வடங்கல்

கலைஞர் பற்றிய படைப்புகள் ஆய்வடங்கல்

முனைவர் பெ. கோவிந்தசாமி
விரிவுரையாளர்
நாடகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010

ISBN: 978-81-7090-423-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்.380

நூல்	:	கலைஞர் பற்றிய படைப்புகள் ஆய்வடங்கல்
ஆசிரியர்	:	முனைவர் பெ. கோவிந்தசாமி
மொழி		தமிழ்
பொருள்		இலக்கியம்/படைப்பிலக்கியம்
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2041, ஆனி முதற்பதிப்பு - சூன் 2010
பக்கம்	:	168
தாள்	:	70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
விலை	:	உரூ. 80/-
படிகள்	:	1200
ஒளியச்சு	:	கே.எஸ். கருணா பிரசாத்
அச்சு	:	ராஜம்ஸ் டிஜிட்டல் ஆப்செட் பிரிண்ட்ஸ் 227, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை சென்னை - 600 014.

பொருளடக்கம்

அணிந்துரை	4
முன்னுரை	6
சமூகப் புதினங்கள்	9
வரலாற்றுப் புதினங்கள்	12
சிறுகதைகள்	19
நாடகங்கள்	26
திரைப்படங்கள்	32
கவிதைகள்	39
கவியரங்கக் கவிதைகள்	68
காவியம்	70
திரை இசைப்பாடல்கள்	71
உரை	72
உரைவிளக்கங்கள்	75
வரலாறு (தன்/வாழ்க்கை)	90
கடிதங்கள்	97
கட்டுரைகள்	101
சொற்பொழிவுகள்	104
இதழியல்	107
பயண இலக்கியம்	108
பிற / பொது	108
நூல் / கட்டுரையாசிரியர் பெயர் அகரவரிசை	136
நூல் / கட்டுரைத் தலைப்பு அகரவரிசை	149

முனைவர் ம. இராசேந்திரன் **தமிழ்ப் பல்கலைக்கழகம்**
துணைவேந்தர் **தஞ்சாவூர் – 613 010**

அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில்

முனைந்து பணியாற்றிய நூலாசிரியர் முனைவர் பெ. கோவிந்தசாமி, பதிவாளர் முனைவர் சா.பி. சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

முன்னுரை

ஒரு படைப்பின் விளைவுகளை எடையிடத் திறனாய்வே திறவுகோலாகிவிடுகிறது. அதிலும் முத்தமிழறிஞரைப் போன்ற மகத்தான படைப்பாளியின் படைப்புகள் இந்தச் சமூகப் பரப்பில் கடந்த 75 ஆண்டுகளாக நிகழ்த்திவரும் மாற்றங்கள் உலகில் எந்தப் படைப்பாளியோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாதவை.

தமிழ்ச் சமுதாயத்தைப் பிணித்து வதைத்து வரும் நோய்களைக் காலந்தோறும் களைந்து வருபவை கலைஞரின் எழுதுகோல் அசைவுகள் என்பதை இந்த ஆய்வடங்கல் இனங்காட்டி நிற்கிறது.

இதிகாச – புராண மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இயங்குவதிலும் பெண்ணடிமைக்கு எதிராகக் குரல்கொடுப்பதிலும் தமிழ்மொழி உணர்வையும் இன உணர்வையும் தூக்கிப் பிடிப்பதிலும் இவர் கண்ட வெற்றிகளைத் துல்லியமாக அளந்து காட்டுபவை இந்த நூலில் காணக் கிடக்கின்ற குறிப்புகள்.

முதல்வர் கலைஞரின் எழுத்தாளுமை அறிவின்மீதும் உணர்வின் மீதும் கற்பனை வளத்தோடு கட்டியமைக்கப்பட்டுள்ள பாங்கினை அவர் பற்றி எழுதப்பட்டுள்ள ஆய்வுரைகள் மிகச் சரியாகவே அடையாளப்படுத்துகின்றன.

இதுவரை தமிழில் எந்தப் படைப்பாளியின் மீதும் இவ்வளவு பேர் இவ்வளவு எழுதிக் குவித்திருப்பார்களா? எனும் வினாவுக்கு இல்லவே இல்லை என அழுத்தந் திருத்தமாக விடையளித்து விடலாம்.

சங்க இலக்கியங்களையும் சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களையும் சம காலத்துச் சராசரி மக்களிடம் கொண்டு சேர்க்கக் கலைஞர் கையாண்ட இலக்கிய நுட்பங்கள் வியக்கவைப்பதை இந்த நூல்வழி எவரும் புரிந்துணர முடியும்.

இருபதாம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை தமிழ்வளர்ச்சி என்பது ஏதோ ஒருவகையில் கலைஞரின் தமிழோடு தொடர்பு கொண்டு வருவதைப் பல ஆய்வறிஞர்கள் சுட்டியிருப்பதை இந்த ஆய்வடங்கல் வழி கண்டுணரலாம்.

கையால் எப்படிக் கடலை அள்ள முடியாதோ அதே போன்று கலைஞரின் சிந்தனை ஓட்டத்தைக் கணிக்க எவராலும் முடியாது, அந்தச் சிந்தனை ஓட்டத்தின் விளைச்சல்களாம் கலைஞர் படைப்புகள் குறித்து அறிஞர்கள் ஆராய்ந்து எழுதிய கட்டுரைகள் / நூல்கள் அத்துடன் அதிசயங்களுக்கெல்லாம் அதிசயமாம் கலைஞர் குறித்துக் கலைஞரை நேசிக்கின்ற தொண்டர்கள், தோழர்கள், தோள் கொடுத்தோர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் என இந்நூல் தொகுப்பு அமைகிறது.

கலைஞரின் எழுத்துக்களைப்போலவே கலைஞரின் எழுத்துக்களின் மீதான இந்த எழுத்துக்களும் காலத்தை வென்று கல்வெட்டுக்களாய் நின்று நிலைக்கும் என்பது உறுதியான உண்மையாகும்.

பொருண்மை என்ற நிலையில் சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், சிறுகதைகள், நாடகம், திரைப்படங்கள், கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், காப்பியம், திரைஇசைப்பாடல்கள், உரை, உரைவிளக்கங்கள் வரலாறு (தன் / வாழ்க்கை), கடிதம், கட்டுரை, சொற்பொழிவுகள், இதழியல், பயண இலக்கியம், பிற / பொது, என்ற வகைப்பாட்டில் அமைக்கப்பட்டுத் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

கால நெருக்கடியின் காரணமாகச் சில பதிவுகள் இத்தொகுப்பில் விடுபட்டிருக்கலாம். தகவல் தெரியின் தெரிவித்து உதவினால் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பாக அமையும்.

என் உழைப்பின் மீதும் என் ஆய்வு நேர்மையின் மீதும் நம்பிக்கைவைத்து, அறிவுலக
அதிசயம் கலைஞர் பற்றிய படைப்புகளை ஆய்வடங்கலாக்கும் மிகப்பெரிய பேற்றினை
எனக்கு வழங்கிய என்மீது அன்புகாட்டி அரவணைக்கும் என் எண்ணமெல்லாம்
நிறைந்திருக்கிற இனிய துணைவேந்தர்

முனைவர் ம. இராசேந்திரன்...

பணி தொடங்கிய காலத்தில் துணை நின்ற அன்பான சகோதரர்
முனைவர் பெ. இராமலிங்கம்...
இன்முகத்தோடு கலைஞர் பற்றிய படைப்புகளை எடுத்தும், தேடியும் கொடுத்து
உதவிய அண்ணா அறிவாலய- பேராசிரியர் ஆய்வக நூலகத்தின் நூலகர்
திரு. சுந்தர்ராஜன்...
துணை நூலகர் திரு. செந்தில்...
கன்னிமாரா பொது நூலகத்தின் திரு. மீனாட்சிசுந்தரம்...
தமிழ்ப் பல்கலைக்கழக வ.அய். சுப்ரமணியம் நூலகத்தின் இயக்குநர் (பொ.)
முனைவர் பா. சுந்தரேசன்...
கணிப்பொறி இயக்குநர் சகோதரர் தி. சிவகுமார்...
ரோஜா முத்தையா ஆய்வக நூலகம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம்
தலைமைச் செயலக நூலகம்
ஆகியனவற்றின் நூலகர்கள் மற்றும் பணியாளர்கள்...
தட்டச்சு செய்வதில் துணை நின்ற நண்பர்கள்
என். நடராஜன், கே.ஏ. செல்வராஜ்...
அன்புத் தம்பி பன்னிருகை வடிவேலன்...
சகோதரி செல்வி கீதா மற்றும் டில்லிபாபு. கணேசன்...
மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய தமிழக அரசின் முன்னைத் தமிழ்வளர்ச்சி

இயக்குநர் இந்நாள் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர்
திரு. வை. கண்ணபுரக்கண்ணன்...
அன்பிற்கினிய நண்பர் முனைவர் சா. உதயசூரியன்...
உழைப்பைப் பகிர்ந்துகொள்ளும் உன்னதமறிந்த சகோதரர் ந. இராமகிருஷ்ணன்...
பல்வேறு சிக்கல்களுக்கிடையிலும் மனமகிழ்ச்சியோடு நூலை வடிவமைத்துத் தந்திருக்கிற அன்புத் தம்பி
கே.எஸ். கருணா பிரசாத்...
என் எல்லா முயற்சிகளுக்கும் உந்துசக்தியாக இயங்கிக் கொண்டிருக்கும் என் இனிய துணைவியார்
பேரா. முனைவர் வே. வினோபா...
எனக்கு எல்லாமுமாக இருக்கிற என் அன்பு மகள்கள்
கோவி. சிந்து பைரவி, கோவி. நீலாம்பரி...
என்னை என்றும் நேசிக்கின்ற அன்பான சகோதரன்
சா. தேவேந்திரன்...
இவர்களுடன்
இந்த நூலாக்க முயற்சியில் உதவிய அனைவருக்கும் நன்றி.

அன்புடன்

பெ. கோவிந்தசாமி

சமூகப் புதினங்கள்

வணங்காமுடி. கு, **கலைஞரின் புதினங்கள்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1979.

கலைஞரின் புதினங்கள் குறித்து, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

வணங்காமுடி. கு, **கலைஞரின் புதினங்கள்** ஓர் ஆய்வு, பகுத்தறிவுப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1980, பக். 122 + 8.

சுயமரியாதை இயக்கப் படைப்பாளர்கள்
கலைஞரின் படைப்பு நோக்கமும் கருத்துப் பரப்பலும்
கலைஞரின் புதினங்களில் தாக்குரவுகள்
கலைஞரின் புதின மாந்தர்கள்
கலைஞரின் நடை

ஆகிய இயல்களில் எழுதப்பட்ட நூல்.

வணங்காமுடி.கு, **கலைஞரின் புதினங்களும் கருத்துப் பரப்பலும்** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழாக்குழு, சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1984, பக். 67–78

சமூகச் சீர்திருத்தங்களை நோக்கமாகக் கொள்ளும் கலை வாழ்க்கைக்காகவே என்ற கோட்பாட்டு நிலையில் கலைஞரின் புதினங்கள் படைக்கப்பட்டுள்ள பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நாராயணசாமி. ஆ, **கலைஞரின் வெள்ளிக்கிழமை ஒரு சமுதாயப் பார்வை**, கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.258–266.

சமயமும் கடவுளும் இவற்றின் சார்புடைய மூடநம்பிக்கைகளும் புராண இதிகாசங்களும், பெண்ணடிமை முதலான கொடுமைகளும் சமுதாயத்தைப் பிணித்து வதைக்கின்ற நோய்கள் என்னும் கலைஞரின் கொள்கையை அவரது 'வெள்ளிக்கிழமை' புதினத்தின் வழிநின்று விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

புகழேந்தி. ப, **கலைஞரின் சமூகப் புதினங்கள்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் புதையல், வெள்ளிக்கிழமை, சுருளிமலை, வான்கோழி, ஒரு மரம் பூத்தது, ஒரே இரத்தம் ஆகிய சமூகப் புதினங்கள் அனைத்துமே, கலைஞரின் எண்ணங்களை, இலட்சியங்களை, கொள்கைகளைத் திறம்பட வெளிப்படுத்தும் பாங்கு கொண்டமைந்திருக்கும் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

குமார். கே, **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி நாவல்களில் சமுதாயம்**, முனைவர் பட்ட ஆய்வேடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், **2005.**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முனைவர் கோ. நச்சினார்க்கினியன் அவர்களின் நெறியாளுகையில் கலைஞரின் நாவல்களில் காணத்தகும் சமுதாயம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

நெடுஞ்செழியன். க, **ஒரே இரத்தம் – ஒரு புரட்சி ஓவியம்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008**, பக். **254 – 265.**

கலை இலக்கியங்கள், மனித வாழ்வின் துன்பங்களுக்கான காரணங்களை அடையாளம் காட்டவும் விடியலுக்கான வழிகளைக் காட்டவும் கூடிய ஆற்றல் பெற்றவை. அத்தகைய ஆற்றல்களைக் கொண்டுள்ள ஒரு புரட்சி ஓவியமே கலைஞரின் ஒரே இரத்தம் என்பதைக் கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மங்கையர்க்கரசி. சிவ, **வெள்ளிக்கிழமை– ஒரு சமுதாய நோக்கு**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008**, பக். **393–416.**

பொருளாதாரச் சீர்கேடுகளையும் சமூகக்கொடுமைகளையும் சித்திரித்துக் காட்டுவதாகக் கலைஞரின் வெள்ளிக்கிழமை படைக்கப்பட்டுள்ளமையை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

பிளாரன்ஸ்.மு, **கலைஞரின் சமூகப் பார்வையில் 'ஒரு மரம் பூத்தது'**, கலைஞர் படைப்புலகம்–ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008.** பக். **466–471**

ஒரு விதவைப் பெண்ணின் வாழ்க்கையில் அவள் சந்தித்த இன்னல்களைக் கலைஞர் படம்பிடித்துக் காட்டியுள்ள பாங்கையும் சமூக இயங்குதளத்தில் ஆணாதிக்கம் ஒழிந்து ஆண்–பெண் சமத்துவம் மலர வேண்டும் என்னும் கலைஞரின் கருத்தியலையும் கண்டு விளங்கும் வகையில் அமைந்த கட்டுரை.

செல்வராசு. முனைவர் க, **கலைஞரின் கடைசி இலையில் ஒரு மரம் பூத்தது**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **484–489**

கடைசி இலை என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு மரம் பூத்தது என்னும் புதினத்தினைக் கலைஞர் படைத்திட்ட நுட்பத்தைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கமலா முருகன். முனைவர், **கலைஞரின் வெள்ளிக்கிழமை உணர்த்தும் விழிப்புணர்வுச் சிந்தனைகள்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **490–494.**

சமுதாய அவலங்களைத் தீய்த்திடச் சுட்டெரிக்கும் சூரியனாய் வந்த கலைஞரின் வெள்ளிக்கிழமை புதினம் உணர்த்தும் விழிப்புணர்வுச் சிந்தனைகளை விளக்கும் கட்டுரை.

சுதாகர். வெ, **கலைஞரின் வெள்ளிக்கிழமை – ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 495–499.

விறுவிறுப்பு குன்றாமலும் வீறுமிக்க வருணனைகளுடனும் கலைஞரின் வெள்ளிக்கிழமை புதினம் படைக்கப்பட்டுள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

ஆறுமுகம். வ, **கலைஞரின் சுருளிமலை புதினத்தில் மொழிநடை அமைவு**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 500–506.

கலைஞரின் மொழிநடையை ஆராய்வதன் மூலம் அவரின் இலக்கியத் திறனையும், அவர் காலத்திய மொழியின் வரலாற்றையும் கண்டு விளக்கும் கட்டுரை.

ஜோதிலட்சுமி. கே, **கலைஞரின் சுருளிமலைப் புதினத்தில் சமுதாயப் பார்வை**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 507–511.

கற்பு, விதவை மணம், மூட நம்பிக்கை ஒழிப்பு, கலப்பு மணம் போன்ற கருத்து நிலைகளைச் சமுதாயப் பார்வையாகக் கலைஞர் 'சுருளிமலை' புதினத்தில் வைத்துள்ளமையை இக்கட்டுரை கண்டு விளக்குகிறது.

சுமதி. க, **கலைஞரின் வெள்ளிக்கிழமை – ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக், 512–517.

பகுத்தறிவு என்பது நம் பண்பாடுகளுள் ஒன்றாக மாற வேண்டும் என்பதைக் கலைஞரின் வெள்ளிக்கிழமை புதினம் முன்வைக்கிறது என விளக்கும் கட்டுரை.

சேவியர். ச, **கலைஞரின் சுருளிமலை நாவலில் சமுதாயப் பதிவுகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 211–216.

'சுருளிமலை புதினத்தில்' கலைஞர் உணர்த்தும் மக்களின் உண்மை நிலை, மூடப்பழக்க வழக்க நிலை, வாழ்வியல் நிலை ஆகியவற்றைக் கண்டு விளக்கும் கட்டுரை.

ஜெய்னபாபேகம். பா, **சமுதாய நோக்கில் கலைஞரின் நாவல் – ஒரு மரம் பூத்தது**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 282–286.

கலைஞரின் ஒரு மரம் பூத்தது புதினத்தில் சமுதாய நோக்கு எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டு விளக்கும் கட்டுரை

திலகவதி.அ, **கலைஞரின் சுருளிமலையில் பெண்கள்–ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.51–58.

குறிக்கோளும் கொள்கைப் பிடிப்பும் கொண்ட தன்மானமுள்ள பிறர்நலன் விரும்பும் மாந்தர்களையும், தன் நலத்திற்காக எதையும் செய்யும் பொறாமை, வஞ்சனை எனும் தீய குணங்களின் உலகியல் பாத்திரங்களையும் கலைஞர் சுருளிமலைப் புதினத்தில் படைத்துள்ளமையை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

வரலாற்றுப் புதினங்கள்

வரதன். தி. வீ , **ரோமாபுரிப் பாண்டியன் – ஒரு திறனாய்வு,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.

சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் இரா. நாகுவின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

நாகு. இரா. கு, **கலைஞரின் ரோமாபுரிப் பாண்டியன்–ஒரு மதிப்பீடு**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக். 97–101.

ரோமாபுரிப் பாண்டியன் வெறுங்கதையன்று–வரலாற்றுப் பின்னணியில் கற்பனையின் துணைகொண்டு படைக்கப்பெற்ற வரலாற்றுச் சித்திரம் என்பதையும் கலைஞரின் கழக இலட்சியமே இப்புதின இலக்கியமாக உருவெடுத்துள்ளது என்பதையும் எடுத்து விளக்கும் கட்டுரை.

நூர்மைதீன்.வா.மு.அ, **கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, 1987.

கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் – வரலாற்றுப் புதினம் குறித்துத் திருச்சிராப்பள்ளி, ஜமால்முகமது கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் வி. சாத்தையன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

நூர்மைதீன். வா.மு.அ, **கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் – ஓர் ஆய்வு**, பர்வீன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, பெப்ருவரி 1988, பக். 162.

கலைஞரின் புதினங்கள் – ஓர் அறிமுகம்
தென்பாண்டிச் சிங்கம் – வரலாறும் பின்புலமும்
கதை நிகழ்ச்சியும் பின்னலும்
பாத்திரப் படைப்பு
மொழிநடை
உத்திமுறைகள்

ஆகிய இயல் பகுப்புகளைக் கொண்ட நூல்.

காண்டீபன்.இரா, **கலைஞர் மு. கருணாநிதியின் பொன்னர் – சங்கர் –ஓர் ஆய்வு**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, **1989.**

கலைஞரின் வரலாற்றுப் புதினமான பொன்னர் – சங்கர் குறித்துச் சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

துரை ஆறுமுகம். இராச, **கலைஞரின் பாயும் புலி பண்டாரக வன்னியன்– ஓர் ஆய்வு,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, **1990.**

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியனின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

மீனாட்சி முருகரத்தினம், **பொன்னர்–சங்கர்–ஒரு வாசகியின் பார்வை,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1998**, பக். **226–239.**

சுவையான கதைப்பின்னல், மனதில் தங்கும் பாத்திரப்படைப்பு, உலகளாவிய உணர்வுப் பொதுமை, வரலாற்று மீட்டுருவாக்கம் ஆகிய நான்கு தன்மைகள் கலைஞரின் பொன்னர் – சங்கர் புதினத்தில் அமைந்துள்ளமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

செல்லப்பன். கா, **கலைஞரின் பொன்னர்–சங்கர் கருப்பொருளும், கலைவடிவமும்**, கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1998**, பக். **240–245.**

வரலாறு படைக்கும் கலைஞரின் வரலாற்றுப் புதினமான பொன்னர் – சங்கரின் கட்டுக்கோப்பும் நடையும் அவரது வரலாற்று வாழ்வியல் தத்துவத்தின் கலை வடிவங்களாகக் காட்சியளிக்கின்றன என்பதைக் காணும் நோக்கில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை, பழமைத் தளத்தில் நிறுவப்பெற்ற புதிய உலகத்தின் புதினவகையில் கலைஞரின் பொன்னர் சங்கர் மக்கள் இலக்கியமாக மலர்ந்துள்ள தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஞானசேகரன். தே, **கலைஞரின் பாயும்புலி பண்டாரக வன்னியனில் சுந்தரலிங்கம்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1998**, பக்.**246–257.**

கலைஞரின் பாயும்புலி பண்டாரக வன்னியன் புதினத்தில் இடம்பெறும் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர் தளபதி சுந்தரலிங்கக் குடும்பனாரின் பாத்திரப் படைப்புத்திறம் குறித்தும், கதைக்காலமாகிய இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தின் சில வரலாற்றுக் குறிப்புக்களைச் சுட்டிக்காட்டியும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இராசேந்திரன். ம, **வரலாற்றுப் புதினத்தில் வாழும் காலமும் வரும் காலமும்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கடந்த கால வரலாற்றுச் செய்திகளுக்கு இரத்தமும் சதையும் கொடுத்து வாழ்கால அரசியல் பிரச்சினைகளையும் வாழ்க்கை முறைகளையும் மட்டுமன்றி வரும் காலத்தையும்கூடப் படிப்பவர் உணரும் வகையில் ரோமாபுரிப்பாண்டியன் புதினத்தைக் கலைஞர் படைத்திருக்கும் பாங்கைக் கண்டுவிளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கலைஞரன்பன், **தென்பாண்டிச்சிங்கம்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, **1999.**

தென்பாண்டிச்சிங்கம்–புதினத்தின் கதைப்பின்னலையும், நயம்பட எடுத்துச் சொல்லும் நடையழகையும், அதில் கொட்டிக்கிடக்கும் உவமைகளையும் காட்டிக் கலைஞரின் புதினப் படைப்பாற்றலை மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஞானசேகரன்.தே, **பாயும்புலி பண்டாரக வன்னியன்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை,1999.

தமிழர்களிடம் இனவுணர்வு குறைந்து, தற்காலத்தில் ஒருவருக்கு ஒருவர் மோதிக்கொள்வதைத் தவிர்த்து, அவர்களுக்குள் இன ஒற்றுமையை வளர்க்கவேண்டும் என்பதான தேவேந்திரர்–தேவர்– வன்னியர் ஒற்றுமையை ஒளிவிடச் செய்யும் நோக்கில் எழுதப்பட்டதே பாயும்புலி பண்டாரக வன்னியன் என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

மீனாட்சி முருகரத்தினம், **பொன்னர் சங்கர்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிடமுன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

சுவையான கதைப்பின்னல், மனதில் தங்கும் பாத்திரப் படைப்பு, உலகளாவிய உணர்வுப் பொதுமை ஆகிய மூன்று இயல்புகளும் கலைஞரின் பொன்னர்–சங்கர் புதினத்தில் அமைந்துள்ள பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மருததுரை. அரு, **கலைஞரின் நாட்டுப்புற வரலாற்று நாவல்,** கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.35–40.

அண்ணன்மார் கதை என்ற மக்கள் வடிவத்தை நாட்டுப்புற வரலாற்றுக் கதைப்பாடலைத் தன் நோக்கிற்காக எவ்வகையில் கலைஞர் பயன்படுத்திக்கொண்டு பொன்னர்–சங்கர் என்ற வரலாற்றுப் புதினத்தைப் படைத்துள்ளார் என்பதைக் காட்டும் கட்டுரை.

பழனிச்சாமி. கருவை, **கலைஞரின் மங்கல வாழ்த்து,** கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.100–105.

கம்பரின் மங்கலவாழ்த்துப் பாடலை, பொன்னர் சங்கர் புதினத்தின் அடுத்த பதிப்பில் சேர்க்கவேண்டும் என்பதற்கான காரணத்தைச் சொல்லும் கட்டுரை.

கல்பனா.எம், **கலைஞரின் வரலாற்று நாவல்கள் – ஓர் ஆய்வு,** முனைவர் பட்ட

ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, **2006.**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்காக முனைவர் ஜெ.டோரதி அவர்களை நெறியாளராகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

மஞ்சுளா. கு, **தென்பாண்டிச்சிங்கம் நடைநயம்,** புத்தா, சென்னை, முதற்பதிப்பு, **2006,** பக். **96.**

நடை ஒரு பொது அறிமுகம்
பின்னணியும் நடையும்
நடைக்கூறுகள்
நடை அழகியல்
கலைஞரின் மொழி ஆளுமை
ஆகிய இயல் பகுப்புகளில் அமைந்த ஆய்வுநூல்.

இராசேந்திரன். ம, **ரோமாபுரிப் பாண்டியனில் அரசியல் அலைகள்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008,** பக். **7–24.**

கலைஞர் அவர்களுக்குப் பிற அரசியல் கட்சிகளுடன் ஏற்பட்ட அரசியல், மொழி, சமயம் தொடர்பான பிரச்சினைகளும், உட்கட்சியில் பதவிஆசை துரோகம் ஆகியவற்றால் அவர் பெற்ற அனுபவங்களும் அரசியல் அலையாக ரோமாபுரிப் பாண்டியன் நாவலினூடே நுட்பமாக வெளிப்பட்டிருக்கும் பாங்கினைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நூர்மைதீன்.வா.மு.அ, **தென்பாண்டிச்சிங்கம்–வரலாற்றுக் கூறுகள்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008,** பக்.**115–132.**

கதை சொல்லும் முறையும் கதையின் கட்டுக்கோப்பும் பாத்திரப்படைப்பும் கதைக்கான பின்னணியில் கரைந்து வரலாற்றுணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இப்புதினத்தில் காணத்தகும் வரலாற்றுக் கூறுகளைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

சீனிச்சாமி. து, **கலைஞரின் தென்பாண்டிச் சிங்கமும் விடுதலை உணர்வும்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008,** பக்.**133–142.**

பல உட்குழப்பங்களுக்குப் பிறகு தமிழ் மக்களின் ஒருமித்த விடுதலைப் போராட்டம் வீரியம் பெற்று வருவதை இக்கட்டுரை படம்பிடித்துக் காட்டுகிறது.

பாலசுப்பிரமணியம். கு.வெ, **தென்பாண்டிச்சிங்கம் பாத்திரப்படைப்பு–ஒரு திறனாய்வு,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008,** பக். **143–154.**

தென்பாண்டிச் சிங்கத்தின் பாத்திரங்கள் என்றோ வரலாற்றில் இருந்து மறைந்து போனவை அல்ல, அவைகள் எப்போதும் இருக்கின்றன. ஊருக்கு

ஊர் ஆதப்பன்களும் வைரமுத்தன்களும் இன்னும் இருக்கிறார்கள். இவர்களை வாழவிடாது வதைக்கவென்றே உறங்காப்புலிகளும் உலவுகிறார்கள். இனங்கண்டு கொள்ள வேண்டியது தமிழினத்தின் கடமை என்பதை வலியுறுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வீராசாமி. தா.வே, **தென்பாண்டிச்சிங்கம் காட்டும் தன்மான ஒளி,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 2008, பக். 155–168.

வீழ்ச்சியை விளக்குவது வரலாற்றின் விளக்கவியலைச் சார்ந்து நிற்கும். ஆனால் கலைஞரின் படைப்போ அவ்வீழ்ச்சியினிடையே மிளிர்கின்ற வளர்ச்சிக் கூறுகளை நன்முத்துகளாக நல்கியுள்ளது என்பதைக் காட்டுகிறது இக்கட்டுரை.

சண்முகவேலன். இரா, **தென்பாண்டிச் சிங்கம்–நாவல் கட்டமைப்பு**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 169–200.

தென்பாண்டிச் சிங்கத்தின் நாவல் கட்டமைப்பு மரபுவழிப்பட்டதாகவும், சோதனைப் பாங்கானதாகவும் கதைமாந்தர் செயல் நாவலுக்குரியதாகவும் நாடக நாவலுக்குரியதாகவும் யாவற்றிற்கும் மேலாக வரலாற்று நாவலுக்குரியதாகவும் பலதரப்பட்ட உறுப்புகளின் ஓர் உயிராய் / ஒரு வடிவாய் அமைந்து விளங்கும் பாங்கை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

கருணாநிதி. அ, **பாயும்புலி பண்டாரக வன்னியன்–ஓர் இலக்கிய மதிப்பீடு**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 201–225.

கலைஞரின் அரசியல் உணர்வும், உண்மையைத்தேடும் உயர் உள்ளமும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றில் உள்ள அழியா ஆர்வமும் பாயும் புலி பண்டாரக வன்னியன் புதினத்தில் வெளிப்படும் பாங்கை எடுத்து விளக்குவதுடன், புதினத்தின் கதையமைப்பு, இயற்கை வருணனை புராணக்கதைகளின் பாதிப்பு, படைப்புத்திறன், உவமைத்திறன், பழமொழிகள், பாத்திரப்படைப்பு ஆகியவற்றை இலக்கிய நோக்கில் எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

செல்லப்பன்.கா, **கலைஞரின் பொன்னர் சங்கர்–கருப்பொருளும் கலைவடிவமும்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 227–236.

கலைஞரின் வரலாற்றுப் புதினமான பொன்னர் சங்கரின் கட்டுக்கோப்பும், நடையும் அவரது வரலாற்று வாழ்வியல் தத்துவத்தின் கலை வடிவங்களாகக் காட்சியளிப்பதைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பொன்னுசாமி.மு, **கலைஞரின் பொன்னர் சங்கர் நடைநயம்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 237–250.

கலைஞரின் பொன்னர் சங்கர் புதினத்தில் காணத்தகும்.

வட்டார வழக்கு நடை

வருணனன நடை

இலக்கிய வழக்கு நடை

அடுக்கு நடை

தொகுப்புரை நடை

அலங்கார நடை

ஆகிய மொழி நடைகளை இக்கட்டுரை கண்டு விளக்குகிறது.

கோவிந்தராசு. மா, **அரிமா நோக்கில் தென்பாண்டிச்சிங்கம்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.472–477 .

கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் என்னும் புதினம், தமிழ் வரலாற்றுப் புதினக்காட்டில் சிங்கமாய்க் கர்ச்சனை செய்வதைப் படம் பிடித்துக் காட்டும் கட்டுரை.

அண்ணாதுரை. ப, **கலைஞரின் பொன்னர் சங்கர் காட்டும் கொங்கு மக்களின் பழக்க வழக்கங்கள்**, கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.478–483

நட்பு, காதல், வீரம், கற்பு, தியாகம் ஆகியவற்றுடன் அக்கால மக்களின் ஏராளமான பண்பு நலன்களும் பொன்னர் சங்கர் புதினத்தில் பொதிந்து கிடப்பதைக் கண்டு விளக்கும் கட்டுரை.

இராசேந்திரன். சு, **கலைஞரின் தமிழ்மொழிப்பற்று,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.805–811.

கலைஞரின் தமிழ்மொழிப் பற்றும், தமிழ் இனப்பற்றும், அன்னிய மொழித்திணிப்பின் எதிர்ப்புக்குரலும் சேர்ந்த ஒட்டுமொத்த வெளிப்பாடே ரோமாபுரிப் பாண்டியன் என்னும் புதினம் என்பதைச் சொல்லும் கட்டுரை.

திருஞானபழனியம்மாள். வ, **கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டியன் புதினத்தில் அகத்திணை மரபுகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–I, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 241–246.

பழந்தமிழர் பின்பற்றிய அகத்திணை மரபுகள் கலைஞரின் ரோமாபுரிப் பாண்டியன் புதினத்தில் இடம் பெற்றுள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பிச்சையம்மாள், **நேற்றைய செய்தி இன்றைய வரலாறு,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 8–13.

கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' என்னும் புதினத்தில் காணத்தகும் வரலாற்று உண்மைகளையும், தமிழன் வீரத்தையும் செயற்பாட்டையும் விளக்கும் கட்டுரை.

முருகேசன். கி, **கலைஞர் மு. கருணாநிதியின் பாயும் புலி பண்டாரக வன்னியன் புதினத்தின் இலக்கியத் திறன்கள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 104–109.

நகைச்சுவை, அடுக்குத்தொடர், பழமொழி, வருணனை, உருவகம் போன்ற இலக்கியத் திறன்களைப் பாயும் புலி பண்டாரக வன்னியன் புதினத்தில் கலைஞர் கையாண்டுள்ளமையை எடுத்துவிளக்கும் கட்டுரை.

வாசுதேவன். முனைவர் கா, **கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் புதினத்தில் புலப்பாட்டு உத்தியும் உணர்வுப் பதிவும்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், – தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 135–139.

தென்பாண்டிச் சிங்கம் புதினத்தின் வழி கலைஞரின் புலப்பாட்டு உத்திகளையும் உணர்வுப் பதிவுகளையும் அடையாளப்படுத்திக் காட்டும் முயற்சி.

சாபிராபேகம். எஸ், **கலைஞரின் பொன்னர்–சங்கர் நாவல் – ஒரு பார்வை**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 193–199.

கலைஞரின் 'பொன்னர் சங்கர்' புதினத்தில் காணத்தகும் கதைப்பின்னற் சிறப்பு, வரலாற்றுச் சிறப்பு, கதைக்கரு, பாத்திரங்கள், சமுதாயப் பிரச்சினைகள், இலக்கியக் கருத்துக்கள் ஆகியவற்றை விளக்கும் கட்டுரை.

தமிழ்ச்செல்வி. எம்.பி, **தென்பாண்டிச்சிங்கம்–வரலாற்று நாவலில் பாத்திரப்படைப்பு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு 2009, பக். 21–29.

தென்பாண்டிச்சிங்கம் புதினத்தில் கற்போர் மனம் கொள்ளுமாறு கதைமாந்தர்களைப் படைத்தளித்துள்ள கலைஞரின் திறன், பல்வேறு உணர்ச்சிகளைப் பாத்திரப்படைப்பில் ஏற்றியுள்ள பாங்கு போற்றுதலுக்குரியது என்பதை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மருதநாயகம். இரா, **படைப்பு நோக்கில் பொன்னர் சங்கர்–ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2008, பக்.30–36.

பொன்னர்–சங்கர் என்னும் வேளாளர் குல வீரர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள கலைஞரின் பொன்னர்–சங்கர் புதினத்தில் இடம்பெறும் பாத்திரப்படைப்புகளின் சிறப்பை வெளிப்படுத்தும் கட்டுரை.

சிறுகதைகள்

மெய்கண்டார். தி.வ, **புதிய பார்வையில் கலைஞரின் நளாயினி,** முரசொலி பொங்கல் மலர், முரசொலி, சென்னை, **1973.**

உத்தம பத்தினி என உலகம் போற்றும் நளாயினியின் உள்ளம் கொந்தளிக்கும் பாங்கைக் காட்டும் கலைஞரின் 'நளாயினி' சிறுகதை குறித்த ஆய்வு.

மங்களமுருகேசன், **கலைஞரின் சந்தனக்கிண்ணம்,** கழகக்குரல், ஆண்டுமலர், சி.சிட்டிபாபு, சென்னை **1975, பக்.29–30.**

திராவிடநாடு ஏட்டில் தி.மு.கவின் மூன்றாவது ஆண்டு மலரில் **1952–இல்** கலைஞர் எழுதிய சந்தனக்கிண்ணம் என்னும் சிறுகதை – இலட்சிய வெறிகொண்ட இளைஞரின் வாழ்வில் நடந்த கதை என்பதைச் சொல்லும் ஆய்வுக் கட்டுரை.

சாம்பமூர்த்தி. ச, **கலைஞரின் சிறுகதைகள்**, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, **1984.**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

சாம்பசிவன். ச, **கலைஞர் மு. கருணாநிதியின் சிறுகதைகள்**, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, **1984.**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

சாம்பமூர்த்தி.ச, **கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர். கலைஞர் மணிவிழாமலர்க்குழு, சென்னை, ஜூன் **1984**, பக். **225–233.**

கலைஞரின் கொள்கைகள் அவர்தம் சிறுகதைகளில் பல்வேறு நிலைகளில் வெளிப்படுவதை இக்கட்டுரை அறிமுகம் செய்கிறது.

சாதிக்.சே, **தேனலைகள்...,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர். கலைஞர் மணிவிழாமலர்க்குழு, சென்னை, ஜூன் **1984. பக். 208–216.**

இக்கட்டுரை எதுகை மோனையோடு அமைந்துள்ள தேனலைகள் என்னும் சிறிய கவிதை நடைக் கதைகளின் சிறப்பை எடுத்து விளக்குகிறது.

சாம்பமூர்த்தி. ச, **கலைஞரின் சிறுகதைகள்**, கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்), பாரதி பதிப்பகம், சென்னை, **1989, பக்.106–111.**

கலை சமுதாயத்திற்காகப் பயன்படுவதாகவும் மக்களின் அறியாமையை நீக்கி அவர்தம் வாழ்வை மேம்படச் செய்வதாகவும் அமைதல் வேண்டும் என்ற குறிக்கோள் நிலையில் கலைஞரின் சிறுகதைகள் அமைந்திருக்கும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

ஆனந்தன் பிள்ளை.சு, **கலைஞரின் சிறுகதைகளில் சமுகப் பங்களிப்பு,** கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.267–277.

அறிவும் உணர்வும், கருத்தும் கற்பனையும், பகுத்தறிவும் கலைத்திறனும், சொல்வன்மையும் எழுத்துவன்மையும், இலக்கியப் பண்பும், அரசியல் ஆண்மையும், சிந்தனை விளைவும் செயல் திறனும் கலைஞரின் சிறுகதைகளில் சிந்தனைக்களங்களாக ஒளி வீசுகின்ற பாங்கினைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஈசுவரபிள்ளை. தா, **கலைஞரின் சிறுகதைகள் காட்டும் சமுதாய அவலங்கள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக். 278–287.

சமயம், பொருளாதாரம், சமுதாயம், அரசியல், பண்பாட்டு மதிப்புச் சிதைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் காணப்பெறும் அவலங்களைத் தம் சிறுகதைகளில் சுட்டிக்காட்டியும் அவற்றின் தீய விளைவுகளை விளக்கியும், இவற்றால் சமுதாய ஒழுங்கு சிதைவதை உணர்த்தியும் படிப்போர் உள்ளத்தைப் பண்படுத்திச் சிறந்ததொரு சமுதாயம் படைக்கக் கலைஞர் முயன்றுள்ள திறனை அவரது 37 சிறுகதைகளின் துணைகொண்டு எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பாலசுப்ரமணியன். மு.பி, **கலைஞரின் சிறுகதைகள்–ஓர் ஆய்வு,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர். திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, 1999.

பிரச்சாரம் சிறக்க மட்டுமன்றி, கதையம்சம் சிறக்கவும் கதைவடிக்க இயலும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கலைஞரின் சிறுகதைகள் அமைந்திருக்கும் பாங்கையும் கலைஞரின் படைப்பாற்றலை அறிந்துகொள்ள உதவும் அளவுகோலாக அவரது சிறுகதைகள் ஒளிர்கின்ற தன்மையையும் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பாலசுப்பிரமணியன். மு.பி, **கலைஞரின் கதைகளில் உணர்த்துமுறை உத்திகள்,** கலைஞர் பவளவிழா மலர், முரசொலி, சென்னை, 1999, பக்.109–111.

கலைஞரின் கதைகளில் பல்வேறு உணர்த்து முறைக்கூறுகள் இடம் பெற்றுள்ளதைக் கண்டு விளக்கும் கட்டுரை.

முத்துஇலக்குமி, **கலைஞரின் கதைத்திறன் (சிறுகதைத் தொகுப்பு),** கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.59–64.

இலக்கிய உலகில் சிறுகதைக்கு ஓரிடம் உண்டு என்றால் கலைஞரின் சிறுகதைக்குத் தனியிடம் உண்டு என்பதை நிறுவும் கட்டுரை.

கனகசுந்தரம்.வெ, **கலைஞரின் சிறுகதைகள்–இலக்கிய மதிப்பீடு,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 335–352.

மொழிப்பற்று, சமுதாயச் சீர்த்திருத்தம், தனிமனித மேம்பாடு என்னும் குறிக்கோள்களின் வெளிப்பாடாகக் கலைஞரின் சிறுகதைகள் அமைந்திருக்கும் பாங்கினைக்கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அருள்ராஜ். முனைவர் வே. சா, **சமுதாய நோக்கில் கலைஞரின் சிறுகதைகள்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 518–522.

சமுதாயத்தில் காணப்பெறும் சமயம், சாதி, தீண்டாமை, பொருந்தா மணம், அரசியல், பொருளாதாரம், ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படும் அவலங்களைக் கலைஞரின் சிறுகதைகள் காட்டி நிற்பதை விளக்கும் கட்டுரை.

சுமதி. பேராசிரியர், **கலைஞர் சிறுகதையில் பெண்ணின் நிலை,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 523–529.

சமுதாயத்தில் ஏழ்மை காரணமாக ஏற்படும் அவலங்கள் மாற வேண்டும்; இருள் நிறைந்த அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்ற அனைவரும் முன்வர வேண்டும் என்பதைக் கலைஞர் சிறுகதைகள் வெளிப்படுத்துவதை விளக்கும் கட்டுரை.

சந்திரா. முனைவர் யாழ். சு, **கலைஞர் சிறுகதைகள்: படைப்பும் தொன்மமும்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 530–534.

தொன்மங்களைக் கலைஞர் தம் சிறுகதைகளில் கையாளுவது, தாம் சார்ந்துள்ள திராவிட இயக்கக் கொள்கை விளக்கத்திற்காகத்தான் என்பதை ஆய்ந்து வெளிப்படுத்தும் கட்டுரை.

இராமன். முனைவர் இரா, **கலைஞரின் சிறுகதையாக்கத்தில் நவீன உத்திகள் (நளாயினி சிறுகதையை முன்வைத்து),** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 535–541.

பெண்ணின் வாழ்வியல் நியாயங்களையும், உரிமைகளையும் அவற்றுக்கான தேவைகளையும் உணர்ந்து நளாயினியைப் புதுமைப் பெண்ணாகக் கலைஞர் மீட்டுருவாக்கம் செய்துள்ளமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

வசந்தி. ந.கு, **கலைஞர் சிறுகதைகள் – ஓர் ஆய்வு,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 542–555.

இலக்கியக் கொள்கைகளின் வழி நின்று கலைஞரின் சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்தும் கட்டுரை.

சகுந்தலா. எ, **கலைஞரின் சிறுகதைகளில் பாத்திரப் படைப்பு,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை,

முதற்பதிப்பு, மே 2008, பக். 556–561.

கலைஞரின் 16 சிறுகதைகளில் பாத்திரப்படைப்பு முறை குறித்து விளக்கும் கட்டுரை.

கண்ணாத்தாள். கே, **கலைஞரின் சிறுகதைகளில் பகுத்தறிவுச் சிந்தனை**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 562–569.

இலக்கியத்தின் வழிச் சமூகம் ஏற்றம் பெறும் என்ற நிலையில் கலைஞரின் சிறுகதைகளில் காணப்படும் சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகளை விளக்கும் கட்டுரை.

ஜீவானந்தம். டாக்டர் இராம. **கலைஞரின் 'சபலம்' சிறுகதையில் உளவியல்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 570–575.

சபலம் சிறுகதைப் பாத்திரங்களும் கதையமைப்பும் உணர்வுகளுடன் ஒன்றிச் செல்கின்ற பாங்கை இக்கட்டுரை கண்டு விளக்குகிறது.

மங்கையர்க்கரசி. சீ, **கலைஞரின் நளாயினி காட்டும் பெண்கள்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 576–580.

கலைஞர் படைத்துக் காட்டும் பெண்கள் மரபின் சுமையிலிருந்து விடுபட்ட – விழிப்பு பெற்ற புரட்சிப் பெண்கள் என்பதைச் சொல்லும் கட்டுரை.

கருணாசேகர். முனைவர், **கலைஞரின் அரும்பு – ஓர் அமைப்பியல் நோக்கு**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 581–586.

கலைஞரின் அரும்பு செறிவும் அர்த்தமும் உணர்வும் திறமும் கொண்ட அற்புதப் படைப்பு, கலைஞரின் எழுத்து வலிமையை, வளமையை உளம்படக் காட்டும் உயரிய படைப்பு என்பதை விளக்கும் கட்டுரை.

கலையரசி. ஆர், **டாக்டர் கலைஞரின் அரும்பு சிறுகதை – ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 587–591.

ஒரு குடும்பத்திற்குள் நடக்கும் சூழ்நிலைகளை மையப்படுத்திப் புனையப்பட்டுள்ள இச்சிறுகதையின் வழி மனித நேயம் மிக்க மனிதர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் கட்டுரை.

சிர்ஷா. தா.அ, **கலைஞர் சிறுகதைகளில் முற்போக்குச் சிந்தனைகள்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 592–602.

ஏழை–எளிய மக்களுக்காகச் சிந்திக்கும் கலைஞரின் முற்போக்குப் பார்வையை அவரது சிறுகதைகளின் துணை கொண்டு விளக்கும் கட்டுரை.

பானுமதி. சு, **கலைஞர் சிறுகதைகள் வெளிப்படுத்தும் பகுத்தறிவுச் சிந்தனைகள்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 603–607.

எல்லாம் அவன் செயல் என்று சோம்பிக் கிடப்பவர்களைத் தட்டி எழுப்பி, தடைக்கற்களாக இருப்பவற்றையும் தகர்த்திட்டால் பகுத்தறிவுக்கதிர் அவர்களின் அறிவுக்கண்ணைத் திறக்கும் என்னும் கலைஞரின் கருத்து நிலையை அவரது சிறுகதைகளின் துணைகொண்டு விளக்கும் நூல்.

கானமூர்த்தி. சு, **சாரப்பள்ளம் சாமுண்டி – ஓர் ஆய்வு,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 608–623.

சாரப்பள்ளம் சாமுண்டி மனதில் அழியாத இன்பத்தையும், கலை உணர்வையும், தியாகத்தையும், தேசப்பற்றையும், ஒற்றுமையையும் தரும் சிறுகதை என்பதைக் காட்டும் கட்டுரை.

சூடாமணி.சு, **கலைஞர் மு.கருணாநிதியின் பதினாறு கதைகளிலே சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஆகஸ்ட் 2008. பக். 127.

பதினாறு கதையினிலே சிறுகதைகளில் வெளிப்படும் கலைஞரின் சமுதாயச்சிந்தனைகளைக் கண்டு விளங்கும் இவ்வாய்வு,
தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்
திராவிட இயக்க இலக்கியப்பணிகள்,
கலைஞரின் வாழ்க்கை வரலாறு,
கலைஞரின் இலக்கியப் பணி
கலைஞர் மு. கருணாநிதியின் பதினாறு கதைகளிலே சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்
ஆகிய இயல் பகுப்புகளைக் கொண்டுள்ளது.

அருணாசலம். மு, **கலைஞரின் 16 கதையினிலே சில பார்வைகள்,** கலைஞர். மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை டிசம்பர் 2008, பக்.22–35.

எதிர்பாராத முடிவுகள் உடைய கதைகள், புராண மூட நம்பிக்கை எதிர்ப்புக் கதைகள், சமூக விமர்சனக் கதைகள், உளவியல் நுட்பக் கதைகள் என்றவாறு அமையும் கலைஞரின் 16 சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்தி எழுதப்பட்ட கட்டுரை.

கென்னடி. செ, **கலைஞர் சிறுகதைகளில் சமூக நோக்கு,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 165–169.

சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் அவலங்களை எடுத்துக்காட்டி அவற்றைக் களையும் வழிமுறைகளைச் சொல்லுவதாகக் கலைஞரின் சிறுகதைகள் அமைந்து விளங்கும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

சித்ரா. சு, **கலைஞர் படைப்புகளில் பன்முகப் பார்வை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 184–187.

கலைஞரின் 16 கதையினிலே – சிறுகதைத் தொகுப்பில் காணத்தகும் கலைஞரின் பன்முகப் பார்வையை எடுத்து விளக்கும் கட்டுரை.

செந்தமிழ்ச்செல்வம். செ, **கலைஞரின் காந்திதேசம் சிறுகதையில் சமுதாயச் சிந்தனைகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 207–210.

கலைஞரின் 'காந்திதேசம்' சிறுகதை முன்வைக்கும் சமுதாயக் கருத்துகளை எடுத்து விளக்கும் கட்டுரை.

நல்லமுத்து. ரெ, **கலைஞர் கருணாநிதியின் குப்பைத் தொட்டி சிறுகதையில் சமதர்மச் சிந்தனை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 247–253.

மனிதன் மனிதனாகச் செயற்பட்டால் சமுதாயத்தில் சீர்திருத்தம் மிளிரும் என்பதைச் சொல்வதாகக் கலைஞரின் 'குப்பைத் தொட்டி' சிறுகதை அமைந்துள்ளதை எடுத்து விளக்கும் கட்டுரை.

பென்சமின் ஆரோன் டைட்டஸ். ஜா, **கலைஞர் சிறுகதைகள் – சமுதாய நோக்கும் திருக்குறள் ஒப்பீடும்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 38–43.

வட்டமிட்டுப் பறக்கும் கழுகுபோல் சுற்றிக்கொண்டிருக்கும் நம்பிக்கையின்மை, போலியான வாழ்க்கை, கலாச்சாரச் சீர்கேடுகள் ஆகியனவற்றைச் சீராக்கி வாழ்வினை வளமாக்கச் சிறுகதைகளின் வழி கலைஞர் மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துக்காட்டும் கட்டுரை.

முத்துலெட்சுமி. கு, **கலைஞரின் படைப்புகளில் பெண்ணியம்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 95–98.

அபாக்ய சிந்தாமணி, செத்தவன் கதை ஆகிய சிறுகதைகளில் பெண்ணின் மீதே குற்றம் சுமத்தும் ஆணாதிக்க சமுதாயத்தைக் கலைஞர் காட்டியுள்ள திறத்தைச் சொல்லும் கட்டுரை.

முரளிகிருட்டிணன். இரா, **கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகளில் சமுதாய அவலங்கள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 99–103.

சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் மடமை அழுக்குகளைக் களையக் கலைஞர் தம் சிறுகதைகளின் வழி முற்பட்டிருக்கும் பாங்கினைச் சொல்லும் கட்டுரை.

ஜஸ்டின் ஜீசஸ். இ, **கலைஞரின் சிறுகதைகள் காட்டும் சமுதாய அவலங்கள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 235–240.

சமுதாய, பொருளாதார, சமய மதிப்பு அடிப்படையில் கலைஞரின் சிறுகதைகளில் காணப்பெறும் சமுதாய அவலங்களை விளக்கும் கட்டுரை.

மாசிலாமணி.பா, **கலைஞரின் கவிதைநடைச் சிறுகதைகள்,** கலைஞர் படைப்பிலக்கியப்பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 12–20.

11 சிறுகதைகளின் தொகுப்பாக அமையும் 'தேனலைகள்' என்னும் சிறுகதைத்தொகுப்பு சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையிலும் கருத்துச் செறிவூட்டும் வகையிலும் அமைவதுடன் இலக்கியப் படைப்பில் ஒரு புதிய உத்தி என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வெங்கடேசன்.சு, **கலைஞரின் நடுத்தெரு நாராயணி – பகுத்தறிவுப் பண்பாட்டின் கலகக்குரல்,** கலைஞரின் படைப்பிலக்கியப்பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 101–108.

தன்மதிப்பு, பகுத்தறிவு, இனஉணர்வு ஆகியவற்றை மறந்துவிட்டு தனக்குரிய அடையாளத்தையே அறிய முடியாதபடி, புராண மாயைக்குள் புதைந்துவிட்ட தமிழினத்திற்கு மானமும் அறிவும் ஊட்டுவதற்கான பணியைக் கலைஞர் அவர்கள் நடுத்தெரு நாராயணி என்னும் கதைமூலமாக ஆற்றியுள்ளமையை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்குலாப். சா, **கலைஞரின் சிறுகதைகளில் சீர்திருத்தக் கருத்துக்கள்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 119–127.

மூடத்தனத்தை எதிர்த்தும், பகுத்தறிவு, சுயமரியாதை எண்ணங்களை வலியுறுத்தியும் கலைஞரின் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ள பாங்கினைச் சுட்டிக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

சீனிவாசன்.கே, **கலைஞரின் குட்டிக்கதைகள்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 182–187.

கலைஞரின் குட்டிக்கதைகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் சமயம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஆகியனவற்றின் அடிப்படையில் காணப்படும் சமூக அவலங்களைச் சுட்டிக்காட்டுவதோடு படிப்போர் உள்ளத்தைப் பண்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ள பாங்கை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ரமணி.டே, **கலைஞரின் சுமந்தவள்–ஒரு திறனாய்வு,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.230–237.

கலைஞரின் '16 கதையினிலே' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் சுமந்தவள் என்னும் சிறுகதையின் மொழிநடை மிக இயல்பாக, சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைந்துள்ள பாங்கையும் சிறுகதைப் போக்கில் ஒலிக்குறிப்புச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள தன்மையையும் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பவானி.கோ, **கலைஞரின் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009 பக். 305–308.

தமிழ்ச் சமுதாயத்தின் அவலத்தைத் தம் சிறுகதைகளில் கலைஞர் வெளிப்படுத்தியுள்ள பாங்கை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

தமிழ்வாணன், **கலைஞர்–ஒரு சிறுகதை எழுத்தாளர்,** கலைஞர் 51, பிரபு பதிப்பகம், சென்னை, ..., பக். 84–85.

தன் கொள்கைகளின் வழிநின்று கலைஞர் எழுதும் சிறுகதைகளின் நேர்த்தி குறித்துப் பேசும் கட்டுரை.

நாடகங்கள்

குமாரவேலன். இரா, **கலைஞரின் இரத்தக்கண்ணீர்,** கழகக்குரல், பொங்கல் மலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975. பக்.23–24.

கலைஞரின் புகழ் மகுடத்தில் புதுமணியாக ஒளி வீசும் இரத்தக்கண்ணீர் நாடகத்தினை ஆய்வுக்குட்படுத்தும் கட்டுரை.

மெய்கண்டார். தி.வ. **கலைஞரின் பலிபீடம் நோக்கி ஒரு புதிய பார்வை,** முரசொலி பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1976, பக்.11.

புரட்சிகரமான சிந்தனையும் புதுமையான நோக்கமும் கொண்ட கலைஞரின் பலிபீடம் நாடகம் குறித்த திறனாய்வு.

இராமனுஜம். அரங்க, **கலைஞரின் நாடகங்கள் – ஓர் ஆய்வு,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1979.

கலைஞரின் நாடகங்கள் குறித்துச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசனின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

பாரிஜாதம். இரா, **கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

கலைஞரின் சிலப்பதிகார நாடகக் காப்பியம் குறித்துச் சென்னை, மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் மெ. சுந்தரம் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

சரளா ராஜகோபாலன், **கலைஞரின் சிலப்பதிகாரம் – ஓர் ஆய்வு**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன், **1984**, பக். **135–148.**

பழமையைப் பக்குவமாகப் பார்க்கும் பதமான உணர்வும், புதுமையை வரவேற்கும் துணிவும் உடைய சிந்தனையாளராகச் 'சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம்' கலைஞரை அடையாளம் காட்டும் பாங்கை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சுந்தரம்.மெ, **நாடகமும் சமுதாயமும்,** கலைஞர் மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 1984, பக்.23–24.

தமிழ் இலக்கியங்களின் பெருமை, மொழிப்பார்வை, இனஉணர்வு, அரசியல்–பொருளியல் சிந்தனைகளைக் கலைஞர் தம் நாடகங்களில் வெளிப்படுத்தியுள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கோமல் சுவாமிநாதன். **கலைஞரும் நாடகப்படைப்பும்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்), பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, **1989**, பக்.**40–50.**

கலைஞரின் நாடகங்கள் அரசியல் ஆயுதங்கள், கலைஞருக்கு நாடகம் எழுதுவதென்பது ஓர் அரசியல் நடவடிக்கை என்பதை எடுத்து விளக்கும் கட்டுரை.

சரளா இராசகோபாலன், **கலைஞரின் சிலப்பதிகார மீட்டுருவாக்கம்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1998**, பக்.**177–187.**

தமிழரின் தன்னிகரற்ற காப்பியமாக, முத்தமிழ்க் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தை இக்காலத்திற்கு ஏற்றவாறு சிறந்த முறையில் கலைஞர் மீட்டுருவாக்கம் செய்துள்ளமையைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராமசாமி. பேராசிரியர் அ, **கலைஞர் தமிழ்நாட்டு ஷேக்ஸ்பியர்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **690–693.**

நாடகம் பார்க்க வந்திருப்போரை எடுத்த எடுப்பிலேயே கவர்ந்து இழுக்க வேண்டும்; அப்படி இழுத்துவிட்டால், நாடகம் வெற்றி தான். இந்தக் கலையிலே கைதேர்ந்தவர் கலைஞர் என்பதைச் சொல்லும் கட்டுரை.

தமிழ்க்குடிமகன், **நாடுபோற்றும் நாடகக்கலைஞர்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை,**1999.**

கலைஞரின் நச்சுக்கோப்பை–1943 தூக்குமேடை –1956, பரப்பிரம்மம்–1953, மகான் பெற்ற மகான் –1953, உதயசூரியன் –1957, மணிமகுடம்–1962, பரதாயணம், சாக்ரடீஸ், அனார்கலி, சேரன் செங்குட்டுவன், திருவாளர் தேசியம்பிள்ளை, காகிதப்பூ–1967, நானே அறிவாளி–1971, புனிதராஜ்ஜியம், 1979. ஆகிய நாடகங்களிலிருந்து சில காட்சிகளை எடுத்துக்காட்டி அதில் கலைஞரின் திறமை வெளிப்படும் பாங்கை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பரமத்தி சண்முகம், **கலைஞரின் நாடகங்கள்–திரைப்படங்கள்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் நாடகம் மற்றும் திரைப்படைப்புகள் அனைத்தும் ஒரு மாபெரும் இலட்சிய வெறியின் குறிக்கோளை மையமாக வைத்து, அவரது இதயத்தின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய சங்க நாடகம் என்பதைக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சரளா இராசகோபாலன், **கலைஞரின் சிலப்பதிகார மீட்டுருவாக்கம்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை இக்காலத்திற்கு ஏற்றவாறு சிறந்த முறையில் கலைஞர் மீட்டுருவாக்கம் செய்யதுள்ளமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

ராஜேந்திரன். பி.எல், **நாடக ஆசிரியர் கலைஞர்**, சங்கீதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் 1999, பக்.96.

நாடக உலகில் கலைஞர் அவர்கள் அந்த நாள் முதல் இந்தநாள் வரை வகித்துவரும் பங்களிப்பையும், கலைஞர் அவர்களால் தமிழ் நாடக உலகம் அடைந்துள்ள பெருமைகளையும் குறிப்பிடும் நூல்.

வலம்புரிஜான், **செம்மல் திருத்திய சிலம்பு,** முரசொலி– பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 92.

காலத்தின் தேவைக்கேற்ப, குறிக்கோள் வழிநின்று கலைஞர் சிலப்பதிகாரத்தில் செய்திட்ட திருத்தங்கள் குறித்த கட்டுரை.

பாலசுப்பிரமணியம்.மு.பி, **கலைஞர் நாடகங்களின் போக்கும் நோக்கும்**, தலைவர் கலைஞர் 82–வது பிறந்தநாள் மலர், முரசொலி, சென்னை, 2005, பக்.108–109.

சாதிசமயச் சூறைக்காற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றவேண்டும் என்பது கலைஞரின் நாடகங்களின் போக்கும் நோக்குமாக அமைந்திருக்கும் தன்மையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

நாகநாதன். மு, **காலத்தை வெல்லும் கலைஞரின் படைப்புகள்,** தலைவர் கலைஞர் 82–வது பிறந்தநாள் மலர், முரசொலி, சென்னை, 2005, பக்.72–73.

நாடகத்துறை, திரைப்படத்துறை, இலக்கிய–இலக்கணத் துறை

ஆகியவற்றிற்குப் புகழ்மிக்க படைப்புகளைக் கலைஞர் அளித்துள்ள பாங்கை விளக்கும் கட்டுரை.

கவிதா.இரா., **இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் கலைஞரின் சிலப்பதிகார நாடக ஒப்பீடும்,** நாடகக் கலையும் திரைத்தமிழும், தமிழய்யா வெளியீட்டகம், திருவையாறு, முதல் பதிப்பு, ஜீலை 2006, பக்.54–59.

சிலப்பதிகார நாடகக் காப்பியக் கதைப் போக்கில் கலைஞர் செய்துள்ள மாற்றங்களை எடுத்துக்காட்டிக் கலைஞர் செய்த மாற்றங்களுக்கான காரணங்களைக் கண்டு விளக்கும் கட்டுரை.

சிவப்பிரியா.சு. **சாக்ரடீஸ் நாடகத்தில் சமூக விழிப்புணர்வு,** நாடகக்கலையும் திரைத்தமிழும், தமிழய்யா வெளியீட்டகம், திருவையாறு, முதல்பதிப்பு, ஜூலை 2006. பக்.257–260.

கலைஞரின் கைவண்ணத்தில் உருவான சாக்ரடீஸ் நாடகம் தமிழ்ச் சமூகத்தின் விழிப்புணர்வுக்கு வழங்கிய கருத்துக் கொடையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

மாசிலாமணி. பா. **கலைஞர் ஒரு நாடகத்தமிழறிஞர்,** நாடகக்கலையும் திரைத்தமிழும், தமிழய்யா வெளியீட்டகம், திருவையாறு, முதல் பதிப்பு, ஜூலை 2006. பக்.399–404.

உயிர் எனப் போற்றும் இலக்கியம் ஒன்றே எனக்கு உயிர் மூச்சு என்னும் இலக்கோடு எழுத்துலகில் பயணித்த கலைஞர் அவர்களின் நாடகங்கள் குறித்த அறிமுகக் கட்டுரை.

சுபத்ரா.பொ, **கலைஞரின் மணிமகுடம் நாடகத்தில் சமூகச் சிந்தனைகள்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007, பக். 75.

மணிமகுடம் நாடகத்தில் காணப்படும் கலைஞரின் சமுதாயச் சிந்தனைகளைத் தொகுத்துத்தரும் இவ்வாய்வு, கலைஞரின் வாழ்க்கை வரலாறு, கலைஞரின் மணிமகுடம் நாடகத்தில் சமூகச் சிந்தனைகள் என்னும் இயல்களில் எழுதப்பட்டுள்ளது.

முருகேச பாண்டியன். ந, **திராவிட இயக்க வளர்ச்சியில் கலைஞரின் நாடகங்கள்,** வ.உ.சி பதிப்பகம், சென்னை, 2007, பக். 160.

சமுக விழிப்புணர்ச்சி, மூடநம்பிக்கைக்கு எதிரான போக்கு, அரசியல் அமர்க்களம் ஆகியனவற்றின் பின்புலத்தில் திராவிட இயக்க வளர்ச்சி வரலாற்றில் கலைஞரின் நாடகங்கள் பெறும் இடத்தை மதிப்பிடும் நூல்.

கற்பகம். மா, **கலைஞர் நாடகங்கள்–கருத்தும் கட்டுக்கோப்பும்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 283–294.

கருத்து மற்றும் கட்டுக்கோப்பு காரணமாகக் கற்போர் கருத்தைக் கவர்ந்து அவர்தம் சிந்தனையைத் தூண்டுவதாக அமைவன கலைஞர் நாடகங்கள் என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நாராயணசாமி. ஆ, **கலைஞரின் நாடகங்களில் சமுதாய சீர்திருத்தம்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 375–392.

சீர்திருத்தம் தேவைப்பட்ட மக்களுக்காக, சீர்திருத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டவையே கலைஞரின் நாடகங்கள் என்பதை எடுத்து விளக்கும் கட்டுரை.

மாரிமுத்து. வீ, **கலைஞர் தந்த சிலம்பு,** கலைஞர் படைப்புலகம் –ஆய்வுக்கோவை. அறிஞர் பேரவை, சென்னை–முதற்பதிப்பு, மே 2008.

கலைஞரின் சிலப்பதிகாரம்–நாடகக் காப்பியத்தின் தனிச்சிறப்புகளை விரிவாக ஆராய்ந்து விளக்கும் கட்டுரை.

அறிவுநம்பி. அ, **கலைஞரின் பூம்புகார்– ஒரு பார்வை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.443 – 446

பண்பாட்டைக் காத்தல், மரபும் மாற்றமும் என்னும் தலைப்புகளில் கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம் பெற்றுள்ள மாற்றங்களைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மல்லிகா. முனைவர் பா, **கலைஞரின் பூம்புகார் – நாடகச் சிறப்புகள்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.447–453 .

தமிழின உணர்வு மேலோங்கும் முகமாகக் காதலையும், வீரத்தையும் விளக்குவதுடன், தமிழ் மொழியின் அழகையும், ஆழத்தையும் காட்டுவதாகவும் கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம் அமைந்துள்ளமையைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சுலோசனா. ந. **கலைஞரின் நாடகம் உள்ளிட்ட திரைப்படங்களில் பெரியாரியத் தாக்கம்,** கலைஞர் படைப்புலகம்–ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு. மே, 2008, பக். 454–459.

கலைஞரின் நச்சுக்கோப்பை, தூக்குமேடை, மணிமகுடம், மகான் பெற்ற மகன் ஆகிய நாடகங்களையும், பராசக்தி, நாம், திரும்பிப்பார், மனோகரா ஆகிய திரைப்படங்களையும் ஆய்வுக்குட்படுத்தி, அவற்றில் காணப்படும் பெரியாரின் கடவுள் மறுப்புச் சிந்தனை, பழமை மறுப்புச் சிந்தனை, புதுமைக் கருத்துகளைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கௌசல்யா, முனைவர் எஸ். **கலைஞரின் இரு நாடகங்கள் – ஓர் ஒப்பாய்வு,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.460–465

மகான் பெற்ற மகன், தூக்குமேடை ஆகிய இருநாடகங்களில் இடம்பெறும் நாடக உத்திகளையும், கலைஞரின் சமூகச் சிந்தனைகளையும் கண்டு விளக்கும் கட்டுரை.

ராமசாமி. மு, **நெருப்பாற்றைக் கடந்த நாடகக்காரர்**, இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, 2008, பக். 90–92.

உலகின் மிகச்சிறந்த நாடகங்களில் காட்டப்பட்டிருப்பதுபோல் மனித உணர்வுகளின் மோதல்களைக் கலைஞரின் நாடகங்கள் ஆழமாகச் சித்திரிக்கும் பாங்கை எடுத்துச்சொல்லும் கட்டுரை.

பிரின்ஸ். அ, **டாக்டர் கலைஞரின் சிலப்பதிகார நாடகக்காப்பியம்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 21–27.

கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியத்தின் சிறப்புகளைப் பேசும் கட்டுரை.

விஜயா. ந, **கலைஞரும் கன்னித்தமிழும்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 152–157.

படிப்பவர்களுக்குத் தொடக்கம் முதல் இறுதிவரை விறுவிறுப்பையும், புத்துணர்வையும் அளிப்பதோடு சங்கம் மருவிய காலத்திற்கே அவர்கள் சென்று வந்த மனநிலையைக் கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம் ஏற்படுத்துவதைச் சொல்லும் கட்டுரை.

அருள் மைக்கேல் செல்வி.சி, **கலைஞரின் நச்சுக்கோப்பை காட்டும் சமுதாய அவலங்களும் சீர்திருத்தச் சிந்தனைகளும்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள். தொகுதி.1. வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009 பக்.16–21.

கலைஞரின் நச்சுக்கோப்பை நாடகம் சமுதாய அவலங்களைக் களைந்து சீர்திருத்த உணர்வுடன் வாழ வழிகாட்டும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

கண்ணன். க, **நச்சுக்கோப்பையில் சமூக நோக்கும் மூடநம்பிக்கை ஒழிப்பும்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 133–138.

கலைஞரின் 'நச்சுக்கோப்பை' நாடகத்தின் வழி அவரது சமூக நோக்கினையும் மூடநம்பிக்கை ஒழிப்புக் கருத்துகளையும் எடுத்து விளக்கும் கட்டுரை.

கிருஸ்டிகலாவதி. முனைவர் அ, **கலைஞரின் சொல்லோவியம்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 147–152.

'மகான் பெற்ற மகன்' நாடகத்தின் துணை கொண்டு கலைஞரின் சொல்லோவியச் சுவையைக் காணும் முயற்சியின் விளைவு.

ரோஜா. ஜா.ஸ், **கலைஞரின் நாடகங்கள்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 86–91.

இயலும் இசையும் இயைந்து காட்சியாய் விரியும் நாடகத் தமிழுக்குக் கலைஞர் ஆற்றியுள்ள மகத்தான பங்களிப்பை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

நடராசன். ஔவை; இரா. குமாரவேலன், **கலைஞரின் நாடகங்கள் நடையழகு,** முரசொலி தைத்திங்கள் முதல் நாள், தமிழ்ப் புத்தாண்டு மலர், சென்னை, 14–01–2010.

செந்தமிழே ஆண் வடிவாய்த் திகழும் செம்மொழிச் செம்மலாம் கலைஞரின் நாடகங்களில் காணத்தகும் பல்வேறு மொழி நடைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சுந்தரம். எஸ்.பி, **கலைஞர் ஒரு நாடகக் கலைஞர்,** கலைஞர் 51, பிரபு பதிப்பகம், சென்னை, பக். 61–67.

கலைஞர் ஒரு நாடகக்காரர் என்பதை அவரது நாடகங்கள் மற்றும் நாடகச் செயல்பாடுகள் கொண்டு விளக்கும் கட்டுரை.

திரைப்படங்கள்

இளங்கோ.என்.எஸ், **சிரித்தான் பராசக்தி,** பராசக்தி மலர், போர்வாள் வெளியீடு, சென்னை, 1952, பக்.11–13.

பராசக்தி திரைப்படத்திற்கு எழுதப்பட்ட தவறான விமர்சனத்திற்கு எதிராக எழுதப்பட்ட சிறுகதை.

அன்பழகன். பேரா க, **படம் தரும் பாடம்,** பராசக்தி மலர், போர்வாள் வெளியீடு, சென்னை, 1952. பக்.19, 20, 61.

பராசக்தி படம் மோசமான படம் எனக் கூறப்படுவதற்குப் பதில் சொல்லும் வகையில் அமைந்த கட்டுரை.

அண்ணாதுரை, **பராசக்தி,** பராசக்தி மலர், போர்வாள் வெளியீடு, சென்னை, 1952. பக்.9,10,61.

எல்லாவற்றையும் விதியால் விளையாட்டாக விட்டுவிடாமல் மதியின் மகத்தான பயனைப் பராசக்தி திரைப்படம் புலப்படுத்தும் பாங்கினை விளக்கும் அண்ணாவின் கட்டுரை.

அறந்தை நாராயணன், **முரசொலிக்கும் கலைஞர்,** சினிமாவுக்கு வந்துபோன இலக்கியவாதிகள், அகரம், கும்பகோணம், முதற்பதிப்பு, டிசம்பர் 1977, பக்.95–103.

கலைஞரின் திரையுலகப் பங்களிப்பை அறிமுகம் செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மறைமலை. இ, **கலைஞரின் மனோகரா,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணி விழா மலர், கலைஞர் மணிவிழாக்குழு, சென்னை, ஜூன் **1984**, பக்.**102–107.**

பம்மல் சம்பந்த முதலியாரின் 'மனோஹரன்' கதை அமைப்பில் காட்சி அமைப்பில் பாத்திரப்படைப்பில் எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

கருணாநிதி. ஆ, **காலத்தை வென்ற கலைஞரின் பராசக்தி,** கனிமுத்துப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, **1986**, பக்.**112.**

கலைஞரின் பராசக்தி – திரைப்படத்தின் உரையாடலை ஆய்வுக்குட்படுத்தி, அவரது உரையாடல் திறனைக்கண்டு விளக்கும் இந்நூல்.
திரைப்பட வளர்ச்சியும் அரசியல் தாக்கமும்,
பராசக்தி திரைப்படக் கதையமைப்பும் கதைமாந்தர்களும்
பராசக்தி திரைப்பட உரையாடல் சமுதாய நோக்கம்
பராசக்தி திரைப்பட உரையாடல் திறன்
ஆகிய இயல் பகுப்புகளைக்கொண்டுள்ளது. திரைப்பட வரலாற்றில் ஒரு திரைப்பட உரையாடல் குறித்த முதல் ஆய்வு என்ற பெருமை இந்நூலுக்கு உண்டு.

அரசு மணிமேகலை, **கலைஞரின் திரைப்பட உரையாடல்களில் உவமைத்திறன்,** கலைஞர் களஞ்சியம், சி.சு.இராசேந்திரன். (பதி.ஆர்), பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, **1989.** பக்.**81–84.**

மிக நீண்ட உரையாடல்கள், விளக்கங்கள் இவற்றால் கூட முழுமையாக உணர்த்த முடியாத நுட்பங்களை உணர்ச்சியின் திட்பங்களை அனாயாசமாகக் கலைஞர் உவமைகள் மூலம் விளக்கும் பாங்கினைக் கண்டு சொல்லும் கட்டுரை.

பாலசந்தர்.கே, **கலைஞரின் திரைப்படக் கதாபாத்திரங்கள்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை **1989**, பக்.**185**

தான் வாழ்கின்ற வாழ்க்கைக்கும் தான் சார்ந்த இயக்கத்தின் நம்பிக்கைக்கும் விசுவாசமாக இருந்து கலைஞர் அவர்கள் தன் திரைப்படக் கதாபாத்திரங்களை உருவாக்கியுள்ளார் என்பதை எடுத்து விளக்கும் கட்டுரை.

மெய்யப்பன். ஏ.வி, **பராசக்திக்குக் கலைஞர் வசனம்,** வண்ணத்திரை–கலைஞர் கலைப்பணி சிறப்பிதழ், சென்னை, **1989**, பக்.**14–18.**

பராசக்தி திரைப்படத்திற்குக் கலைஞர் வசனம் எழுதிய வரலாற்று நிகழ்வுப் பதிவு.

கிருஷ்ணன் (பஞ்சு), **புகழைக்கண்டு திணறவில்லை பாராட்டைக்கண்டு நிலை தடுமாறவில்லை,** வண்ணத்திரை, கலைஞர் கலைப்பணி சிறப்பிதழ், சென்னை, **1989**, பக்.**19–20.**

பராசக்தியின் வெற்றி கலைஞரைப் பாதிக்காத தன்மையை வியந்து எழுதப்பட்ட கட்டுரை.

அன்பரசன். ம, **திரைஉலகில் டாக்டர் கலைஞர்**, தாய்நாடு பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1989, பக்.192.

தமிழ் மண்ணின் மரபார்ந்த கருத்துக்களையும், பண்பாட்டையும் பகுத்தறிவு – சீர்திருத்தக் கருத்துக்களையும் கதைப்போக்கில் கதாப்பாத்திரங்களின் மேல் ஏற்றி விளங்க வைக்கும் கலைஞரின் கலைத்திறனை அவரது திரைப்படங்களின் துணைகொண்டு கண்டு விளக்கும் கட்டுரை.

Anbarasan. M, Dr. Kalaignar's Filmdom, தாய்நாடு பதிப்பகம், சென்னை, ஜனவரி 1991.

இந்நூல் திரையுலகில் டாக்டர் கலைஞர் என்னும் தமிழ் நூலின் ஆங்கில வடிவமாகும்.

கோலப்பன். சி.பி, **கலைஞரின் வசனத்தில் உருவாகும் புதிய பராசக்தி,** சினிமா எக்ஸ்பிரஸ், சென்னை, 1.2.94, பக்.41–42.

கலைஞரின் வசனத்தில் உருவாக்கப்பட்ட புதிய பராசக்தி திரைப்படத்தின் சிறப்பு குறித்த கட்டுரை.

அறந்தை நாராயணன், **இந்திரன், கருணாநிதி, துருவன்–மாறன்,** திராவிடம் பாடிய திரைப்படங்கள், என்.சி.பி.எச், சென்னை, முதற்பதிப்பு, 1994, பக்.48–53.

கலைஞர் தான் பயின்ற திருக்குறளை ஆரம்பப் பள்ளியில் துருவன் நாடகம் நிகழ்த்தியமை குறித்தும் அந்நாடகத்தில் கலைஞர் இந்திரன் வேடம் ஏற்று நடித்ததையும் மாறன் துருவன் வேடமேற்று நடித்ததையும் குறிப்பிட்டுச் சொல்லுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது

அறந்தை நாராயணன், **கலைஞரின் கதை வசனத்தில் இரண்டு படங்கள்,** திராவிடம் பாடிய திரைப்படங்கள், என்.சி.பி.எச். சென்னை, முதற்பதிப்பு, 1994, பக்.111–134.

கலைஞரின் கதை வசனத்தில் வெளியான மந்திரிகுமாரி, மருதநாட்டு இளவரசி என்னும் இரண்டு திரைப்படங்கள் திராவிடம் பாடிய பாங்கைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அறந்தை நாராயணன், **தேவகியும் மணமகளும்,** திராவிடம் பாடிய திரைப்படங்கள், என்.சி.பி.எச். சென்னை, முதற்பதிப்பு, 1994, பக்.135–143.

கலைஞர் கதை வசனம் எழுதிய தேவகி, மணமகள் ஆகிய திரைப்படங்கள் குறித்த கட்டுரையாக இது அமைந்துள்ளது.

கிருஷ்ணசாமி.கி.சு, **தடைகளை வென்ற தமிழ்க் காவியம் பராசக்தி,** கலைஞரின் கலையுலகப் பொன்விழா மலர், விழாக்குழு, சென்னை, 1996.

எல்லாத் தடைகளையும் வென்று பராசக்தி திரைப்படம் வெற்றி பெற்ற வரலாறு சொல்லும் கட்டுரை.

இராமலிங்கம். பெ, **திரையுலகில் கலைஞரின் தனி முத்திரைகள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் 1998, பக்.341–350.

1946–ல் கலைஞரின் திரையுலகப் பயணத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் உள்ளிட்ட திரையுலக எழுத்தாளர்கள் யாவரினும் புதுமைகள் பல படைத்துத் தன் தனி முத்திரையைத் திரையுலகில் பதித்தவர் கலைஞர் என்பதை எடுத்துச் சொல்லும் கட்டுரை.

நெடுஞ்செழியன். க, **தமிழின மீட்டுருவாக்கத்தில் கலைஞரின் திரைப்பட உத்திகள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் 1998, பக்.351–368.

தமிழ்மொழி இன உணர்வின் மாற்றுக் கண்ணாக விளங்கிய கலைஞர், தமிழின மீட்டுருவாக்கத்திற்குத் திரைப்படங்களில் கையாண்ட உத்திகளைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நெடுஞ்செழியன். க, **கலைஞரின் திரைப்பட உத்திகள்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் படைப்புகளில் சுயமரியாதை இயக்கத்தின் மனிதநேயக் கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளதைப் போலவே தமிழினத்தின் அடையாள மீட்புக்கான முனைப்பும் தலையாய இடத்தைப் பெற்றுள்ளது என்பதைக் கலைஞர் கையாண்ட திரைப்பட உத்திகளின் துணைகொண்டு எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

விசுவநாதன்.என்.கே, **கலை உலகின் அமுதசுரபி**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் திரைப்படத்திற்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிய அனுபவங்களைச் சொல்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அழகப்பன். ஏ.எல், **தலைவர் கலைஞரும் கலைஉலகமும்**, கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞர் கலையுலகிற்குச் செய்த அளப்பரிய பணிகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

பாரதிராஜா, **கலைஞர் என்னும் கலங்கரை விளக்கம்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

தமிழ்ச் சினிமாவின் தடம் தெரியவைத்த வழிகாட்டி கலைஞர் என்பதை எடுத்து விளக்கும் கட்டுரை.

சொர்ணம், டாக்டர் **கலைஞரின் திரைத்தமிழ்**, ராஜகுமாரி வெளியீடு, சென்னை, டிசம்பர் 1999, பக். 96.

தமிழ் ஆட்சிமொழி வரலாற்றில் முதல்வர் கலைஞரின் பங்களிப்பு.
டாக்டர் கலைஞரின் சொல் புனையுந்திறன்
மாண்புமிகு முதல்வர் கலைஞரின் திரைத்தமிழ்
பழந்தமிழக ஊராட்சியும் இன்றைய ஊராட்சி நிலையும்.
ஆகிய கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

முத்துராமன்.எஸ்.பி, **தங்களிடம் நாங்கள் பாடம் படிக்க,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் பல்துறை ஆற்றலை எடுத்து விளக்கும் இக்கட்டுரை, கலைஞரின் திரைப்பட வசனங்கள் திரைப்படத்துறை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியமையைச் சுட்டிக்காட்டுகிறது.

சுரேஷ்ராஜன். என், **கருத்துப் புரட்சியாளர்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் திரையுலக–எழுத்துலகக் கருத்துப் புரட்சியைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சிவகுமார். நடிகர், **தமிழ்ச் சினிமாவும் கலைஞரும்**, தலைவர் கலைஞர் 79–வது பிறந்தநாள் சிறப்புமலர், முரசொலி, சென்னை, 2002.

தமிழ்ச் சினிமாவிற்குக் கலைஞரின் கொடையைக் கண்டு விளக்கும் கட்டுரை. தமிழ்ச் சினிமா உள்ளளவும், கலைஞரின் புகழ் தமிழ்த் திரையுலக வரலாற்றில் நின்று நிலைத்திடும் என்பதைச் சொல்கிறது.

இராமலிங்கம். பெ, **தமிழ்த் திரையுலகிற்குக் கலைஞரின் கொடை**, அனன்யா, தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் 2006.

கலைஞரின் திரையுலக ஆளுமையைக் கண்டு விளக்கும் வகையில் அமைந்த இந்நூல், திரைப்பட வரலாற்றில் தமிழகமும் திராவிட இயக்கமும், திரைத்துறையில் திராவிட இயக்கப்பணிகள் கலைஞரின் திரைக்கதைகள் கலைஞரின் உரையாடற் பணிகள், திரை எழுத்துத்துறையில் கலைஞரின் தாக்கம் ஆகிய இயல்களைக் கொண்டு அமைகிறது. நூலின் பின்னிணைப்பாக கலைஞர் கதைவசனம் எழுதிய திரைப்படங்களில் இடம்பெறும் நாடகங்களின் சில காட்சிகள் எடுத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் கலைஞர் கதைவசனம் எழுதிய திரைப்படப் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் முனைவர்பட்ட ஆய்வின் நூல்வடிவம்.

அவைநாயகன், **பராசக்தி – காலத்தின் மனசாட்சி**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 638–644.

கதை உருவாக்கம், பாத்திரப் படைப்பு, வசனச் செழுமை, மரபுகளை மீட்டெடுக்கும் தன்மை, முன்னோடிப் படைப்பு எனும் பன்முகப் பாங்குடைய பராசக்தி காலத்தின் மனசாட்சியாகவே உரக்கப் பேசியிருக்கிறது என்பதைச்

சொல்லும் கட்டுரை.

வேனிலா ஸ்டாலின், **கலைஞரின் பராசக்தி – திரைக்காவியம்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 645–657.

கலைஞரின் பராசக்தி மக்கள் சமுதாயத்திற்காகப் படைக்கப்பட்ட – ஒப்பற்ற திரைக்காவியம் என்பதை ஆய்ந்து சொல்லும் கட்டுரை.

விஜயா. முனைவர் வெ., **மனோகரா வசனத்தில் கலைஞர் பொன் மொழிகள்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 658–661.

மனோகரா திரைப்படத்திற்குக் கலைஞர் எழுதிய வசனத்தில் காணப்படும் பொன்மொழிகளைத் தொகுத்தளித்து அப்பொன்மொழிகள் வழியாகக் கலைஞரின் மேதைமையை வெளிப்படுத்திக் காட்டும் கட்டுரை.

சந்திரசேகரன், முனைவர் நா, **கலைஞரின் பராசக்தி வசனமொழியும் திரைப்படமொழியும்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 668–675.

கலைஞரின் வசன மொழிகள் கேமராக் கோணங்கள் வைப்பதில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

தியோடர் பாஸ்கரன். **பண்டிதத்தனத்தை விரட்டிய வசனகர்த்தா**, இந்தியா டுடே, (மு. கருணாநிதி சிறப்பிதழ்) சென்னை, ஜூன் 2008, பக்.52–53.

கலைஞரின் திரைப்படப் பங்கேற்பு குறித்த மதிப்பீடு.

பாலசந்தர். கே, **மனோகராவைப் பேசவைத்தவர்**, இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்) , சென்னை, ஜூன் 2008, பக்.113–114.

தலைமுறைகள் மாறினாலும் கலைஞரின் திரையுலகக் கலைப்பணிகள் எப்போதும் நினைவில் நிற்கும் என்பதைச் சொல்லும் கட்டுரை.

சுமதி. பெ, **வண்டிக்காரன் மகன், அண்ணாவின் கதை–கலைஞரின் திரைப்படம் ஒப்பீடு**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், செப்டம்பர் 2008, பக்.106.

அண்ணாவின் வண்டிக்காரன் மகன் கதையையும், கலைஞரின் வண்டிக்காரன் மகன் திரைப்படத்தையும் ஒப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வு, பேரறிஞர் அண்ணாவின் வாழ்வும் பணியும், திறனாய்வு நோக்கில் வண்டிக்காரன் மகன் கதை அமைப்பு, தமிழ்த் திரைப்பட வரலாற்றில் வண்டிக்காரன் மகன்–அண்ணாவின் கதை–கலைஞரின் திரைப்படம்–ஒப்பீடு என்ற இயல்களைக் கொண்டமைந்துள்ளது.

சுதாகர். ம, **ரங்கோன் ராதா அண்ணாவின் கதை – கலைஞரின் திரைப்படம் – ஒப்பீடு,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, இலக்கியத்துறை, தமிழ்ப்

பல்கலைக்கழகம், தஞ்சாவூர், செப்டம்பர் 2008, பக்.100.

ஏழைகள் எவ்வாறு ஏமாறுகிறார்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை எடுத்தியம்பும் அண்ணாவின் ரங்கோன் ராதா கதையுடன் கலைஞரின் திரைப்படத்தை ஒப்பிட்டு ஆராயும் இவ்வாய்வு, தமிழ் இலக்கியத்திற்கு திராவிட இயக்கத்தின் பங்களிப்பு, திராவிட இயக்க வரலாற்றில் அறிஞர் அண்ணா, திறனாய்வு நோக்கில் ரங்கோன் ராதா கதை அமைப்பு, ரங்கோன் ராதா அண்ணாவின் கதை–கலைஞரின் திரைப்படம் ஒப்பீடு ஆகிய இயல்களைக் கொண்டமைந்துள்ளது.

புகழேந்தி, ப, **கலைஞரின் திரை இலக்கியம்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக்.307–334.

மூலக்கதை எவ்வாறு இருப்பினும் அவற்றை முறைப்படுத்தி அதற்கு உயிர்கொடுத்து, தம் கருத்துக்கேற்ப அவற்றைச் சரிப்படுத்தித் தேவைப்பட்டால் புதிய பாத்திரங்களை உருவாக்கிக்காட்டும் கலைஞரின் திரைக்கதை உருவாக்கச் சிறப்பைக் கண்டு சொல்லுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராசராசன்.சி.அ, **கலைஞர் ஒரு காவியம்**, கலைஞர்,மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி,1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2008, பக்.95–100.

பல்வேறு பரிமாணங்களில் கலைஞரின் திறன் அமைந்திருக்கும் நிலையில் கலைஞரின் திரையுலகப் பங்களிப்பைப் புலப்படுத்தும் கட்டுரை.

இராஜம் .செ, **திரையுலகில் கலைஞரின் தனித்தன்மை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 106–111.

திரையுலகில் புதுமைகள் பல படைத்தவர் கலைஞர் என்பதைச் சொல்லும் கட்டுரை.

டான்ஸ்டோனி. க, **கலைஞரின் வசனத்திறன்** (மனோகரா திரைப்படத்தில்), கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கிங்கள் தொகுதி – 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 210 – 215.

புராணச் செய்திகள், பழமொழிகள், நகைச்சுவைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி உணர்ச்சிமிகு வசனங்களால் உள்ளத்தில் இடம் பிடித்த மனோகரா திரைப்படத்தில் கலைஞரின் வசனத் திறனைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கிறிஸ்துராஜேஸ். லி.கி, **கலைஞரின் பூம்புகார் திரைக்கதை வசனம்–ஓர் பார்வை**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு 2009, பக்.174–181.

பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், புறநானூற்றுப் பாடல்கள் முதலியனவற்றின் வழிப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு தீட்டப்பட்ட பூம்புகார்

திரைக்கதை வசனம் குறித்து ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தமிழடியான். இரா, **பராசக்தியின் பகுத்தறிவு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.223–229.

பராசக்தி திரைப்படத்தின் நீதிமன்றக் காட்சியில் காணத்தகும் பகுத்தறிவுச் செய்திகளைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கவிதைகள்

கண்ணதாசன். கவிஞர், **கலைஞரைப் பாராட்டுகிறார் கவிஞர்**, பூரணி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1950, பக்.36.

தன் இனிய நண்பர் கலைஞரின் பெருமை குறித்தும் நட்பு பாராட்டியும் கவிஞர் கண்ணதாசன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

அறிவுடைநம்பி. புலவர், **கலைஞர் கவிதைக்கோவை**, செண்பக வெளியீடு, கடலூர், 2.11.1969, பக்.76.

காக்கும் கலைஞருக்குக் கவின் மலர் யாவும் கொண்டு, தாமரை உலா உருவில் கட்டப்பட்ட நாற்பத்தாறு கவிமாலைகளின் தொகுப்பு.

மணிமொழி, கவிஞர் & பி.எல்.ராஜேந்திரன், **கவிஞர் கண்ட கலைஞர்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு. ஜூன்.1970.

புலவர்கள் பாடும் புகழுடையோன், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன், கலைஞர் அவர்கள் புகழ் பாடும் 55 கவிஞர்களின் நறுமணம் கமழும் மாலைகளின் தொகுப்பு.

வேதா. புலவர், **கலைஞர் கவிமணி மாலை**, வைரம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1970, பக். 107.

கலைஞரின் புகழ்பாடும் கவிதை நூல்.

குமணன். கவிஞர், **கலைஞர் உலா**, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, சூலை 1970, பக். 102.

கலைஞரைக் காவியத் தலைவனாகக்கொண்டு பிரபந்தங்களில் ஒன்றான உலா என்னும் இலக்கிய வடிவத்தில் எழுதப்பட்ட நூல்.

சுந்தரம். டாக்டர் மெ, **கலைஞரின் கவிதைச் சிற்பம்**, தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, அக்டோபர் 1971, பக். 39.

கலைஞரின் கவிதை வளம் குறித்து ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரை.

Sundaram. M , **CRITICAL EVALUATION OF KALAIGNAR DR.M. KARUNANIDHI D.LITT AS A POET**. Tamil research Academy. Madras, First edition. October 1971-43

நவீனத் திறனாய்வுக் கோட்பாடுகளின் உருவாக்கத்தில் கலைஞரின் கவிதைகள் பெறுமிடத்தை மதிப்பீடு செய்யும் ஆங்கிலக் கட்டுரை.

நரசிங்கபெருமாள். ஆனை, **டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி தோழி விடு தூது,** செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு, மதுரை,1972 , பக். 48.

வானுக்கும் மண்ணுக்கும் அடங்காத கலைஞரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுதப்பட்டுள்ள தூது இலக்கியம்.

அன்பரசன்.மு, (பதி.ஆர்) **நூறாண்டு வாழ்க**, கல்வி வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1973, பக்.112.

வேல்போலும் எழுத்தும் சொல்லும்
விளைத்திடும் கருணை வேந்தே.
ஆல்போலும் ஆட்சி நிற்க,
இறைமாட்சி இரண்டில் கூறும்
நால்வகைப் பண்பும் பெற்றோய்
நாவலர் நவிலுந்தோறும்
நூல்நயம் சிறத்தல் போல
நூறாண்டு சிறந்து வாழ்க...
என நூறு கவிஞர்கள் கலைஞரை வாழ்த்தும் கவிதைகளின் தொகுப்பு.

பாலசுந்தரம். பாவலரேறு. ச, **கலைஞர் வாழ்க**, தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1973, பக். 32.

பேரறிஞர் அண்ணாவின் நெஞ்சம் போல் தமிழினத்தைப் பேணிக்காத்து வரும் கலைஞர் அவர்களின் பல்வேறு சிறப்புகளைப் பாமாலையாக்கித் தரும் நூல்.

அன்பரசன். மு.பி, **கலைஞர் நூறாண்டு வாழ்க**, கல்வி வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1973, பக்.112.

பொன்விழாக் கலைஞர் நூறாண்டு வாழ்க என நூறு கவிஞர்கள் கலைஞரை வாழ்த்தி எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

வலம்புரி ஜான், **வரலாற்றில் கலைஞர்,** பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, டிசம்பர்.1973.

தர்மலிங்கம். முத்துப்பேட்டை. ந. (இ.ஆர்) **முத்தாரம்**, இளந்தமிழர் பதிப்பம், நெய்வேலி, முதற்பதிப்பு, அக்டோபர் 1974, பக்.112.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 66-வது பிறந்தநாள் நினைவாக அவர்

தம்பியாம் கலைஞருக்குப் பாடப்பட்ட புகழ்மாலைகளின் தொகுப்பு.

Muruguvanan, **ANNA'S UREKA IS OUR MU. KA.** கழகக்குரல் ஆண்டுமலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975, பக்.23.

கலைஞரைப் பற்றிய கவிஞர் முருகவாணனின் ஆங்கிலக் கவிதை. சான்றுக்கு. 'Man with faculty of all arts Mu.Karunanithy Heart of Tamil Hearts'.

பாவாளியார், **கருணாநிதிச்சோழன் உலா**, பால்ராஜ் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜனவரி 1977, மறுபதிப்பு பிப்ரவரி 1997, பக்.71

கலைஞரின் கள அரசியல் வரலாற்றைக் கவிதை நடையில் சொல்லும் நூல்.

மணிமாறன், நா. **எனது நோக்கில்,** தாய் பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு, அக்டோபர் 1980, பக்.42.

கலைஞரைப் பற்றிய நூலாசிரியரின் எண்ண வெளிப்பாடு.

சுனந்தாதேவி, **கலைஞர் கவிதைகள்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

கலைஞரின் கவிதைகளில் காணக்கிடைக்கும் கருத்து நிலைகள் குறித்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

காசாமைதீன். ஆயை. மு, (பதி. ஆர்) , **கலைஞர் கவிதைகள் திறனாய்வு,** மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, முதற்பதிப்பு, அக்டோபர் 1981, பக்.109.

கலைஞரின் கவிதைகள் குறித்து ஒன்பது பேர் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பு.

தமிழ்க்குடிமகன், **கலைஞர் கவிதைகளில் கலைஞர் பாணி,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் 1981, பக். 1–7.

கொடுத்த தலைப்பில் கடுமையாகச் சிந்தித்து, தீர்ப்புகளில்கூட நடுநிலை தவறாமல் தமிழ்க் கவிதையுலகிற்கு ஒரு புதுவரவாக அமைந்தவை கலைஞரின் கவியரங்கக் கவிதைகள் என்பதைச் சொல்லும் கட்டுரை.

விநாயகமூர்த்தி. அ, **கலைஞர் கவிதைகளில் உவமை நலன்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் 1981, பக். 8–23.

கலைஞரின் கவிதைகளில் கருத்துத்தெளிவின் பொருட்டு கலைஞர் பயன்படுத்தியுள்ள உவமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பூங்காவனம். கு, **கலைஞர் பாடல்களில் யாப்பு,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்குமுகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் **1981,** **பக்.24–37.**

கலைஞர் கவிதைகள், கலைஞர் பாணிப் பாடல் என அழைக்கத்தக்கன என்பதைச் சொல்லும் கட்டுரை.

மலைச்சாமி. மேலூர். பெ, **கலைஞர் கவிதைகளில் கற்பனை வளம்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அக்டோபர் **1981, பக். 38–50.**

கலைஞரின் கற்பனை வளம், கலைஞரின் கவிதைகளில் வெளிப்படும் தன்மையைக்கண்டு விளக்கும் கட்டுரை.

இளமாறன். மு, **கலைஞர் கவிதைகளில் புரட்சிக்கவிஞர்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் **1981, பக், 51–57.**

கலைஞரின் கவிதைகளில் புரட்சிக்கவிஞரும் அவரது சிந்தனையும் வெளிப்படும் தன்மையைக்கண்டு விளக்கும் கட்டுரை.

அறிவரசன். பேராசிரியர், **கலைஞர் கவிதைகளில் பகுத்தறிவு,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் **1981, பக்.58–62.**

கலைஞர் தம் நெஞ்சில் ஏற்றுக்கொண்ட பகுத்தறிவுக் கருத்துக்களை ஒல்லும் வகையால் கவிதை வழிச்சொல்லும் திறனைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கண்ணையன். வை, **கலைஞர் கவிதைகளில் இனநலம்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் **1981, பக்.63–77.**

இனநல உணர்வு கலைஞர் கவிதைகளில் காணப்படும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

காசாமைதீன். ஆயை. மு, **கலைஞர் கவிதைகளும் அவை காட்டும் மொழி உணர்வும்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அக்டோபர் **1981, பக்.78–101.**

கலைஞரின் கவிதைகள் தமிழ் உணர்வின் பிழிவுகள் என்பதை எடுத்துச் சொல்லும் கட்டுரை.

திருமாறன். பேராசிரியர் க, **கலைஞர் கவிதைகளில் குறள்,** கலைஞர் கவிதைகள் திறனாய்வு, மேற்கு முகவை மாவட்ட இலக்கிய அணி, அருப்புக்கோட்டை, அக்டோபர் **1981, பக். 102–109.**

கலைஞரின் கவிதைகளில் குறட்கருத்துக்கள் மணியிடை ஒளியென ஒளிவிடும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

வைரமுத்து, **கலைஞரைப்பாடும் கவிக்குயில்கள்**, பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1983, பக்.106.

கலைஞர் அவர்களின் அறுபதாவது பிறந்தநாளையொட்டி கலைஞரைப் பற்றி கவிஞர் கண்ணதாசன், மு.மேத்தா, முடியரசன், நா. காமராசன், பொன்னிவளவன் உள்ளிட்ட அறுபது கவிஞர்கள் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. தகுதிமிக்க ஒரு தலைவனின் பெயரை உச்சரித்துக்கொண்டே பூத்த பூக்களாக இக்கவிதைகளைக் குறிப்பிடுவார் கவிப்பேரரசு வைரமுத்து.

அறிவுமணி. எஸ் (தொ.ஆர்), **கலைஞரைப்பாடும் கவிக்குயில்கள்**, பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1984, பக்.80.

நா. காமராசன், வைரமுத்து, செல்வகணபதி உள்ளிட்ட 61 கவிஞர்கள், தங்களது இதயங்களைச் சுமந்து வந்த கலைஞர் என்னும் காலத்தைக் கவிதையால் களிப்பூட்டும் வகையில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு. கலைஞரின் மணிவிழா வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

அன்பழகன். க. பேராசிரியர், **கலைஞர் கவிதையும் கருத்தும்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1984, பக்.1–12.

கலைஞர் இடத்திலே கருத்து உண்டு, அதை எடுத்துச்சொல்லும் ஆற்றல் உண்டு, அதை அழகுபடுத்தும் கவியின் சிறப்பு உண்டு என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சுந்தரமூர்த்தி. இ, **கலைஞரின் நடைநயம்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர் , கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக். 31–45.

பல்வேறு நடையியற் கூறுகளைப் பெற்றுத்துலங்கும் கலைஞருடைய கவிதை மொழிநடையும் உரைநடை அமைப்பும் கலைஞருக்கென ஒரு புதிய இடத்தைப் பெற்றுத்தந்துள்ளதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சின்னையா. செ, **கலைஞரும் புதுக்கவிதையும்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜுன் 1984, பக். 115–121.

புரட்சிப்பால் பொங்கும் கலைஞரின் புதுக்கவிதைகள் தமிழ்ச் சமூக அமைப்பின் தளங்களின் மேல் தன் வீச்சுகளை வீசுவது உணர்வதற்குரியது என்பதைச் சொல்லும் கட்டுரை.

கோதண்டராமன். பொன், **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் மொழிநடை**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜுன் 1984, பக். 122–134.

கலைஞரின் கவியுள்ளத்தை உரசிப்பார்க்க உதவும் உறைகல்லாக அவரின் உவமைகள் திகழ்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திருமாறன். க, **கலைஞரின் கவிதைகளில் குறள்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழாமலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.234–241.

இக்கட்டுரை கலைஞரின் கவிதைகளில் குறட்கருத்துக்கள் மணியிடை ஒளியென ஒளிவிடும் பாங்கைக்கண்டு விளக்குகிறது.

அறிவுமணி, எஸ், **தெற்கில் உதித்த சூரியன்**, பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, அக்டோபர் 1985, பக். 202.

கலைஞரின் வரலாறு – புதுக்கவிதை வடிவத்தில்.

வாசன். ஓவியக்கவிஞர் (தொ.ஆர்) , **கவிதை மணிமாலை**, வள்ளுவர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1985, பக்.55.

கலைஞர் அவர்களின் 62–வது பிறந்தநாள் விழாவினையொட்டி நடத்தப்பட்ட கவிதைப்போட்டிக்கு வந்த கருத்துச் செறிவுமிக்க கலைஞரின் புகழ்பாடும் கவிதைகளின் தொகுப்பு.

ஷெரிப். கவி.க.மு , **கலைஞர் 63**, தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1986, பக்.76.

தமிழைச் சூழ்ந்த கேடகலத் தமிழர் வாழ்வில் நலம் துலங்கக் கலைஞர் வாழ்க, வாழ்க என வாழ்த்தும் கவிதை நூல்.

இரணியல் ரவி, **தமிழினத் தலைவர் கலைஞர் வாழி**, திருமதி பாக்கியலட்சுமி, நெய்யூர், 1986, பக்.32.

கலைஞரின் 65வது பிறந்த நாளையொட்டிய கவிதைகளின் தொகுப்பு என்பதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கலைஞர் குறித்த கவிதைகளை விட பிறகவிதைகள் அதிகம்.

வெற்றிக்கொடி. வே, **இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் கலைஞரின் கவிதைகள் – ஓர் திறனாய்வு**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1986.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

கருப்பையா. மோகை, **கலைஞர் பற்றிய செந்தமிழ்ப் பரணி**, மூவேந்தர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1987, பக். 182.

கலைஞரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பரணி என்னும் இலக்கிய வடிவத்தில் பாடப்பட்ட நூல்.

நல்லியக்கோடன், புலவர், **கலைஞர் சிலேடை வெண்பா**, மதிவாணன் பதிப்பகம். ஒலக்கூர், முதற்பதிப்பு, அக்டோபர் 1987. பக்.81.

தமிழே உயிராகவும் தமிழினமே தம் வாழ்வாகவும் கொண்டு அயராது பணிபுரியும் கலைஞர் அவர்களின் பலதரப்பட்ட ஆற்றல்களையும் அரும்பண்புகளையும் அரும்பொருள் கொண்டு எழுதப்பட்டுள்ள வெண்பாக்களின் தொகுப்பு.

பழனிவேல். தங்க, **தமிழ்த்தாயின் தவப்புதல்வன்**, இதயரோஜா பதிப்பகம், சென்னை, பக்.226, முதற்பதிப்பு டிசம்பர்.1988.

தரணி வணங்கும் தாய்க் கவிஞனுக்கு உலகம் போற்றும் உதயசூரியக் கவிஞனுக்குப் பழனிவேல் என்னும் குட்டிக்கவிஞனின் கவிமரியாதை.

அன்னையப்பன், கவிஞர் (தொ.ஆர்.), **கலைஞரைப் பற்றிக் கவிஞர் சுரதா**, உலகத்தமிழ்க் கவிஞர்பேரவை, சேலம் மாவட்டம், முதற்பதிப்பு, டிசம்பர் 1988, பக். 1–14.

கலைஞரைப் பற்றிக் கவிஞர் சுரதாவின் கருத்து விளக்கம்.

சுதானந்த தேவி. சு, **கலைஞர் கவிதைகள் ஓர் ஆய்வு** ,பயோனியர் புக் சர்வீசஸ், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1989, பக். 187.

இலக்கிய மரபும் கலைஞரும்
கலைஞரும் சிலேடையும்
இலக்கிய நயமும் நடையும்
கலைஞரின் கவிதைகளில் சமுதாயம்
கலைஞர் பாடிய இலக்கிய–அரசியல்–தலைவர்கள்
ஆகிய இயல்களில் எழுதப்பட்ட நூல்.

தமிழ்தாசன், **கலைஞர் பிள்ளைத் தமிழ்**, தமிழோசைத் தமிழ் மன்றம், சென்னை, ஜூன் 1990,பக்.78,

பிரபந்த வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வடிவத்தில் எழுதப்பட்ட கலைஞரின் வரலாறு.

எழில்வாணன், பாவலர். ப, **கலைஞரின் வாகையும் மார்கழிப் பாவையும்**, தமிழ்வாணன் பதிப்பகம், பள்ளப்பட்டி, முதற்பதிப்பு, ஜூன்.1990. பக்.116.

பாவை நூல் யாப்பமைதி கொண்டு, கலைஞர் ஆட்சியின் வருகைக்குக் கட்டியம் கூறும், மார்கழிப்பாவை நூல் இது.

தமிழடியான், **கலைஞர் பாமாலை**, கண்ணகிப் பதிப்பகம், ஆரூர், முதற்பதிப்பு, செப்டம்பர்1990,பக்.112.

பிரபந்த வகைகளுள் ஒன்றான உலா என்னும் இலக்கிய வடிவில் எழுதப்பட்ட கலைஞரின் வரலாறு.

மழைமகன், **கலைஞர் காவடிச் சிந்து**, கவிஞர் பதிப்பகம், வர்ணபரம், 1991.

காவடிச் சிந்து என்னும் இலக்கிய வடிவில் கலைஞரைப்பற்றி எழுதப்பட்டுள்ள நூல்

பாரிதாசன், கவிஞர், **கலைஞர் நானூறு,** சென்னை, முதற்பதிப்பு, **1995.**

கலைஞர் பிறந்தார்
தமிழ்த்தாய் வாழ்த்து
வள்ளுவன் வாய்மொழி வாழ்த்து
அண்ணா வியந்த அறிவு
காதலித்தார் கலைப் பெண்ணை
இந்தி எதிர்ப்பு அண்ணாவின் ஆணை
கல்லக்குடி போர்
பாளைச் சிறை
முத்தமிழ் நாட்டின் முதல்வர்
பூம்புகார் கண்ட கலைஞர்
வள்ளுவர்கோட்டம் கண்ட கலைஞர்
ஏழைக்கு மாடிவீடு கட்டித்தந்த கலைஞர்.
உள்ளிட்ட 27 தலைப்புகளிலமைந்த கவிதைநூல்.

தஞ்சை தீரன், **தியாகத்தலைவர் டாக்டர் கலைஞர்.** இதயம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, ஜூன் **1996,** பக்.**80.**

1986 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதாகி, திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் நூலாசிரியர் கலைஞரைப் பற்றி எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

கணேசன். வலசை ப, **கலைஞர் இசை நாற்பது,** சியாமளா பதிப்பகம், ஆற்காடு, முதற்பதிப்பு, பிப்ரவரி **1997,** பக். **71.**

கலைஞரின் பெருமையை இசைத் தமிழ்ச் சொல் கொண்டு பேசும் நூல்.

கருப்பையா. மோகை. **கலைஞர் செந்தமிழ்ப் பரணி,** மூவேந்தர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் **1997,** பக்.**182.**

உணர்ச்சி, உண்மை என்னும் இரு கண்களைக் கொண்டு கலைஞர் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட செந்தமிழ்ப் பரணி இந்நூல்.

வெங்கடாசலம். வன்மீக (தொ.ஆர்), **கலைஞரை வாழ்த்தும் கட்டுமரங்கள்,** பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் **1997.** பக்.**64.**

கலைஞர் அவர்களின் 73–வது பிறந்த நாளையொட்டித் தமிழகத்துக் கவிஞர்கள், அமைச்சர் பெருமக்கள் முரசொலி நாளேட்டில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

முத்தரசன், கவிஞர் (தொ.ஆர்), **கலைஞர் வாழ்க,** பாரதி பதிப்பகம், பெரம்பலூர், ஜீன் **1997,** பக்.**104.**

கலைஞர் அவர்களை வாழ்த்தி 64 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு.

விசுவலிங்கம். கதிர், **கலைஞர் நூறு**, அழகு பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1997, பக். 20 & 136.

கலைஞர் அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை, அரசியல் வாழ்க்கையை நூறு கவிதைத் தலைப்புகளில் சொல்லும் நூல்.

பாட்டழகன்.மோ (தொ.ஆர்), **புகழின் உச்சியிலே கலைஞர்**, வசந்தா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 1998, பக்.432.

தந்தை பெரியார் தொடங்கி, ஆலந்தூர் கோ.மோகனரங்கன் ஈறாக எழுபத்தி அறுவர் கலைஞரைப் புகழ்ந்து எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

துரையரசன். செம்மங்குடி (தொ.ஆர்), **பவளச் சூரியன் கலைஞர்**, மங்களம் பதிப்பகம், திருவள்ளூர், முதற்பதிப்பு. ஜூன். 1998, பக்.112.

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும் அளவிற்கு ஆட்சிநடத்தி வரும் கலைஞர் அவர்களுக்குச் சூட்டப்பட்ட பாமாலைகளின் தொகுப்பு.

துரைமுருகன், **கலைஞர் தன்மானச் சரித்திரத்தின் அடையாளம்**, முரசொலி பொங்கல் மலர், முரசொலி சென்னை, 1998, பக்.25–29.

கலைஞரின் படைப்புகளில் 'மானம்' முதன்மை இடத்தைப் பெற்றிருப்பதைக் கலைஞரின் கவிதைகள் கொண்டு ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

அப்துல் ரகுமான், **முத்தமிழின் முகவரி**, தாரகை, சென்னை, முதற்பதிப்பு, ஜூலை 1998, பக்.80

கலைஞர் தலைமையில் கவியரங்குகளில் நூலாசிரியர் படித்த கவிதைகளுடன் காலமரபு பற்றி நூலாசிரியர் எழுதிய கவிதைகளும் இடம் பெற்றுள்ள தொகுப்பு நூல். சான்றுக்கு,

தமிழிடம் அதன்
முகவரி கேட்டேன்
'மேற்பார்வை
மு. கருணாநிதி'
என்றது.

காசாமைதீன். ஆயை.மு, **தலைவர் கலைஞர்**, வெண்ணிலா வெளியீட்டகம், அருப்புக்கோட்டை, முதற்பதிப்பு, செப்டம்பர் 1998, பக்.48.

அடியாள் பெருமை பாடிய சேக்கிழார் போல், கலைஞரைப் பாடி, கன்னல் தமிழுக்கும் தமிழின உணர்வுக்கும் கோயில் எழுப்பும் முயற்சியில் விளைந்த கவிதை நூல்.

வெற்றியழகன். புலவர், **காவியக் கலைஞர்**, பூவழகி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர், 1998, பக்.144.

தன்மானப் பகுத்தறிவு சேர்க்கும் இனமான உணர்வு கொண்டோர் போற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் அயராத தொண்டினையும், தளராத முயற்சியையும், பன்முகத் திறமையையும், முத்தமிழ்த் தேர்ச்சியையும், கலை உலகச் சாதனைகளையும் போற்றிடும் ஆர்வத்தால் எழுந்த கவிதைகளின் தொகுப்பு.

ஜோசப்குமார், **கலைஞரின் கவிதைகள்**, கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் **1998**, பக். **288–299.**

கலைஞரின் கவிதைகள் குறித்து எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரை.

கந்தசாமி. சோ.ந, **கலைஞரின் கவிதைத் திறம்**, கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் **1998**, பக். **306–325.**

பன்மாண் சிறப்புக்களும் ஒருங்கே கொண்ட கலைஞரின் கவிதைகளில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்களைக் கண்டு விளக்கும் இக்கட்டுரை, சிந்தனைத்தெளிவும் சொல்வளமும், பொருட்சிறப்பும் கொண்டனவாகக் கலைஞரின் கவிதைகள் அமைந்துள்ள தன்மையை எடுத்து விளக்குகிறது.

இலக்குமணப்பெருமாள். க, **கலைஞர் கருணாநிதி பிள்ளைத் தமிழ்**, போகாம்மாள் பதிப்பகம், மேலப்பொன்னகரம், **1999.**

கலைஞரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளைத் தமிழ் என்ற இலக்கிய வடிவத்தால் எழுதப்பட்டுள்ள நூல். கலைஞரின் கவிதைகள் ஒப்பில்லா ஓசை நயமுடையவை, கலைஞரின் தமிழ்க் கவிதைகள் கள்ளூற்று, கலைஞரின் கவிதைகளில் தனிச்சிறப்புடன் இலங்கும் கூறு அவரது ஒப்புயர்வற்ற உவமைகள் என்பதை எடுத்துக்காட்டும் இக்கட்டுரை, கலைஞரின் கவிதைகளில் வெளிப்படும் மனித நேயத்தையும், அவர் போலி ஆன்மீகத்தைச்சாடும் தன்மையையும், விதவை மறுமணத்தை ஆதரித்த பாங்கையும் கண்டு விளக்குகிறது.

செல்வகணபதி. பொன், **அரசியல் அகநானூறு**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கலைஞருக்குப் பவளவிழா வாழ்த்துச்சொல்லி எழுதப்பட்ட கவிதை.

வயதுகள் உனக்கு
வரம்
தொண்டு உனக்கு
உரம்
நீ அதனால்
நிரந்தரம்

என்பவை முழுக்கவிதையில் சில வரிகள்.

மேத்தா. மு, **இமயத்திற்குப் பொன்னாடை**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர்,

திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, **1999.**

உன் வசனம்
கவிஞர்களுக்கு வகுப்பெடுத்தது
உன் வாழ்க்கை
தமிழ் நாட்டுக்குச் சுளுக்கெடுத்தது.
என்பது போன்று கலைஞரின் பெருமை பேசும் கவிதை.

வேழவேந்தன். கா, **மலர்களின் நாயகன்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பைக் கவிதை நடையில் கருத்தோவியமாகத் தீட்டிக் காட்டும் கட்டுரை.

ஈரோடு தமிழன்பன், **தலைவர் கலைஞரின் கவிதைகளில் ஒரு காவியப் பரிமாணம்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கலைஞரின் கவிதை ஆளுமையைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்ச்சியில் வைத்து விளக்கிச் சொல்லும் முயற்சியின் விளைவு இக்கட்டுரை.

அப்துல்ரகுமான். கவிக்கோ, **நீயே உனக்கு உவமை,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

உன்னைவிட
உயர்ந்ததாய்
உவமை எதுவும் இல்லை
ஒரே ஓர்
உவமைதான் உண்டு
நீதான் அது –ஆம்
உனக்கு உவமை
நீயேதான்...
என்பன முழுக்கவிதையில் சில வரிகள்.

கண்ணதாசன், **சதாவதானத் திறமை,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை **1999.**

தன்னையறிந்து பிறர்உளம் நோக்கல்
நதியென ஓடி நா ளெலாம் உழைத்தல்.
என்பது கலைஞரின் சிறப்பு என்பதைச் சொல்லும் கவிதை,

பொன்னிவளவன், **தென்றலுக்கும் மெய் சிலிர்க்கும்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கடல் ஆழம் அறிந்திடலாம்
ஆனால் நீயோ

கடலைவிட மிக ஆழம்
என்னும் கவிதை வரிகளைக் கொண்ட கவிதை.

முத்துக்கிருட்டின நாட்டார். சி, **மலைபோல வாழ்க மகிழ்ந்து**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கலைஞரின் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் **92** வயது நிரம்பிய நிலையில் கலைஞரின் பவள விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துக்கவிதை.

இறையரசன். பாவலர், **கொள்கை முரசம்** மணிமேகலைப் பதிப்பகம், சின்னத்தாராபுரம், முதற்பதிப்பு, டிசம்பர் **1999** , பக்.**220.**

கலைஞர் பற்றியும் கலைஞருக்குத் துணைநிற்கும் கழக முன்னோடிகள் பற்றியும் நூலாசிரியர் பாடிய பாடல்களில் தொகுப்பு .

வைரமுத்து கவிஞர், **பூக்களும் நீயே வேலியும் நீயே,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

கலைஞரின் பவளவிழாவிற்காக எழுதப்பட்ட கவிதை. சான்றுக்கு,
கதைகள் தூங்கினாலும்
ஓயாமல் பேசும் அலைகள் போல
தமிழர் தூங்கினாலும்
அடித்தல் ஓயவில்லை
உன் அரைநூற்றாண்டு அலைகள்.

சகுந்தலா வெங்கடாசலம். தெ, **கலைஞரின் கவிதைச் சிற்பங்கள்**, அருள் பதிப்பகம், குன்னூர், முதற்பதிப்பு, டிசம்பர் **1999**, பக்.**152.**

கவிதையும் யாப்பும்
கலைஞரின் உவமைத்திறன்
கலைஞரின் கற்பனைத்திறன்
கலைஞரின் சொல்லாட்சி
கலைஞரின் மொழிநடை
இராமாயணமும் கலைஞரின் சிந்தனைகளும்
கலைஞரும் சமூகமும்.
ஆகிய தலைப்புகளில் அமைந்த கலைஞரின் கவிதைகள் குறித்த ஆய்வு நூல்.

நிர்மலா சுரேஷ், **எப்போதும் உதயம்**, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் **1999**, பக். **109.**

நூலாசிரியரின் கவிதையில் சொல்லுவதானால்,
'ஒரு சகாப்தமாய்
வாழ்பவரைப் பற்றிய
நம் சமுதாயத்தின்
கருத்துக்களை
என் எழுதுகோல்

கருவியாயிருந்து
பதிவு செய்கிறது'
இந்நூல் எனலாம்.

முத்துசாமி. பி.கே, **கலைஞர் பிள்ளைத்தமிழ்**, நித்தியம் பதிப்பகம், புதுப்பட்டி, நாமக்கல், முதற்பதிப்பு, 2000, பக். 96.

பிள்ளைத்தமிழ் மரபில் கலைஞரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட நூல்.

பாலமுரளி. கெ. **இமயமே நீ வாழ்க.** கோதை பதிப்பகம், காட்டுப்பாடி, முதற்பதிப்பு, ஜுன் 2000, பக்.64.

பொதுவாழ்வில் இமயம் போல் உயர்த்தி நிற்கும் கலைஞர் அவர்களை வாழ்த்தும் கவிதைகளின் தொகுப்பு.

வெங்கடேசபாரதி. மு, **கலைஞர் ஒரு காவியம்**, தைலம்மை பதிப்பகம், சீர்காழி, முதற்பதிப்பு, டிசம்பர் 2000 பக்.16–18.

முதல்வர் கலைஞர் அவர்களின் அரசியல் – சமுதாயம் – இலக்கியப் பங்களிப்பினைக் கலிப்பா, காப்பு, வஞ்சி, விருத்தம் அறுசீர் விருத்தம், பெண்பா, அந்தாதி, ஆசிரியப்பா ஆகிய இலக்கண வடிவங்களைக் கொண்டு எழுதப்பட்ட கவிதைநூல்.

இராஜேந்திரன். பி.எல், **கலைஞர் கவிஞரே**, செந்தமிழறிஞர் கலைஞர் 77–வது பிறந்த நாள் சிறப்புமலர், இசைவேளாளர் முற்போக்குப் பேரவை. சென்னை, 2000, பக்.144–117.

கலைஞர் ஒரு உயர்ந்த கவிஞர் என்பதைப் பதிவு செய்யும் கட்டுரை.

பண்டரிநாதன், இரா, **கலைஞர் கருணாநிதி விறலி விடு தூது**, மாரியம்மாள் பதிப்பகம், தென்னமநாடு, முதற்பதிப்பு 2000, பக்.118.

தூது நூல் மரபில் சமூக அக்கறையுடன் கலைஞர் அவர்களைப் பற்றிப் பாடப்பட்ட நூல்.

அன்பழகன், தூத்துக்குடி, மோ, **கலைஞருக்குச் சூட்டும் காவியமாலைகள்**, தில்லை அச்சகம், தூத்துக்குடி, 1.5.2000, பக்.104.

கலைஞரின் எழுத்துலகம் குறித்த தகவல்களின் தொகுப்பு.

சேதுராமன். வா.மு, **திருவள்ளுவர் கலைஞர் அந்தாதி**, பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், சென்னை, முதற்பதிப்பு, 2000, பக்.16.

பெரும்பேறு பெற்ற கலைஞரை வாழ்த்தி வணங்கும் நோக்கில் அந்தாதி என்னும் இலக்கிய வடிவில் அமைந்த நூல்.

புரட்சிமணி. காரை, **சொலிக்கும் சொத்து**, வெற்றி பதிப்பகம், வடவேர் குடவாசல், முதற்பதிப்பு, ஏப்ரல் 2001, பக்.26

புத்தகத்தில் அடக்க முடியாத கலைஞரின் வாழ்க்கையை சொலிக்கும் சொத்தாக சிறுநூலில் கவிதை வரிகளில் கொடுக்கும் முயற்சியின் விளைவு.

சிலோன் விஜயேந்திரன், **மு. கருணாநிதி,** இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும், நேஷனல் புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2001, பக். 362–363.

இக்கட்டுரை கலைஞரின் கவிதைச் சிறப்பை, அவரது கவிதைகள் கொண்டு விளக்குகிறது.

பார்த்திபன். பா, **கவிநானூறு,** புதிய தென்றல், சுரா. (தொ.ஆர்.) சிந்தையன்கோட்டை, முதல்பதிப்பு, 2002, பக்.376.

கலைஞர் அவர்கள் தமிழுக்கு, தமிழ் நாட்டுக்கு, உலகத் தமிழனுக்கு ஆற்றிய சாதனைகள் குறித்து 400 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு.

எழிலன். தங்கவயல் பெ, **களங்கண்ட கலைஞர்**, மாங்குயில் பதிப்பகம், பெங்களூர், முதற்பதிப்பு, 2004, பக். 36.

கலைஞர் வாழ்வில் நிகழ்ந்த போராட்டக்களங்கள் பல. அதில் சிலவற்றைப் பாடல் வடிவில் சொல்லும் முயற்சியின் விளைவு.

ஆனந்தன். புலவர் க, **தமிழ்ப் பெருங்கடல் கலைஞர் பிள்ளைத் தமிழ்**, காந்திமதி பதிப்பகம் , சென்னை. முதற்பதிப்பு , ஏப்ரல்2004, பக் .100.

கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைப் பிரபந்த வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வடிவத்தில் பாடப்பட்ட நூல்.

முரளி. கோ, **திறனாய்வு நோக்கில் கலைஞரின் கவிதைகள்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், டிசம்பர் 2004, பக். 126.

கலைஞரின் கவிதைகளை ஆய்வுக்குட்படுத்தி, அவற்றின் சிறப்பியல்புகளை இனம் கண்டு விளக்குவதாக அமைந்துள்ள இவ்வாய்வேடு.
கலைஞரின் வாழ்க்கையும் வரலாறும்
கலைஞரின் கவிதைகளில் தமிழ்
கலைஞரின் கவிதைகளில் குறள்
கலைஞரின் கவிதைகளில் காதலும் வீரமும்
கலைஞரின் கவிதைகளில் ஆரியம்.
ஆகிய இயல்களைக் கொண்டுள்ளது.

முருகநாதன். செ, **கலைஞரின் கவிதை மழை**, முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 2005, பக்.328.

கவிதைக்களங்கள்,
கற்பனை நலம்,
நடை நலம்,
அணிநலம்,
தமிழின உணர்வுகள்,
சமுதாய உணர்வுகள்,
பாட்டுடைத்தலைவர்கள்
ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள ஆய்வேடு.

சுப்பையா. ஒடப்பட்டி, **கலைஞரின் போர்க்களங்கள்,** ராஜராஜேஸ்வரி புத்தகாலயம், சென்னை, 2005, பக். 116.

கலைஞரின் பன்முகப் போராட்டங்களை கவிதையில் பதிவுசெய்யும் முயற்சியின் வெளிப்பாடு.

ஆலீஸ்.அ, **கலைஞர் கருணாநிதியின் கவிதையில் கருத்துப் புலப்பாடு,** கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.71–76.

கலைஞரின் கவிதைகளில் சொல், தொடர் சார்ந்த நடையியற் கூறுகளும் பொருத்தமான உவமைகளும் நடப்பியல் கருத்துகளின் இணைப்பும் பொருத்தமுற அமைந்து விளங்கும் பாங்கினை விளக்கும் கட்டுரை.

நாகநாதன்.மு, **காலப்பேழையும் கவிதைச் சாவியும், ஒரு வரலாற்று இயல் பார்வை,** முரசொலி–பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 2006. பக்,57–59, 62–63.

கலைஞரின் காலப்பேழையும் கவிதைச்சாவியும் வரலாற்று இயலின் ஒரு புதிய நெறியாக, அணுகுமுறையாகச் செம்மொழித் தமிழில் முத்திரை பதித்து வரும் பாங்கைச் சுட்டும் கட்டுரை.

இறையரசன். பாவலர், **தமிழினத்தலைவர்**, மணிமேகலை பதிப்பகம், சின்னதாராபுரம், முதல் பதிப்பு, 2006, பக். 200.

கலைஞர் அவர்களின் சீரும் சிறப்பும், ஒல்காப்புகழும், தொண்டும் தியாகமும், குன்றாத் தலைமையும், ஒய்வற்ற உழைப்பும், உறங்கா உள்ளமும், நல்லோர் போற்றும் நயத்தகு நாகரிகமும் வியந்தேத்தும் ஆர்வத்துடன் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

வாலி. கவிஞர், **கலைஞர் காவியம்**, குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2006, பக். 136.

கலைஞர் அவர்களைப் பற்றி, கவிஞர் வாலி பல்வேறு காலகட்டங்களில் எழுதிய 21 தலைப்புகளில் அமைந்த கவிதைகளின் தொகுப்பு. கலைஞர் அவர்களைப் பற்றி வெண்பாக்களிலும், எண்கீழ்–விருத்தங்களிலும் பாடப்பட்ட கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

நீ
தடியெடுத்த

தந்தைப் பெரியாரையும், போடப்
பொடியெடுத்த
பேரறிஞர் அண்ணாவையும், ஒருங்கே
படியெடுத்த மாதிரி
பினங்குகின்றாய், அவர்கள்
முடிவெடுத்த மாதிரி–எதிலும்
முனைந்து இறங்குகின்றாய்.

என்னும் கவிதை அட்டையை அலங்கரிக்கிறது.

நண்ணன். மா, (தொ. ஆர்), **கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன்,** ஏகம் பதிப்பகம், சென்னை, 2006, பக். 15–144.

கலைஞர் குறித்து மூவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பு.

பட்டாபிராமன். துரை, **முத்தமிழறிஞர் கலைஞர் பிள்ளைத் தமிழ்**, பிரியா பதிப்பகம், அண்ணாமலை நகர். இரண்டாம் பதிப்பு, 2006, பக்.101.

மனிதப் பண்புகளும், வாழ்வியல் நலங்களும், செயல் திறனும், தொலைநோக்குச் சிந்தனையும் ஒருங்கே கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் மீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் நூல்.

கருப்பையா. மோகை, **செந்தமிழ்ப் பரணி**, சாத்தர்மலைப் பதிப்பகம், மோகனூர், இரண்டாம்பதிப்பு, ஜூன் 2007, பக். 288

கலைஞர் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பரணி இலக்கிய வடிவில் பாடப்பட்டுள்ள நூல்.

வீராசுவாமி. அ, **அஞ்சுகச் செல்வம்**, வீ.கார்த்திகேயன், சென்னை, முதற்பதிப்பு, 2007. பக்.32.

சட்டமன்றப் பொன்விழா கண்ட முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்தி எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

அனுபமா. கவிஞர், **கருணை வள்ளல் கலைஞர்**, ஸ்ரீநிதி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதல்பதிப்பு, நவம்பர், 2007, பக்.52.

பண்பிழந்துவரும் அரசியல் களத்தில் மாண்புகளைக் காக்கும் பண்பாளர் கலைஞர் அவர்களைப் பற்றி 52 தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பு.

நாச்சிகுளத்தார், **தமிழால் உயர்ந்த தலைவர்,** நாச்சிகுளத்தார் பதிப்பகம், உதயமார்த்தாண்டபுரம், முதற்பதிப்பு, பிப்ரவரி 2007, பக்.224.

கலைஞர் அவர்களின் உயர்வைக் கவிதைச் சரத்தில் கோக்கும் முயற்சியின் விளைச்சலாக அமைந்த நுல்.

இலக்குவனம் பட்டமங்கலம். வி, **சித்திரப் பாக்களில் செம்மொழிக் காவலர்**, செம்மொழி நிலையம், சென்னை , முதற்பதிப்பு , டிசம்பர் 2007 பக்.160.

கலைஞர் என்னும் கவின்மிகு சித்திரம் (படம்) கிட்டத்தட்ட நூறு ஆண்டுகால கலைஞரின் தமிழ்த் தொண்டையும், கலைஞரின் சமூகப் போரட்டத்தையும், தமிழக அரசியல் வரலற்றையும் உணர்த்தும் ஒரு மாபெரும் வரலற்றுக் காவியம் என்பதை எடுத்து விளக்கும் செய்யுள் வடிவ நூல்.

மாரிமுத்து. முத்துமொழி, **கலைஞர் வெற்றிமாலை**, நந்தா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2007, பக். 32.

கலைஞரின் வெற்றி குறித்துப் பாடும் கவிதைகள்.

பிரபாகரன். போடி, **அரியணை ஏறிய அருந்தமிழ், ...**, போடி, முதற்பதிப்பு, 2007, பக்.117.

கலைஞரின் நாடாளும் வன்மை கண்டு, அவரின் செயல்களைத் தமிழ்பேசும் உலக மக்களுக்குக் கூறிட எண்ணியதன் விளைவு இக்கவிதை நூல்.

சண்முகசுந்தரம். சு, **கலைஞர் பிள்ளைத்தமிழ்**, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2008, பக்.100.

இந்நூலில் கலைஞரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரின் வாழ்க்கை வரலாறு பிள்ளைத்தமிழ் எனும் இலக்கிய வகைமையில் பாடப்பட்டுள்ளது.

ஈரோடு தமிழன்பன், **கலைஞரின் கவிதைகளில் ஒரு காவியப்பரிமாணம்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 229 – 238.

கலைஞரின் கவித்துவமேன்மையை 'இனமான ஏந்தல்கள்' என்கிற கவிதையில் இராவணன் போர்க்களத்தில் வீடணனால் வீழ்த்தப்பட்ட காட்சியைக்கொண்டு விளக்கும் இக்கட்டுரை கலைஞரின் கவிதையில் காவியப் பரிமாணம் வெளிப்படும் மாண்பினை எடுத்துக்காட்டுகிறது.

தட்சணாமூர்த்தி. பி, **கலைஞர் கவிதையின் உயிர்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 239 – 243.

25.8.2007–ல் ஐதராபாத் குண்டுவெடிப்பில் 43 பேர் பலியானதும் பலர் காயமுற்றதும் அறிந்த கலைஞர், தீக்காற்று தென்றலாகுமா? என வரைந்த நெஞ்சைத்தொடும் கவிதை 28.8.2007–ல் 'தினத்தந்தி' நாளிதழில் வெளிவந்தது. தீவிரவாதத்தைக் கண்டித்துக் கலைஞர் எழுதிய நெஞ்சைத்தொடும் அக்கவிதையில் காணும் உயிர் பற்றி எழுதப்பட்ட கட்டுரை.

அழகிய நம்பி. முனைவர் க, **கலைஞரின் கவிதைகளில் எண் சுவைகள்**,

கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 250 – 256.

கலைஞர் கவிதைகளில் காணும் மெய்ப்பாட்டுணர்ச்சிகள் எட்டையும் சான்றுகாட்டி விளக்கும் கட்டுரை.

விசயலெட்சுமி இராமசாமி, **கலைஞர் கவிமழையில் சிலதுளிகள்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 257 – 263.

கலைஞர் கவிதைகளில் காணும் கவிவளத்தை, கவிதைக்குத் தரும் விளக்கம், நகைச்சுவை, தமிழ் உணர்வு, பொங்கலின் சிறப்பு, ஐம்புலன்களின் அடக்கம், சந்தக் கவிதைகள் ஆகியனவற்றைக் கண்டு விளக்கும் கட்டுரை.

மணிமாறன். கடவூர், **கலைஞரின் கவிதைகளில் அண்ணாவும் பெரியாரும்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.264 – 269.

கலைஞரின் கவிதைகளில் அண்ணாவும் பெரியாரும் இரட்டைக்கிளவிபோல இணைபிரியாது இடம் பெற்றுள்ள பாங்கினைக் கண்டு விளக்கும் கட்டுரை.

வெங்கடேசன். ந, **டாக்டர் கலைஞர் கவிதைகளில் உவமைநயம்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.270–274.

கலைஞரின் கவிதைகளில் காணும் உவமை நயங்களை வினை (அல்) தொழில் உவமை, பயன் உவமை, மெய்உவமை, உருவஉவமை என வகைப்படுத்தி உரைக்கும் கட்டுரை.

நடராசன். மு. ந, **கலைஞரின் கவிதை இலக்கியம்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, முதற்பதிப்பு, மே 2008, பக். 275–284.

கலைஞரின் தமிழ்ச்சமூகப் பணிக்கு இடையூறான பகைவர்களைக் குறிக்கும் கவிதையில் தொடங்கி அவரின் அறுபதாண்டுகால சாதனைகள், பழைய நீர்வழிப்பாதைகளைத் தொகுத்து புதியபாதை எனும் தலைப்பில் அமைந்த கவிதையின் சிறப்பு முதலியவற்றை விளக்கும் கட்டுரை.

இரவிக்குமார். பா, **கலைஞர் கவிதைகளில் அரசியல் தலைவர்கள்,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 285–291.

அரசியல் தலைவர்களின் உருவங்களைக் காட்சிப்படுத்துதல் கொள்கைகளை எடுத்துரைத்தல், இயல்புகளை வெளிப்படுத்துதல், வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுகூர்தல் என்ற நிலையில் பெரியார், அண்ணா, ஜீவா, நேரு, காமராசர் ஆகிய தலைவர்களைக் கலைஞர் கவிதைகள் காட்சிப்படுத்திக்காட்டும் பாங்கை இக்கட்டுரை கண்டு விளக்குகிறது.

ஜெயலட்சுமி. மு, **கலைஞர் கவிதையில் பொதுவுடைமைக் கருத்தியல்**, கலைஞர்

படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 396–400.

கவிதைகளின் மூலம் பொருளாதார நிலையில் சமூகத்தின் கடைக்கோடியில் வாழும் ஏழை–எளிய மக்களின் மீட்சிக்குரிய வலுவான பொதுவுடைமைக் கருத்தியலை எளிய நடையில் கலைஞர் எடுத்து வைத்த பாங்கைக்கண்டு விளக்கும் கட்டுரை.

ஹேமலதா. தி, **கவிதைமழை மொழியமைப்பு,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 390 – 395.

கலைஞரின் 'கவிதைமழை' கவிதைத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளை மொழியியல் நோக்கில் ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

சுப்புலட்சுமி, முனைவர் மு, **கலைஞரின் காலப்பேழையும் கவிதைச் சாவியும் படைப்பில் கருத்துப் புலப்பாடும் அழகியல் கோட்பாடும்.** கலைஞர் படைப்புலகமும், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை. சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக். 77–83.

கலைஞரின் கவிதைப் படைப்பான காலப்பேழையும் கவிதைச் சாவியும் எனும் நூலில் காணும் கலைஞரின் கருத்துப் புலப்பாட்டுத் திறனையும், அதோடு ஒன்றிணைந்த அழகியல் கோட்பாட்டையும் சான்று காட்டி நிறுவும் கட்டுரை.

இராமமூர்த்தி. முனைவர் .ச, **கலைஞரின் காலப்பேழையும் கவிதைச் சாவியும், செலுத்துநிலைத் திறனாய்வு,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு. மே 2008, பக். 84–90.

பேராசிரியர்கள் அ.சா.ஞானசம்பந்தம், தா. ஏ. ஞானமூர்த்தி, தமிழண்ணல் ஆகியோரும், டப்ள்யூ.எச்.வாட்கசு செலுத்துநிலைத் திறனாய்வு அல்லது விதிமுறைத் திறனாய்வுக்குத் தரும் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு கலைஞரின் காலப் பேழையும் கவிதைச் சாவியும் எனும் கவிதை நூலைத் திறனாய்வு செய்யும் கட்டுரை.

அழகேசன், முனைவர் சு. **காலப்பேழையும் கவிதைச் சாவியும் உணர்த்தும் தமிழர் வரலாறு,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே.2008, பக். 103–107.

காலப்பேழையும் கவிதைச் சாவியும் எனும் கலைஞரின் படைப்பில் காணும் வரலாற்றுச் செய்திகளை விளக்கும் கட்டுரை.

சீனிவாசன், பேராசிரியர் நம், **காலப்பேழையில் கொள்கை முழக்கம்,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை. அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக். 108–114.

காலப்பேழையும் கவிதைச்சாவியும் எனும் நூலில் தந்தை பெரியாரின் கருத்துகளைக் கலைஞர் அழகு தமிழில் கொள்கை முழக்கமாக எவ்வாறு

தந்துள்ளார் என ஆராயும் கட்டுரை. ஆரிய திராவிடப் பண்பாடு விளக்கம், பகுத்தறிவு முழக்கம், சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, தமிழர் திருமணம், குடும்பக் கட்டுப்பாடு, வினாயகர் வருகை ஆகியன பற்றிய உட்தலைப்புகளைக் கொண்டது.

கருணாநிதி. மு, **கலைஞர் கவிதைகளில் நாட்டுப்புறவியல் கூறுகள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 307–313.

உழவர் பெருமை, சிறுவர் விளையாட்டுகள், மகளிர் பழக்கவழக்கங்கள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புறப் பழமொழிகள் முதலிய நாட்டுப்புறவியல் கூறுகள் கலைஞர் கவிதைகளில் வெளிப்படும் பாங்கினைக் கண்டுவிளங்கும் கட்டுரை.

சுப்ரமணியன். ஆ, **கலைஞர் கவிதைகளில் கற்பனை – உளவியல் நோக்கில் ஒரு பகுப்பாய்வு**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.314 – 321.

மீள் ஆக்கக்கற்பனை, ஆக்கக்கற்பனை, படைப்புக்கற்பனை, பயன்வழிக்கற்பனை அழகுணர்கற்பனை என்றவாறு உளவியல் அடிப்படையில் உவமைப்படுத்தப்படும் கற்பனைகள் கலைஞரின் படைப்புகளில் காணப்படும் பாங்கினைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பூலோகரம்பை. ஏ, **கலைஞரின் கவிதை உத்திகள்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.326 – 334.

கலைஞரின் கவிதைகளைப் புதிய திறனாய்வாளர்களின் உத்தி முறையில் ஆராயும் இக்கட்டுரை, உயர்வாக்கம், முரண்நயம், தொல்முரண், பொருள்முரண், நிகழ்ச்சிமுரண், உணர்ச்சிமுரண், உவமைமுரண், தலைப்புமுரண், தத்துவமுரண், அங்கதம், படிமம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளது.

வள்ளிநாயகம். அ, **கலைஞர் கவிதைப் படைப்பில் கவரும் உத்திகள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 335–340.

இனிய தமிழ், பாசப்பிணைப்பை வெளிப்படுத்தும் பாங்கு, கேட்போரை மனங்குளிரவைக்கும் தன்மை, ஒருசொல் இருபொருள்படப்பேசுதல், ஒப்பீடு, இடத்திற்கேற்ற சொல் வீச்சு, புதிர், நகைச்சுவைப்பாங்கு என மக்களைக் கவரும் உத்திகளைக் கவிதையில் கலைஞர் கையாளும் பாங்கினை விளக்கும் கட்டுரை.

கலைவேந்தன். மு, **கலைஞரின் கவிதை மழையில் கண்ணீர் வெள்ளம்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 350–357.

கலைஞர், அறிஞர் அண்ணாவின் இறப்பின்போது (1960 பிப்ரவரி 2) வானொலியில் நிகழ்த்திய கவிதாஞ்சலியாம் கல்லறைக் காவியத்தை ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

குழந்தைவேலு. மு, **கலைஞர் கவிதைகளில் கற்பனை உவமை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 361–368.

கலைஞரின் கவிதைகளில் காணப்படும் கற்பனை வளத்தையும், உவமை நயத்தையும் ஆராய்ந்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பவித்ரா. மு, **கலைஞரின் கவிதைத்திறம்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 369 – 374.

கலைஞரின் கவிதைத்திறத்தை எளிமை, தன்னடக்கம், உணர்ச்சி, கற்பனை, உவமை, சொல்லாட்சி, ஒலிநயம், பாடுபொருள்கள், சமகால உணர்வு எனப் பாகுபடுத்திக்காணும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

சாரதா. சு, **கலைஞரின் கவிதைகளில் மானிட மேதைகளும் உவமைகளும் – ஒரு பார்வை.** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 375–382.

கலைஞரின் கவிதையில் அவர் ஏற்றுப்போற்றும் சமகால அறிஞர்கள் பெரியோர்கள் ஆகியோரையும் தம் கவிதையில் வரும் காப்பியக்கதை மாந்தர்களையும் கலைஞர் தம் உவமைகளின் வாயிலாக ஒப்பிட்டு விளக்குவதை எடுத்துரைக்கும் கட்டுரை.

கண்ணதாசன். ஆ, **கலைஞரின் கவிதை மழையில் பெண்ணியச் சிந்தனைகள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 383–389.

கலைஞர் பேசும் பெண்ணியம் என்பது தமிழ்ப் பெண்ணியமாகும். பெண்களைப்பற்றிய இந்துசமயக் கருத்தியலைக் குறிப்பாகக் குழந்தை மணத்தை, விதவைக் கொடுமையை, உடன்கட்டை ஏறலை, வரதட்சனைக் கொடுமையை, பெண் சிசுக்கொலையைக் கலைஞர் எதிர்க்கிறார். காதலையும், சாதிமறுப்பு மணத்தையும் ஆதரிக்கிறார் என்பது இக்கட்டுரை வெளிப்படுத்தும் ஆய்வு முடிவாகும்.

சத்யா. செ, **கலைஞரின் கவிதைகளில் இலக்கியச் செறிவுகள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 407 – 411.

'கலைஞரின் கவிதைகள்' எனும் நூலில் காணும் பல்வேறு இலக்கியச் சிறப்புகளை ஆய்வு நோக்கில் கண்டு விளக்கும் கட்டுரை.

எழில்வளவன். செ, **கவிதைக்கலை வல்லுநர் கலைஞர்,** கலைஞர் படைப்புலகம்

ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக்.**412 – 416.**

'கலைஞருக்குக் கவிதைக்கலை தன்வயப்பட்ட வித்தையை, தமிழ்க் கவிதைநல்லாள் கலைஞருடைய கவிதைகளால் அழகு பெற்ற சிறப்பை ஆய்வுநோக்கில் விளக்குவதாக அமையும் இக்கட்டுரை கலைஞரின் கவிதைப் படைப்புகள், கலைஞரின் கவியுள்ளம், முத்துக்கவிதைகளில் முத்தமிழறிஞரின் முகம் ஆகிய உட்தலைப்புகளில் அமைந்துள்ளது.

சுந்தரி. இரா, **கலைஞர் கருணாநிதி கவிதைப் பரிமாணங்கள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **417 – 422.**

கலைஞர் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்களைத் தாயன்போடு அணுகும் பாங்கு, தமிழும் தமிழரும் இன்றியமையா இடம்பெறும் தன்மை, யாப்பு நெறிகளின் மீது கலைஞர் கொண்டுள்ள மதிப்பு, பெண்ணுரிமையினை வெளிப்படுத்தும் பாங்கு, அறிவியல் மனப்பான்மை ஆகியன அனைவருக்கும் வேண்டுமென வற்புறுத்தும் அதேவேளையில் அறிவியலால் ஏற்படும் தீமைகளையும் அறிவுறுத்தும் தன்மையையும் எடுத்து விளக்கும் கட்டுரை.

கோவிந்தராசன். மு, **கவிதைமழை – பன்முகப்பார்வை, கலைஞர் கவிதைகள் – அண்ணா கருத்து,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008** , பக்.**423–428.**

கலைஞரின் கவிதைகள் குறித்த அண்ணாவின் கருத்து, கலைஞர் பற்றி அண்ணாவின் புகழுரை, கவிதை மழை நூலமைப்பு, கவிதை மழையின் சொல்லாட்சித்திறன், உவமைகள், கலைஞரின் மொழிநடை, பெண்மை, நாட்டுப்பற்று, பழமொழியைக் கையாளல், தமிழர்பெருமை ஆகியன இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

அசோகன். உரு, **கலைஞர் கருணாநிதியின் 'மீசை முளைத்த வயதில்' –** பன்முகப்பார்வை, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **429 – 433.**

கலைஞரின் 'மீசை முளைத்த வயதில்' எனும் படைப்பில் கலைஞரின் படைப்பாளுமைத்திறன் வெளிப்படும் பாங்கினையும் கலைஞர் தன் வாழ்வின் சிறப்புகள், மகிழ்ச்சிச் சூழல்கள், நூல்நயங்கள், கற்றறிந்த செய்திகள், உணர்வைத்தூண்டிய நிகழ்வுகள், இயற்கைக்காட்சிகள் எனத் தன் சிந்தைக்கும் செவிக்கும் உணர்வூட்டிய நொடிகளையெல்லாம் படைப்பாக்கித் தந்து தனிச் சின்னமாய் படைப்புலகில் உயர்ந்து நிற்கும் பாங்கினையும் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராசலட்சுமி. பா, **கலைஞரின் கவிதைமழை** – பன்னோக்குப் பார்வை, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008**, பக். **434 –437.**

கலைஞரின் 'கவிதை மழை'யில் வெளிப்படும் கலைஞரின் பன்முக ஆற்றலைக்

காண்பதாகவும் சங்க நோக்கையும், தொன்மைக் கட்டுடைப்பையும் கண்டுவிளக்குவதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

செல்லப்பன். கா, **'மீசை முளைத்த வயதினிலே'** எனும் கவிதைப் படைப்பில் கலைஞரின் படைப்பாக்கத்திறன், கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 438 – 442.

கலைஞர் அவர்களின் இளமைக்காலத்துக் கவிதைகளை உரையாக்கம் எனக் குறிப்பிட்டு, அக்கவிதைகளில் சமூக அக்கறையும் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் காதலாய் வெளிப்படும் பாங்கைக் கண்டு விளக்குவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

அரங்கனடிகள், அருட்கவி, **கலைஞரின் படைப்புலகம்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக், 842–849.

இலக்கியம் என்றால் என்னவென்று தெரியாத காலத்தில் சாதாரண மக்கள் மத்தியில் இலக்கியத்தைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்த கலைஞரின் கவிதைச் சிறப்பு மற்றும் படைப்புச் சிறப்பு குறித்துப் பேசும் கட்டுரை.

கனல் மைந்தன்., **முரசொலியில் கலைஞரின் இரங்கல் பார்வை**, கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.948–951.

ஈழத்தந்தை செல்வா அவர்களின் மறைவுக்குக் கலைஞர் எழுதிய இரங்கற் கவிதையை வரலாற்றின் வழி நின்று பார்க்கும் கட்டுரை.

அந்தோனி செல்வகுமார். சு, **கலைஞரின் கவிதைகளில் புராணமாந்தர்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008.

புராண மாந்தர்களான இராவணன், பிரகலாதன், அனுமன், குசேலன் முதலியோரைக் கவிதைகளில் கலைஞர் படைத்துக்காட்டும் பாங்கைக் கண்டுவிளக்கும் கட்டுரை.

இளையபாரதி. கவிஞர், **வாழ்வை உயிர்ப்புடன் வைத்திருப்பவர்**, இந்தியாடுடே (மு. கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, ஜூன் 2008, பக். 84–85.

கலைஞரது உயிர்ப்பின் ரகசியம் அவருடைய கவி மனதும் கவச குண்டலங்களாய் இணைந்த கவித்துவமும் என்பதைச் சொல்லும் கட்டுரை.

கலாப்ரியா. கவிஞர், **நெசவாளர் உலகில் கவிநெசவாளர்**, இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, ஜூன் 2008, பக். 104–105.

நடப்பு அரசியல் சூழலை லபக்கென்று கவிதை வரிக்குள் கொண்டு வரும் கலைஞரின் கவி ஆற்றலைச் சொல்லும் கட்டுரை.

தமிழச்சி தங்கபாண்டியன், **திராவிடம் பேணும் தீப்பிழம்பு**, இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, ஜூன் 2008, பக். 108–109.

கலைஞரின் கொள்கைப் பிடிப்புக் குறித்துப் பேசும் கட்டுரை.

அனந்தம்மாள் செபஸ்தியான், **கலைஞர் மு.கருணாநிதியின் கவிதை மழையில் பெண்கள்**, கலைஞர் மு.கருணாநிதியான் படைப்பிலக்கியங்கள், தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2008, பக்.41–46.

சமுதாய அவலங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் சொல்லும் முற்போக்குச் சிந்தனைக் களஞ்சியமாகத் திகழும் கலைஞரின் கவிதை மழை கவிதைத் தொகுப்புக் காட்டும் பெண்கள் நிலையை விளக்கும் கட்டுரை.

இரமேஷ். ச, **சமுதாயவியல் நோக்கில் கலைஞர் கவிதைகள்**, கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள். தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர்.2008. பக்.79–85.

கலைஞர் தம் கவிதைகள் வழி சமுதாயத்திற்குச் சொல்லும் செய்திகளாக, சமுதாயத்தின் மீது அரசு அக்கறை கொள்ள வேண்டும். மக்கள் அனைவரும் நற்சிந்தனை உடையவராக இருத்தல் வேண்டும், சமதர்மம் நிலவவேண்டும், சாதி, பெண்ணடிமை இல்லா நாடாக நம்நாடு விளங்கவேண்டும் ஆகியனவற்றைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கிறிஸ்துராஜேஸ். வி.கி, **கலைஞரின் கவிதைகளில் குறள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 153 – 158.

உலகப் பொதுமறையாம் குறளை அதன் சிறப்பை, அதன் தனித்தன்மையை கலைஞா தம் கவிதைகளில் சிறப்புற எடுத்துக் காட்டுவதைக் கண்டு விளக்கும் கட்டுரை.

சர்மிளா. பெ, **கலைஞரின் ஒருதலைக் காதல் காட்டும் பண்டைத் தமிழர் பண்பாடு**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – மி, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 170 –173.

ஒருதலைக் காதலில் பெண்பாற் புலவர் ஒருவரின் உள்ளக் காதலை உயிரோவியமாய்ப் படைத்ததோடு, அதன்வழி பண்டைத் தமிழர்களின் பண்பாட்டினைக் கலைஞர் எடுத்தியம்பியுள்ள திறத்தை விளக்கும் கட்டுரை.

சந்திரசேகர். இரா, **கவிதை மழை என்னும் கவிதைத் தொகுப்பில் கலைஞரின் தமிழ் உணர்வு**, கலைஞர். மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – I, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 174 – 177.

'கவிதை மழை'யில் காணக்கிடக்கும் கலைஞரின் தமிழ்ப் பற்றினையும், தமிழ் உணர்வினையும் விளக்கும் கட்டுரை.

சையத் ஜாகிர் அசன். முனைவர் அ, **கலைஞரின் கவிதைகளில் சொல் விளையாட்டு**, கலைஞர். மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – I,

வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 217 – 223.

கலைஞர் தன் கவிதைகளில் ஆடும் சொல் விளையாட்டுகளைக் கண்டு விளக்கும் கட்டுரை

நாகநாதன். நா, **கலைஞர் கருணாநிதியின் கவிதைகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி – I, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 254 – 258.

கடவுளின் பெயரால் நிகழும் தேவையற்ற சடங்கு முறைகளைச் சாடி மக்களை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் கலைஞர் கவிதைகளின் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பிரபாகரன். சி, **கலைஞர் கவிதைகளில் பெண்ணியம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 271–274.

பெண்ணியம் போற்றிடத் தன் கவிதைகளை ஆயுதமாய்ப் பயன்படுத்தும் கலைஞரின் திறனைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பிறைமதி. முனைவர் அ, **கலைஞரின் கவிச்சாரல்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 285–289.

கலைஞரின் கவிதைகள் என்றென்றும் குற்றாலத்துச் சாரல்களாய் குளிரூட்டிக் கொண்டிருக்கும் பாங்கினைச் சொல்லும் கட்டுரை.

பிரகாசமேரி. தி, **கலைஞர் மு. கருணாநிதியின் கவிதைகளில் உவமைகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 14–20.

கவியுள்ளம் கொண்ட கலைஞரின் கவிதைகளில் காணத்தகும் உவமை நயங்களைக் கண்டு உணர்த்தும் கட்டுரை.

புனிதா. ச, **மு. கருணாநிதியின் ஒருதலைக் காதலில் காதலும் வீரமும்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 31–37.

பண்டைத்தமிழர் போற்றிய காதல், வீரம் என்னும் இரு உணர்வுகளைக் கொண்ட காவியமாக 'ஒருதலைக் காதல்' படைக்கப்பட்டுள்ளமையைச் சொல்லும் கட்டுரை.

மரியதனபால். பேரா.ஆ, **கலைஞரின் கவிதைத்திறம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 75–80.

சிந்தனைத் தெளிவும், சொல் நயமும், பொருட்சிறப்பும் கொண்ட கலைஞரின் கவிதைகளில் காணக்கிடக்கும் இலக்கியச் சிறப்புகளை எடுத்து விளக்கும்

கட்டுரை.

மல்லிகா. ச, **கலைஞரின் கவிதைகளில் தமிழ்ப்பற்று**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 81–86.

தமிழ் வேறு தான் வேறு என்றில்லாமல் தமிழோடு கலந்துவிட்ட கலைஞரின் தமிழ்ப்பற்றை அவரின் கவிதைகளின் துணைகொண்டு எடுத்து விளக்கும் கட்டுரை.

மைதிலி. கி, **கலைஞரின் கவிதை உணர்த்தும் மனித நேயம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 110–113.

இலக்கியங்கள் சமூக மேம்பாட்டிற்குரிய பணியாக மனிதநேயப் பண்புகளை வளர்த்திடல் என்பது காலத்தின் கட்டாயம் என்ற அடிப்படையில் கலைஞரின் கவிதைகளில் காணப்படும் மனிதநேயப் பண்புகளை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மோட்சஆனந்தன், ம, **கலைஞரின் கவிதைகளில் பாட்டாளியின் பெருமை**,கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 114–118.

கலைஞரின் கவிதைகளில் மிளிரும் பாட்டாளி வர்க்கத்தின் பாங்கினைக் கண்டு விளக்கும் கட்டுரை.

வினோதினி. மு, **கலைஞரின் கவிச்சோலை**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 140–144.

உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகளின் வெள்ளப் பெருக்காய்க் கலைஞரின் கவிதைகள் அமைந்துள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

விஜயபாரதி **கலைஞரின் கவிதைகள் காட்டும் ஐம்புலன்கள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள். தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2008, பக். 145–151.

ஐம்புலன்களை அடக்குதல் நலம் என்னும் கலைஞரின் கருத்தை அவரது கவிதைகள் கொண்டு விளக்கும் கட்டுரை.

விஜயராணி முனைவர், இரா, **கலைஞரின் தமிழ்க்காதல்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள். தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 158–163.

கலைஞரின் 'ஒருதலைக்காதல்' என்னும் கவிதைநூலின் வழி அவரின் தமிழ்க்காதலை உலகுக்குணர்த்தும் முயற்சியால் விளைந்த கட்டுரை.

வேல்முருகன். நா, **கலைஞர் கவிதைகளில் மனித உரிமைகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 174–178.

கலைஞரின் கவிதைகள் பேசும் மனித உரிமைகளைத் தொகுத்து விளக்கும் கட்டுரை.

செல்வக்குமாரன். முனைவர் பி, **கலைஞர் கருணாநிதியின் கவிதை மழையில் சமுதாயச் சிந்தனைகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 179–185.

சமுதாயம், சாதி, மூடநம்பிக்கை குறித்த கலைஞரின் சிந்தனைகள் அவரின் கவிதை மழையில் வெளிப்படும் தன்மையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

அடைக்கலராஜ். செ, **கலைஞரின் கவித்திறன்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 227–230.

தம் எண்ணப்பூக்களைத் தொகுத்து இனிய கவிதை மாலைகளைக் கட்டியிருக்கும் கலைஞரின் ஆற்றலைக் கண்டு விளக்கும் கட்டுரை.

எலிசபெத்ராணி. ஞா, **ஒருதலைக்காதலின் நடைச்சிறப்பு**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 247–251.

இலக்கியங்கள் நேர்த்தியாக அமைந்திட மேற்கொள்ளப்படும் உத்திமுறைகளில் ஒன்று நடை. கலைஞரின் 'ஒருதலைக் காதல்' கவிதையில் அமைந்துள்ள நடைச்சிறப்பின் நயத்தை விளக்கும் கட்டுரை.

சசிரேகா. ப, **ஒருதலைக்காதலில் அகமும் புறமும்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 252–256.

கலைஞரின் 'ஒருதலைக்காதல் கவிதை' அகம், புறம் என அழகாய் அமைந்திருந்த சங்க கால வாழ்வைச் செம்மையுற எடுத்துரைப்பதைக் காட்டும் கட்டுரை.

ஜெயக்குமார். பா, **கலைஞரும் கவிதையும்**, கலைஞர் மு. கருணாநிதி படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 272–276.

கலைஞர் தன் கவிதைக்குத் தரும் விளக்கம், நோக்கம், சமூகச் சிந்தனை போன்றவற்றால் புலப்படும் கவிதைத்திறனைக் கண்டுணர்த்தும் கட்டுரை.

கந்தசாமி. சோ. ந, **கலைஞரின் கவிதைத் திறம்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக். 25–60.

1945–ஆம் ஆண்டு முதல் கலைஞர் எழுதியுள்ள 53 பாடல்களைக் கொண்டு அப்பாடல்களில் காணத்தகும் பல்வேறு இலக்கியச் சிறப்புகளை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கருத்தாமுடி. ப, **கலைஞர் காவியம்**, நாராயணகுப்பம், 2009, பக். 67.

கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி'யை ஆதாரமாகக்கொண்டு கலைஞரைப் பற்றி எழுதப்பட்ட கவிதை நூல்.

புவனேஸ்வரி. க, **கலைஞரின் கவிதைகள்**–சில சிந்தனைகள், கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 44–50.

மரபு வழியிலிருந்து மாறி ஒரு பேச்சுப்பாணிக் கவிதையைத் தமிழ்க் கவிதை உலகிற்குக் கலைஞர் அளித்துள்ள பாங்கை இக்கட்டுரை ஆராய்கிறது.

செல்வராஜ். அ, **கலைஞர் கருணாநிதியின் கவிதைகளில் கற்பனைகளும் உவமைகளும்**, கலைஞர் படைப்பிலக்கியப்பார்வை தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 80–85.

கலைஞரின் கவிதைகளில் எதுகை மோனை சிறப்பாக அமைந்திருக்கும் பாங்கையும், கற்பனைத் திறனையும், எளிமை, புதுமை, இனிமை நிறைந்த உவமைத் திறனையும் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

விமலா ராமலிங்கம். நா, **கலைஞரின் கவிதைகள்**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 141–146.

கலைஞரின் கவிதைகள் யாவும் கட்டற்ற யாப்பில் பாடப்பட்டிருப்பினும், யாப்பின் பலகூறுகள் அவரின் கவியரங்கக் கவிதைகளில் பரவிக்கிடப்பதைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது

ஆனந்திபானு. ஜெ, **கலைஞரின் கவிதைகள்**–ஒரு மதிப்பீடு, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 238–245.

தினகரன் நாளிதழில் கலைஞர் எழுதிய கவிதைகளை முதன்மைச் சான்றாகக்கொண்டு, எளிய தமிழில், அரசியல், பகுத்தறிவு, பொதுவுடைமைக் கொள்கைகளைச் சொல்வதுடன், கனல் தெறிக்கும் எதுகை மோனைக் குறிப்புகளைக் கொண்டனவாகக் கலைஞரின் கவிதைகள் அமைந்துள்ள பாங்கை இக்கட்டுரை விவரிக்கிறது.

தேவகி. எம்.ஆர், **கலைஞரின் கருத்தோவியம்**, கலைஞரின் படைப்பிலக்கியப்பார்வை, தமிழ்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக். 296–304.

'கலைஞரின் கவிதை மழை' – நூலிலுள்ள கலைஞரின் கவிதைகளில்

காணத்தகும் கவிதைத் திறனை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது

பாலமுரளி. கெ, **தொடரும் தொண்டு...** பாலமுரளி.கெ, காட்டுப்பாடி..............., பக்.31.

77 ஆண்டுகளைத் தாண்டி 78–ஆம் ஆண்டில் நுழையும் கலைஞர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து நாட்டிற்கும் தமிழுக்கும் நற்பணிகள் பல புரிய வேண்டும் என்பதன் அடிப்படையில் எழுதப்பட்ட கவிதைகள்.

கோட்டைசாமி. (தொ.ஆர்), **கலைஞர் பாமாலை**, தமிழ்க்கொடி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு,...................,பக்.79.

மாற்றாரும் மதிக்கும் திறன் கடலாகக் திகழ்ந்திடும் ஆற்றல் நிறைந்த கவிச்செல்வர்கள் 56 பேர் கலைஞர் அவர்களைப் பற்றி பாடிய கவிதைகளின் தொகுப்பு.

தேன்மொழி. கவிஞர். **கலைஞர் ஒரு காவியம்** (வாழ்க்கை வரலாறு) தில்லைநாயகியவர் பிரஸ், வாழப்பாடி... பக்.122

சாதி, மதப் பேய்களை ஆழ் கடலுக்கும் அப்பால் துரத்திட வந்திட்ட தூய தொண்டராம் கலைஞர் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட கவிதை நூல்.

அறங்காசிம்.புலவர், **கருணாநிதி கவிமாலை**, ஜவஹர் பதிப்பகம், திருப்பூந்துருத்தி... பக்.44

கலைஞர் அவர்களைப் போற்றிப் புகழ்ந்துபாடும் கவிதைகளின் தொகுப்பு.

அருணன். தேவ.சீனி, **கலைஞர் ஒரு தர்மம்.** தெய்வம் அச்சகம், தேவகோட்டை, ..., பக்.14.

அறத்திற்கே நாயகனாய் விளங்கும் ஆற்றல்மிகு கலைஞரின் சிறப்பைப் போற்றும் கவிதைகள்.

இளஞ்செழியன். சு, **அரசியல் கண்ணாடி**, செம்மொழி கலை இலக்கியப்பேரவை, தஞ்சாவூர், ..., பக்.101.

'நீர் ஓர்
அரசியல் கண்ணாடி
அரசியல்
அடிக்கடி
உன்னைப் பார்த்து
தன்னைச்
சரிசெய்து கொள்ளும்'

என்பது போன்ற கலைஞரைப் பற்றிய 98 சிறுகவிதைகளின் தொகுப்பு நூல்.

சுந்தரம், வாட்டாகுடி, '**அறிஞர் கலைஞர்**, பட்டுக்கோட்டை, ..., பக்.19.

'கலையில் கலைஞர் என்றால், இவர் அரசியலில் அறிஞர் என்று சொல்லும்

கலைஞர் குறித்த கவிதை நூல்.

கோபாலகிருட்டிணன், நா.**கலைஞர் அந்தாதி,** ஆனந்தம், தஞ்சாவூர், 2007 பக். 86.

கலைஞரவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் சுருக்கமாகத்தரும் அந்தாதிப்படைப்பு.

வெற்றியழகன், **காவியக் கலைஞர்**, பூவழகி பதிப்பகம்,சென்னை, ..., பக்.144.

கலைஞரின் பெருமைக்கும் புகழுக்கும் ஏற்ற வகையில் தமிழினம் பெறவேண்டிய உணர்வை அவர்கள் உள்ளம் ஏற்கும் வகையில் கற்பனை வளமும் கவிதை நலமும் சிறக்கும் பல்வகைப் பாக்களால் இயற்றப்பட்டுள்ள நூல்.

கவியரங்கக் கவிதைகள்

சுந்தரம்.மெ, **கலைஞரின் கவியரங்கப் பாடல் ஒரு திறனாய்வு,** கலைஞர் மணிவிழாமலர், சென்னை, 1984.

கலைஞர் அவர்களை ஒரு பெரும் புலவர்மணி என நிறுவுவதாக அவரது கவியரங்கக் கவிதைகள் அமைந்துள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

அலியூர் ரகீம், **கலைஞர் ஒரு வானம்,** பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1988, பக்.64.

30.10.88 அன்று வேலூர் அண்ணா கலை அரங்கில் உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் நடைபெற்ற கலைஞர் பொதுவாழ்வுப் பொன்விழாக் கவியரங்கில் படிக்கப்பெற்ற கவிதை.

லோகநாதன். டாக்டர் ப, **கலைஞரின் கவிதா உள்ளம்–1**, டாக்டர் ப. லோகநாதன், ஊட்டி, முதற்பதிப்பு, 1989, பக். 110.

கலைஞரின் கவியரங்கக் கவிதைகள் குறித்த திறனாய்வு.

செல்லப்பன், சிலம்பொலி, சு, **நின்னாவார் பிறரின்றி நீயே ஆனாய்.** கலைஞர் களஞ்சியம், சிசு.இராஜேந்திரன் (பதி.ஆர்), பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1989, பக். 321–328.

கவியரங்கக் கவிதைகளில் கலைஞரின் விஞ்சு புலமையை, கவிதைக்கூறுகள் அனைத்தையும் தம் கவிதைகளில் பயன்படுத்தி வரும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பழனிச்சாமி. கருவை, **கலைஞர் படைப்புகள் இலக்கியமாகும்,** கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.118–120.

கலைஞரின் கவியரங்கக் கவிதையும் இலக்கிய மதிப்பிற்குரியது என்பதைச்

சொல்லும் கட்டுரை.

பொன்னியின் செல்வன். சு, **கலைஞர் கவி ஆளுமை,** சாந்தி பதிப்பகம், நாட்டுச்சாலை, முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2007, பக்.136.

1967 முதல் 1990 வரை கலைஞர் பங்கேற்ற 29 கவியரங்கக் கவிதைகள் பற்றிய திறனாய்வாக அமையும் இந்நூல்
கவியரங்கமும் அதில் கலைஞர் பெறுமிடமும்
கலைஞர் கவிதைகளில் யாப்பமைதி
கலைஞர் கவிதைகளில் கற்பனைவளம்
கலைஞர் கவிதைகளில் சமுதாய உணர்வு
கலைஞர் கவிதைகளில் இனமும் மொழியும்
கலைஞரின் பன்னூற் பயிற்சி
ஆகிய இயல்களைக் கொண்டமைந்துள்ளது.

உலகநாயகி. பழனி, **கவியரங்கக் கவிதைகளில் கலைஞரின் நடைநயம்,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.244 – 250.

கலைஞர் வானொலியில் படித்த பொங்கல்விழாக் கவியரங்கக் கவிதை, சுதந்திர தினத்தில் பாடிய 'விடுதலை வீரர்கள்' பற்றிய கவிதை, பொங்கல் கவியரங்கில் பாடிய 'உழவன் ஒரு தெய்வம்' எனும் கவிதை, வைணவமாநாட்டில் பாடிய கவிதையெனச் சில கவிதைகளை

மீரான்பிள்ளை திருமலர். எம்.எம், **கலைஞரின் அண்ணா கவிதாஞ்சலி – உளவியல் பார்வை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 341–349.

1969 பிப்ரவரி 2–ஆம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள் இறந்தபோது வானொலியில் கலைஞர் ஆற்றிய கண்ணீர் அஞ்சலியாம் 'இதயத்தைத் தந்திடண்ணா' எனும் தலைப்பில் அமைந்த கவிதாஞ்சலிக் கவிதையை உளவியல் நோக்கில் ஆராயும் கட்டுரை.

இராசா. முனைவர் ஏ.எசு, **கலைஞர் கவியரங்கில் காந்தியடிகள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை. முதற்பதிப்பு மே.2008. பக். 358–360.

காந்தியின் கணக்கையே தீர்த்த கும்பலுக்கு இம்மண்ணில் இடம் அளிக்கலாமா? எனும் தலைப்பில் கலைஞர் பாடிய காந்தியடிகள் பிறந்தநாள் கவியரங்கக் கவிதையை ஆய்வு செய்யும் கட்டுரை.

கமலா கந்தசாமி, **தமிழதிகாரம் – கலைஞர் காப்பியம்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 80.

எளிய மரபுக்கவிதையில் கலைஞரின் வரலாறு சொல்லும் காப்பியம்.

புவனேஸ்வரி. க, **கலைஞரின் கவியரங்கக் கவிதைகள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் **2008**, பக். **290–294.**

கலைஞரின் கவிதைகளில் காணக்கிடக்கும் சொல் நயம், கருத்தாழம், உணர்ச்சி வெளிப்பாடு, ஓசையழகு முதலியன பற்றி ஆராயும் கட்டுரை.

ஜோசப் சகாயராஜ். முனைவர். ஆ., **கலைஞரின் கவியரங்கக் கவிதைகளில் உள்ளடக்கமும் உத்தி முறைகளும்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் **2008**, பக். **287–295.**

மனிதநேயக் கொள்கையை அடிநாதமாகக் கொண்டு விளங்கும் கலைஞரின் கவியரங்கக் கவிதைகளில் காணப்படும் உள்ளடக்கத்தின் உயர்வையும், உத்திமுறைத் திறனையும் கண்டு விளக்கும் கட்டுரை.

காவியம்

கண்ணதாசன், **கலைஞர் காவியம்**, வானதி பதிப்பகம், சென்னை , **1971.**

காவியப் பாங்கில் எழுதப்பட்டுள்ள கலைஞரின் வரலாறு.

கபிலன். வே, **தமிழினத் தலைவர் வரலாற்றுக் காவியம்**, பூவழகி பதிப்பகம், சென்னை, **1980**, இரண்டாம் பதிப்பு, அக்டோபர் **1997**, பக்.**335.**

பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்திவர, உவமைச் சிறப்பும், பொருட்சிறப்பும் உடையதாய்க் கவிதை போற்றும் கலைஞரின் பெருமையைக் கவிதை மணம் பரவ உலகிற்கு எடுத்துக்காட்டும் முறையில் அமைந்த காப்பிய நூல்.

இளவேனில், **கார்க்கியின் தாயும் கலைஞரின் தமிழும்**, தமிழர் பதிப்பகம், சென்னை, முற்பதிப்பு, நவம்பர் **2006**, பக்.**192.**

புரட்சியாளர்களின் குணச்சித்திரம் எப்போதும் ஒன்றாகவே இருக்கிறது. காற்றுக்கு அங்கே லெனின் என்று பெயர். இங்கே கலைஞர் என்று சொல்கிறது தமிழ். இந்நூல் ஆசிரியர் முரசொலியில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு.

தமிழரசி.பா, **தாய் காவியத்தில் மொழிநடை**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே, **2008**.பக்.**198–204.**

கலைஞரின் 'தாய்' காவியத்தின் மொழிநடையை, கற்பனைநடை, எளியநடை, உவமை, உருவகப்பயன்பாடு, மொழிகளை எடுத்தாளுதல், கவிதைகளை எடுத்தாளுதல், இலக்கியச்சொற்கள், ஒலிக்குறிப்புச்சொல், தொடர்அமைப்பு, வினாத்தொடர், உம்மைத்தொடர், அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி போன்ற உட்தலைப்புகளில் ஆய்வு செய்யும் கட்டுரை.

இராசா. ஆ, **கலைஞரின் தாய் காவியம் – ஒரு வரலாற்றுப்பார்வை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008 பக்.214–224

கலைஞரின் 'தாய்' காவியம் வெளியீட்டு விழாவில் முதல் படியைப் பெற்றுக்கொண்டு தாய் காவியம் பற்றி ஆற்றிய உரையின் அச்சு வடிவம்.

சுமித்ரா. க, **திறனாய்வு நோக்கில் கலைஞரின் தாய் காவியம்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், செப்டம்பர் 2008, பக்.82.

தாய் காவியத்தில் காணத்தகும் கலைஞரின் படைப்பாற்றலைக் காணும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வு
தமிழ்க் காவிய வரலாறு,
கலைஞரின் யாப்பும் பணியும்,
திறனாய்வு நோக்கில் கலைஞரின் தாய்காவியம்,
மார்க்சிம் கார்க்கியின் தாய் புதினம்–கலைஞரின் தாய்காவியம்–ஒப்பீடு,
ஆகிய இயல்களைக் கொண்டமைந்துள்ளது.

மணிவளன். முனைவர் சி, **கலைஞரின் கவிதை நடையில் கார்க்கியின் 'தாய்' காவியம்** – ஒரு பார்வை, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 65 – 74.

தமிழ்ச் சமுதாயம் எழுச்சி கொண்டு இனியதாய் மோலோங்கிடும் வகையில் ஆக்கச் செயல்களுக்கு அழைப்பு விடுக்கும் அரிய நூல் கலைஞரின் 'தாய்' காவியம் என்பதைப் பதிவு செய்யும் கட்டுரை.

திரை இசைப்பாடல்கள்

சுதர்சன். மு, **கலைஞரின் திரை இசைப்பாடல்கள், ஒரு பகுப்பாய்வு,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழாக்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.54–66.

இக்கட்டுரையில் கலைஞர் எழுதியுள்ள திரைப்படப்பாடல்களில் இருபத்தாறு பாடல்கள் உருவம், உள்ளடக்கம், உத்தி எனும் மூன்று நிலைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

பாலசுப்ரமணியம். கவிஞர் கு.மா, **கலைஞரின் திரைப்படப் பாடல்கள்**, கலைஞர் களஞ்சியம், சித. இராஜேந்திரன் (பதி.ஆர்.), பாரதி பதிப்பகம், சென்னை, 1989, பக்.254–258.

தேனுடன் மருந்து தருவது போன்று எந்த நிகழ்ச்சிக்குரிய பாடலிலும் கொள்கைக் குறிப்பைக் குழைத்துத் தருகின்ற கலைஞரின் ஆற்றலைக் கண்டு விளக்கும் கட்டுரை.

சாரதா நம்பிஆரூரன், **கலைஞரின் இசைப்பாடல்கள்,** கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக்.267–284.

கலைஞரின் இசைப்பாடல்களில் அகத்துறைக் கருத்துக்களே சிறப்பிடம் பெறுகின்றன என்பதையும். பொதுவுடமைச் சமுதாயம் மலரவேண்டும், பகுத்தறிவுப் பாதையில் சிந்திக்க வேண்டும் என்பதைத் தம் இசைப்பாடல்களில் கலைஞர் வெளிப்படுத்துவதையும் காண்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சிவப்பிரகாசம், டாக்டர் வெ, **திரையிசைப்பாடல்களில் கலைஞரின் இலக்கியப் பங்களிப்பு,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 629–637.

கலைஞரின் திரை இசைப்பாடல்கள் தமிழ் இலக்கியத்தளத்தை விரிவடையச் செய்துள்ளன என்பதை விளக்கிச் சொல்லும் கட்டுரை.

குமரன், கே.பி., **கலைஞரின் திரைப்பாடல்கள்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.645–652.

கலைஞர் எழுதிய 'காகித ஓடம்', 'வாழ்க்கை எனும் ஓடம்' என்னும் இரு திரைப்படப் பாடல்களும் கலைஞரைத் திரைக்கவிஞர்களில் சாதனைக் கவிஞராக உயர்த்தியுள்ள பாங்கினைச் சொல்லும் கட்டுரை.

சுப்புலட்சுமி, க, **கலைஞரின் திரையிசைப்பாடலில் இசையும் இலக்கிய நயமும்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 662–667.

உணர்ச்சி, கற்பனை, வடிவம், அறிவுக்கூறு என்ற நான்குகால் இலக்கிய மண்டபத்தின் கோபுரமாகக் கலைஞரின் திரையிசைப்பாடல்கள் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

பாவலன், எ. **கலைஞரின் திரையிசைப் பாடல்களில் போர்க்குணம்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 676–682.

கலைஞரின்படைப்புகள் – திரையிசைப் பாடல்கள் சாதி, மத, மூட நம்பிக்கைகளை எதிர்க்கும் போர்க்குணத்தை மேலோங்கச் செய்யும் தன்மை கொண்டிருந்தமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

உரை

அறிமதி தென்னகன், புலவரேறு, **திருக்குறள் கலைஞர் உரை – ஒரு பார்வை,** இலக்குமி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1977, பக். 200.

கலைஞர் உரை
காணும் உரைகளும் கலைஞர் உரையும்

கலைஞர் உரையின் தனித்தன்மை
கலைஞர் காணும் சிக்கலும், தீர்வும்
அறிவியக்கப் பார்வையில் ஆதிபகவன்
பூத்ததம்மா புதுமரபு
என்னும் தலைப்புகளில் கலைஞரின் திருக்குறள் மரபை ஆய்வுக்குட்படுத்திய நூல்.

முருகரத்தினம். தி, **திருக்குறள் கலைஞர் உரை – சில சிந்தனைகள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.190–200.

வள்ளுவரது முப்பதாவது முதற்பத்தில் பேசப்படுபவர் அறிவில் மூத்த பெருந்தகையாளர், விருப்பு வெறுப்பு தன்னலம் அற்று புலனடக்கம் பெற்ற தூய சான்றோர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்ட தலையானவர் எனக்கொண்டு கலைஞர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ள சிறப்பைக்கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

முத்துசாமி. க, **திருக்குறள் கலைஞர் உரை,** கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.201–215.

கலைஞரின் திருக்குறள் உரை, அவரது நடைமுறை அறிவுக்கும், பல்துறை அனுபவங்களுக்கும், அறிவு நுட்பத்திற்கும், தனித்தன்மைக்கும் சான்றாய் விளங்குவதைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. அத்துடன் கலைஞரின் திருக்குறள் உரையானது, நடைமுறைக்கேற்றது, பொருத்தமான புத்துரை கொண்டது. சொற்பொருள் விளக்கம் அமைந்தது. பகுத்தறிவால் இயன்றது என்பதை இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

அன்புச்செல்வி, **உரையாசிரியர் கலைஞர்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.216–223.

கலைஞரின் அறத்துப்பால் உரையானது
அதிகாரப் பெயர்ப் புதுமை
குறட்பாக்களின் உரைப்புதுமை
என்னும் இருநோக்குகளில் அமைந்துள்ளமையைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. திராவிட இயக்கக் கொள்கைகளிடத்தும் வள்ளுவரிடத்தும் கலைஞர் கொண்ட பேரன்பின் வெளிப்பாடாக கலைஞரின் திருக்குறள் உரை அமைந்துள்ளமையையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

சந்திரசோமு.செ, **பாவேந்தரும் கலைஞரும்**, காந்தி பதிப்பகம், நாட்டுச்சாலை, முதற்பதிப்பு, டிசம்பர் 2007. பக்.120.

பாவேந்தரின் திருக்குறள் உரையையும் கலைஞரின் திருக்குறள் உரையையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து எழுதப்பட்டுள்ள இந்நூல்,
திருக்குறள் உரை மரபில் பாவேந்தரும் கலைஞரும்

கடவுள் வாழ்த்து
வான் சிறப்பு
நீத்தார் பெருமை
அறன் வலியுறுத்தல்
இல்வாழ்க்கை
வாழ்க்கைத் துணை நலம்
மக்கட்பேறு, அன்புடைமை
விருந்தோம்பல்
கொடுங்கோன்மை
ஆகிய பத்து இயல்களைக் கொண்டமைந்துள்ளது.

மகேஷ்வரி, சி, **கலைஞர் இலக்கியங்களில் பெண்ணியம்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 91–95.

'கலைஞர் இலக்கியங்களில் பெண்ணியம் என்பது ஆய்வுத் தலைப்பாயினும் கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து அவரின் பெண்ணியச் சிந்தனைகளை விளக்குகிறது இக்கட்டுரை.

கந்தையா. முனைவர் ஆ, **கலைஞரின் திருக்குறள் உரைத்திறன் – ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக் கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008. பக். 121 – 128.

திருக்குறள் – கலைஞர் உரையில் காணும் கவிதையழகு, எளிமை, புதியன காணும் புதுமை, சுருங்கக்கூறி விளங்கவைக்கும் திறமை போன்ற பல சிறப்புகளை எடுக்காட்டுகளுடன் விளக்கும் கட்டுரை.

சரளா இராசகோபாலன், **கலைஞரின் திருக்குறள் உரையில் பகுத்தறிவுச் சிந்தனைகள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.129–138

கலைஞரின் திருக்குறள் உரையில் காணும் கடவுள் மறுப்புச் சிந்தனை, மறுபிறப்புக்கோட்பாடு பற்றிய சிந்தனை, சாதி மறுப்புச் சிந்தனை, பெண்ணடிமை மறுப்பு ஆகியவற்றை விளக்கும் கட்டுரை.

முத்துமாலை, **கலைஞர் திருக்குறள் உரைநயம்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.164–168

சுருங்கச்சொல்லல், விளக்கிக் கூறல், ஓசைநயம் முதலிய தலைப்புகளில் கலைஞரின் திருக்குறள் உரையின் தனிச்சிறப்பை விளக்கும் கட்டுரை.

அருணா தினகரன், **கலைஞரின் திருக்குறள் உரைவளம், வாழ்க்கைத் துணை அதிகாரம்' ஒரு பெண்ணியப் பார்வை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008. பக்176–182.

கலைஞரின் 'திருக்குறள் உரையில் அவர் வாழ்க்கைத் துணை அதிகாரத்திற்கு அளித்த உரை விளக்கம் அவரைப் பெண்ணியவாதியாகவும்

பெண்ணியக்கவாதியாகவும் காட்டும் பான்மையை விளக்கும் கட்டுரை.

பரஞ்சோதி. இரா, **திருக்குறள் கலைஞர் உரையில் காணப்படும் சுருக்க உரைத்திறன்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008. பக்.186 – 192.

கலைஞரின் திருக்குறள் உரையில் 169 குறட்பாக்களுக்குச் சுருக்கஉரை காணப்படும் பாங்கினை மிகச் சுருக்கஉரை, இடைமிடைசொல்கலம், அடைமொழிகள் காத்திடும் சார்ந்த உரைகள், புதிய சொற்கள் ஆகிய தலைப்புகளில் ஆராய்ந்து விளக்கும் கட்டுரை.

மணிகண்டன், பா. **பகுத்தறிவுப் பார்வையில் கலைஞர் உரை,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.905–912 .

கலைஞரின் திருக்குறள் உரையில் காணப்படும் பகுத்தறிவுக் கருத்துகளை விளக்கிக் காட்டும் நோக்கில் எழுதப்பட்டுள்ள கட்டுரை.

ரவிக்குமார், **கலைஞரைப் பின்தொடரும் குறள் – இந்தியா டுடே** (மு. கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, ஜூன் 2008, பக்.66–67.

கலைஞரின் திருக்குறள் உரை, குறள் உள்ளளவிற்கும் நிலைத்திருக்கும் தமிழ் உள்ளவரை நினைக்கப்படும் என்பதைச் சொல்லும் கட்டுரை.

மோகன். இரா. **இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சி,** கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள். தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009, பக்.1–9.

பல்வகைச் சிறப்புக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கலைஞரின் திருக்குறள் உரை இளைய தலைமுறையினரின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருவிளக்காக விளங்கும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

அமல்ராஜ். இ, **குறளும் கலைஞரும்,** கலைஞர் மு.கருணாநிதி படைப்பிலக்கியங்கள், தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009, பக்.66–72.

20ஆம் நூற்றாண்டில் உலவும் சிந்தனைகளின் வெளிப்பாட்டைப் பழம் பெரும் நூலான வள்ளுவத்தில் இனம் கண்டு சொல்லியிருக்கும் கலைஞரின் நுண்ணறிவை வியந்து போற்றும் கட்டுரை.

உரைவிளக்கங்கள்

இராமசாமி. எஸ். **குறள் நெறியில் கலைஞர்,** முதல்வர் கலைஞர் பிறந்தநாள் மலர், குழித்தலை, 1970.

கலைஞர் அவர்களின் உயர்வுக்குக் காரணம் அவரது உள்ளந்தானென்பதைக்

குறள்வழி நின்று நிறுவுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திருமூர்த்தி. சு, **குறளோவியத்தில் சிறுகதைக் கூறுகள்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1980.

கலைஞரின் குறளோவியம் சிறுகதைக் கூறுகளைக் கொண்டிருக்கும் பாங்கு குறித்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசனின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

மோகனராசு. கு, **கலைஞரின் குறளோவியம்,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1984, பக்.13–30.

குங்குமம் வார இதழில் 1978–ஆம் ஆண்டு வெளிவந்த 43 குறளோவியங்களை அடிப்படையாகக்கொண்டு, கலைஞர் அவர்களின் எழுத்தாற்றல் மற்றும் கலைஞரின் கைவண்ணத்தால் குறள் ஒரு புதுமைப் பொலிவு பூணும் தன்மையைப் படம்பிடித்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

பாலசுப்பிரமணியன். சி, **கலைஞரும் சங்க இலக்கியமும்,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.149–150.

இக்கட்டுரை கலைஞர் அவர்கள் சங்க இலக்கியத்தின்பாற் கொண்டுள்ள ஆராக்காதலையும், ஆழ்நிறை புலமையினையும் கண்டு விளக்குகிறது.

அம்பிகா. து, **கலைஞரின் சங்கத்தமிழ் – புனைவியல் கூறுகள்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1988.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

இளங்குமரன், இரா, **குறளோவியம்,** முத்துமாலை – கலைஞரை முழுதுணர்ந்தோமா?, இனப்பாசறை பதிப்பகம், குழித்தலை, முதற்பதிப்பு, 1988, பக்.68–74.

வள்ளுவரின் திருக்குறளாம் சொற்கோட்டத்திற்கு ஓவியப் பாங்கில் விளக்கமளிக்கும் கலைஞரின் குறளோவியச் சிறப்பை எடுத்து விளக்கும் கட்டுரை.

மாலதி. அ.மு, **கலைஞரின் குறளோவியத்தில் புனைவியல் கூறுகள்,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1989.

கலைஞரின் குறளோவியத்தில் காணத்தகும் புனைவியல் கூறுகள் குறித்து சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

வெங்கடேசன். ந, **கலைஞரின் சங்கத்தமிழ்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1992.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியியல் துறையில் முனைவர் வீ. உண்ணாமலையின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

நிர்மலா சுரேஷ், **கலைஞரின் நெஞ்சுக்கு நீதி ஓர் ஆய்வு**, முரசொலி பொன்விழா மலர், முரசொலி, சென்னை, 1994, பக்.70–71, 107–110.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி குறித்த ஆய்வுக் கட்டுரை.

செல்வகணபதி. சண்முக, **குறளோவியத்தில் கலைஞரின் மொழி ஆளுமைத் திறன்**, கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.130–142.

தமிழ்மொழியானது கலைஞரின் ஆளுமையால் சீரும் சிறப்பும், வீறும் பொலிவும், வலிமையும், அழகும் ஆற்றலும் பெற்று, வழித் தோன்றல்கள் பலரைத் தோற்றுவித்தும் ஆய்வாளர்களின் ஆய்வுப் பொருளாகியும் வரும் தன்மையை அவரது குறளோவியத்தின் துணைகொண்டு ஆய்ந்து விளக்குவதாக அமையும் இக்கட்டுரை, குறளோவியத்தில் காணப்படும் மொழி ஆளுமைத்திறன், அமைப்பியல் நோக்கு, அழகியல் நோக்கு, சொல்லியல் நோக்கு ஆகியனவற்றைக் கண்டு விளக்குவதாக அமைந்துள்ளது.

அப்துல்ஜப்பார். அர, **குறளோவியம்–ஒருபார்வை,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.143–153.

கலைஞரின் குறளோவியத்தை,
உருவகமாகக் கூறுதல்,
இலக்கியச் சான்று,
தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்,
வரலாற்று நிகழ்வு
தலைவன், தலைவி அல்லது தோழி கூற்று,
நேருக்கு நேர் உரையாடல்,
வர்ணனை,
சிறுகதையமைப்பு –
என்னும் வகைப்பாட்டினுள் அடக்கிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

திலகவதி. க, **சங்கத்தமிழ் மூதின் மகளிர்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.166–176.

தன்னலம் கருதாது, நாட்டின் நலத்தை முதன்மையானதாகக் கருதி, நாட்டிற்குத் தீங்கு வருங்கால், நாட்டைக் காக்கத் தன்மகன் உயிரைப் பற்றிக் கவலைகொள்ளாது அவனைப் போர்க்களத்திற்கு அனுப்பி, அகவாழ்விலும் புறவாழ்விலும் வீரப்பண்பைப் போற்றி, வீரவுணர்வுடன் வாழ்ந்த சங்ககால மூதின்மகளிர் பண்பு எக்காலமும் போற்றப்படவேண்டும் என்னும் கருத்து நிலைகொண்ட கலைஞர் தம் சங்கத்தமிழில் சங்ககால மூதின்மகளிருக்குப் பாமாலை புனைந்து போற்றியுள்ள பாங்கைக்கண்டு விளக்குவதாக

இக்கட்டுரை அமைந்துள்ளது.

தமிழண்ணல், **ஒப்பியல் பார்வையில் சங்க இலக்கியத் தமிழும் கலைஞரின் சங்கத் தமிழும்**, கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.156–165.

'அருமையில் எளிய அழகே போற்றி' என்னும் மாணிக்கவாசகரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, மதிக்கத்தக்க பண்பட்ட, தமிழர் பண்பாட்டு வடிவம் கலைஞரின் சங்கத் தமிழ் என்பதையும், இது, இக்காலத் தமிழர்களுக்குக் கலைஞர் தந்துள்ள மிகப்பெரிய கொடை என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது.

அரங்கசாமி. பழனி, **சங்கத்தமிழ் ஒரு கண்ணோட்டம்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர். திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

இக்கட்டுரை தமிழரின் காதலையும் வீரத்தையும் அன்பையும் ஆற்றலையும் தெளிவாக்கிக்காட்டுகின்ற சொல்லோவியத் தொகுப்பாக விளங்கும் கலைஞரின் சங்கத்தமிழ், ஒற்றைத் தமிழரின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், அகப்புற வாழ்வு, அரசியல் பற்றி அறிந்துகொள்ள விழைவேர்க்கு ஓர் இலக்கியப் பெட்டகமாக விளங்கும் பாங்கைக் கண்டு விளங்குகிறது.

மாணிக்கம். வ.சுப, **குறளோவியக் கலைஞர்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

ஒவ்வொரு குறளுக்கு முன்னும் ஏற்ற சூழ்நிலை அல்லது பின்புலம் அமைத்துக்காட்டி, தன் கற்பனையால் குறளுக்கேற்ற சூழ்நிலைகளைத் தொகுத்தும் அடுத்தும் கற்பனை வழிப்படுத்தும் கலைஞரின் பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஞானசேகரன். வை, **குறளோவியத்தில் இன்சொல் கலைஞர்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர். திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

இல்வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படும் இன்சொல்லைக் குறளோவியத்தில் கலைஞர் கையாண்டிருக்கும் பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அன்பழகன். பேரா க, **'சங்கத்தமிழ்' தேனாறும் செம்புலப் பெயல் நீராரும்**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர். திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

பழந்தமிழ்ச் சங்கப் பாடல்களில் தோய்ந்த பார்வை கலைஞரின் சங்கத்தமிழ் வழங்குகிறது எனில், கலைஞரின் கற்பனை வளம் பொதிந்த, இலக்கியப் படைப்பாற்றலுக்கு ஈடில்லை என்பதைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றுக்குக் கலைஞர் தீட்டியுள்ள சங்கத்தமிழ் ஓவியம் கொண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராசலிங்கம். இரா, **கலைஞரின் சங்கத்தமிழ் அமைப்பும் ஆற்றலும்**, பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, மார்ச் 2000, பக்.121.

கலைஞரின் சங்கத்தமிழ் கவிதைகளின் அமைப்பு முறையையும் எடுத்துரை முறையையும் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ள இந்நூல் முன்னுரை, முடிவுரை நீங்கலாக
சங்கத்தமிழ்ப் பதிப்புகள்
சங்கத்தமிழ் அமைப்பு முறை
சங்கத்தமிழ் எடுத்துரைமுறை
ஆகிய மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. கலைஞரின் சங்கத்தமிழ் நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களின் சங்க இலக்கிய அடிப்படையிலான வரிசைமுறை நூலில் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுரதா. கவிஞர், **அடித்தட்டு மக்களும் உலவிட அமைத்திட்ட பூங்கா,** காப்பியக் களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, 3.2.2003, பக்.22–23.

தொல்காப்பியப் பூங்கா, ஏர் ஓட்டுபவர்களைக்கூட எடுத்துப் படிக்கத் தூண்டும் நூல் என்பதைச் சொல்லும் கட்டுரை.

குழந்தைசாமி. வா.செ, **இறுதிவரை, இறுதியில்லாத ஏற்றப்பயணம்,** காப்பியக் களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, 3.2.2003, பக்.28–29.

நுட்பமிக்க பொருளை நுழைந்து காணும் கலைஞர்தம் நுண்புலன் தொல்காப்பியப் பூங்காவில் சுடர்விடுவதைச் சொல்லும் கட்டுரை.

சின்னக்குத்தூசி, **ஓர் இலக்கணக் கைகாட்டி**, காப்பியக்களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, 3.2.03, பக்.30–32.

தொல்காப்பியப் பூங்காவின் எளிமையாக்கம் குறித்துப் பேசும் கட்டுரை.

சுஜாதா, **கடினமான காப்பியத்தைக் கலைஞர் மென்மைப் படுத்தியிருக்கிறார்,** காப்பியக் களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, 3.2.03 பக்.33–35.

தொல்காப்பியத்தில் ஆராய வேண்டிய சிலவற்றைக் குறிப்புகளாகத் தரும் கட்டுரை.

சமுத்திரம். சு, **தொல்காப்பியப்பூங்காவும் கருத்தபாண்டியனும்,** காப்பியக்களஞ்சியம்–தொல்காப்பியப்பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, 3.2.03 பக்.36–39, 42–43, 45–47.

தொல்காப்பியப் பூங்காவின் சிறப்பைச் சொல்லும் சிறுகதை.

முஸ்தபா. மணவை, **கலைஞரின் இலக்கணக் காப்பியம்,** காப்பியக் களஞ்சியம்–

தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, **3.2.03**, பக்.**40–41.**

தொல்காப்பியப் பூங்காவின் சிறப்பைச் சொல்லி, அதனை முழுமைப்படுத்த வேண்டும் கட்டுரை.

சீனிவாசன். முக்தா, **பூங்காவில் புகுந்தபோது,** காப்பியக்களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, **3.2.03.** பக்.**44–45.**

தொல்காப்பியப் பூங்கா எழுதிய கலைஞருக்கு நன்றி சொல்லும் கட்டுரை.

வேழவேந்தன். கா, **தொட இனிக்கும் வேர்ப்பலா,** காப்பியக் களஞ்சியம்– தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, **3.2.03,** பக்.**50–51.**

தொல்காப்பியப் பூங்கா அழகுமலர், அறிவுமலர், அன்புமலர், ஆதித் தமிழினத்தின் பண்புமலர் என்பதைச் சொல்லும் கட்டுரை.

அப்துல்ரகுமான். கவிக்கோ, **தொல்காப்பியப் பூங்கா ஒரு பண்பாட்டுப் புதையல்,** காப்பியக் களஞ்சியம், தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்பு மலர், சென்னை, **3.2.03,** பக்.**60–61**

11.1.2003 அன்று நடந்த தொல்காப்பியப் பூங்கா நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரை.

நன்னன். மா, **தமிழரின் பெருமைக்கெல்லாம் சான்று,** காப்பியக் களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, **3.2.03** பக்.**66–67.**

தமிழர்களின் பெருமைக்குச் சான்றாகக் கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா அமைந்துள்ளதைச் சுட்டும் கட்டுரை.

தமிழண்ணல், **ஆயுத எழுத்தாகப் பயன்படுவோம்,** காப்பியக்களஞ்சியம்– தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை,. **3.2.03** பக்.**70–71.**

11.1.03, அன்று நடந்த தொல்காப்பியப்பூங்கா நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரை.

தமிழன்பன். ஈரோடு, **கரந்தைக் கவியரசும் கலைஞரும்,** காப்பியக் களஞ்சியம் – தொல்காப்பியப் பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, **3.2.03,** பக்.**74–75.**

தொல்காப்பியப் பூங்கா மூலம் கலைஞர் இலக்கண விருந்து படைத்திருக்கும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

அறவாணன். க.ப, **கலைஞர் ஓர் இலக்கியக் கம்யூனிஸ்டு,** காப்பியக் களஞ்சியம்– தொல்காப்பியப்பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, **3.2.03,** பக்.**19–21.**

கலைஞரின் தொல்காப்பியப் பூங்காவின் சிறப்புகளை எடுத்து விளக்கும் கட்டுரை.

பேராசிரியர், **அறிவுக் கருவூலம் தொல்காப்பியப்பூங்கா**, காப்பியக் களஞ்சியம்–தொல்காப்பியப்பூங்கா, முரசொலி சிறப்புமலர், சென்னை, 3.2.03, பக்.12–13.

11.1.03 அன்று நடந்த கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா நூல் வெளியீட்டு விழாவில் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆற்றிய உரை.

மோகன்.இரா, **கலைஞரின் சங்கத்தமிழ்ப் புதையல்**, கலைஞர் ஆய்வு, அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர்.2005. பக்.23–28.

சங்ககாலத்தமிழ்ச் சொல் ஓவியங்கள் சிலவற்றை இன்றைய தமிழர் இனிது படித்து உணர்ந்து கொள்ளும் வகையில் தெள்ளத்தெளிந்த தமிழில் கலைஞரின் சங்கத் தமிழ் படைக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்லும் கட்டுரை.

வீரப்பன். இராம, **தொல்காப்பியப் பூங்கா எழுப்பிய புதிய சிந்தனை,** முரசொலி பொன்விழாமலர், முரசொலி சென்னை,2006, பக்.34–35.

தமிழ் செம்மொழி மட்டுமன்று. அறிவியல் மொழி, ஆய்வுமொழி, அறிவியல் உண்மைகளை விளக்கும் மொழி என்பதைச் சொல்லத் தவறிவிட்டோமோ என்ற சிந்தனைகளை எழுப்புவதாகக் கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா அமைந்துள்ள பாங்கை விளக்கும் கட்டுரை.

வெங்கடேசன். ந, **கலைஞரின் சங்கத்தமிழில் தமிழர் பண்பாடு**, காந்தி பதிப்பகம், நாட்டுச்சாலை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2007, பக்.144.

சங்க இலக்கியக் கருத்துக்களைக் கலைஞர் அணுகும் முறை குறித்தும், சங்க இலக்கியப் பாடல்களின் உயிரோட்டமான கருத்துக்களை அறிய கலைஞரின் சங்கத்தமிழ் உதவும் பாங்கையும், தமிழ் மக்களின் பண்பாட்டு வெளிப்பாடு கலைஞரின் சங்கத்தமிழில் வெளிப்படும் பாங்கையும், கலைஞரின் கற்பனை வளம் சங்கத்தமிழில் காணப்படும் தன்மையையும், சங்க இலக்கிய நடைக்கும் கலைஞரின் சங்கத் தமிழ் நடைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் கண்டு விளக்கும் நூல்.

அரங்கசாமி. பழநி, **சங்கத்தமிழ்–ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக் 61–72.

கதை நிகழ்ச்சிகள் போலவும் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்தது போலவும் சங்க இலக்கியக் காட்சிகளைச் சால்புறு தமிழில் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க வகையில் இனிய, எளிய தமிழில் கலைஞர் சங்கத் தமிழைப் படைத்திருக்கும் பாங்கினை இக்கட்டுரை விளக்குகிறது.

குருநாதன். வ, **குறளோவியம் ஒரு புதுவண்ணம்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக்.73–84.

குறளோவியத்தில் பல குறட்களுக்குப் பொருத்தமான பின்னணிப் புனைவுகளைக் கலைஞர் தீட்டியுள்ள பாங்கைக் கண்டு விளக்குவதுடன்

இந்தப் புனைவுகள் குறளோவியத்திற்குக் கலைஞர் தீட்டிய புத்தம் புது வண்ணங்கள் என்பதை இக்கட்டுரை விளக்கிக்காட்டுகிறது.

சிவகாமசுந்தரி. சு, **குறளோவியத்தில் கலைஞர் தமிழ்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **2008, பக்.85–102.**

கலைஞரின் குறளோவியத்தில் காணப்படும் கலைஞரின் தமிழ் நடையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

சுப்பிரமணியம். வ.அய், **தொல்காப்பியப் பூங்கா**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக் கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008. பக். 1.**

கலைஞர் அவர்களின் 'தொல்காப்பியப் பூங்கா' பற்றிய கருத்துச் சுருக்கம்.

ஆலிஸ். அ, **கலைஞரின் தொல்காப்பியப் பூங்காவில் பகுத்தறிவுப் பார்வை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008. பக்.2–7.**

தொல்காப்பியப் பூங்காவில் இலக்கண விளக்கம் தரும் போக்கில் வெளிப்படும் கலைஞரின் பகுத்தறிவுப் பார்வையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பழனிச்சாமி. கருவை, **தொல்காப்பியப் பூங்காவில் கலைஞரின் சமூக அறிவியல் அணுகுமுறை**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே **2008, பக்.8–14.**

கலைஞரின் தொல்காப்பியப்பூங்காவில் மலர்ந்த தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஒட்டிய மலர்கள் 83ஐ மட்டும் முதன்மைத் தரவுகளாகக் கொண்டு கலைஞரின் சமூக அறிவியல் அணுகுமுறையை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்தள்ளது.

ஜெயபாரதி. யு, **இலக்கணத்திற்கு இலக்கியப் பார்வை தொல்காப்பியப் பூங்கா,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008, பக்.15–20.**

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகளுக்கும் கலைஞரின் விளக்கம் பொருத்தப்பாட்டுடன் அமைந்திருக்கும் பாங்கினைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நாகரத்தினம். வெ.அ, **தொல்காப்பியப் பூங்காவில் முதல் இருபத்தைந்து மலர்கள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே **2008, பக்.21–27.**

கலைஞர் அவர்கள் தொல்காப்பியப் பூங்காவில் வரைந்துள்ள முதல் இருபத்தைந்து மலர்களின் வழி கற்றறிந்த ஆசிரியராகத் திகழ்கிறார் எனும் கருதுகோளைக்கொண்டு அவர் சிறப்புக்குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வரலட்சுமி. இரா, **தொல்காப்பியப் பூங்காவின் ஐந்து மலர்கள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக்.28–36.

கலைஞர் அவர்களின் தொல்காப்பியப் பூங்காவின் எழுத்ததிகார மலர்கள் (எண். 2, 6) இரண்டு, சொல்லதிகார மலர்கள் (எண்.15,17) இரண்டு, பொருளதிகார மலர் (எண்.28) ஒன்று ஆக மொத்தம் 5 மலர்களைக்கொண்டு தொல்காப்பிய நூற்பாக்களைக் கதைகள் உரையாடல்கள் வாயிலாகக் கல்வியில் எளிய நிலையில் உள்ளவர்களும் படித்து இன்புறும் வகையில் கலைஞர் அவர்கள் விளக்கிக்காட்டும் சிறப்பைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சுமதி. வ, **தொல்காப்பிய உரை – ஒப்பீடு**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008.

கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா தமிழண்ணலின் தொல்காப்பியப் பொருளதிகாரம் தொகுதி 1 ஆகிய இரு சமகாலத் தொல்காப்பிய உரைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் கட்டுரை.

வீரவேலு. சு, **ஐயர்:தொல்காப்பியப் பூங்கா காட்டும் தெளிவுரை**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.41–46.

ஐயர் என்ற தமிழ்ச் சொல்லின் மூலம் (வேர்) வடமொழி அல்ல, தமிழே என்பதனைக் கலைஞரவர்களின் தொல்காப்பியப் பூங்கா எவ்வாறு மயக்கம் நீக்கித்தெளிவுபடுத்துகிறது என்பதை விளக்கும் கட்டுரை.

கவிதா. வே, **தொல்காப்பியப்பூங்காவில் இடம் பெறும் உவமைகள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.47–51.

தொல்காப்பியப் பூங்காவில் காணும் கலைஞரின் உவமைகளை வகைப்படுத்தி விளக்குவதாக அமைந்த கட்டுரை.

சிவமணி. மு, **கலைஞரின் தொல்காப்பியப் பூங்காவில் உத்திகள்**, கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.52–58.

கலைஞர் அவர்கள் தம் தொல்காப்பியப்பூங்கா விளக்க உரையில் கையாளும் உத்திகளை வகைப்படுத்திச் சான்றுகாட்டி விளக்குவதாக அமைந்த ஆங்கிலக் கட்டுரை.

தமிழண்ணல் (இராம.பெரியகருப்பன்.), **தங்கத் தமிழ் தந்த சங்கத் தமிழ்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.59–68.

சங்கத் தமிழில் பழம்பாடல்களைப் பொருள் மாறாமல் எளிய தமிழில் இனிய நடையில் கலைஞர் மீட்டுருவாக்கம் செய்துள்ள பாங்கினையும் அவற்றின்

சிறப்புக்களையும் ஆராய்ந்து விளக்கும் கட்டுரை.

நடராசன், அவ்வை **கூர்தீட்டிய போர்வாள்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.69–71.

சங்கத்தமிழில் காக்கைப்பாடினியாரின் நரம்பெழுந்துலறிய என்னும் புறப்பாட்டுக்குக் கலைஞர் எழுதிய உரைவிளக்கத்தில் அவர் செய்த ஒரு சிறுமாற்றம், முத்தாய்ப்பாகக் கலைஞர் தரும் இரண்டு அடிகள், காலத்திற்கேற்ற தமிழின மீட்டுருவாக்கத்தில் ஏற்படுத்தும் எழுச்சியை விளக்கும் ஆய்வுக்கட்டுரை.

இராசா. முனைவர் கி, **கற்பனைக்கும் கற்பனை தந்த சங்கத்தமிழ்க் கலைஞர்**, கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.72–76.

கலைஞரின் சங்கத்தமிழில் காணப்படும் கற்பனைத் திறத்தை ஆராய்ந்து சாமானியர்களும் சங்கத் தமிழைச் சுவைக்க வேண்டும் என்னும் கலைஞரின் உணர்வை எடுத்து விளக்குவதாக அமைந்த கட்டுரை.

வித்தகன். பேராசிரியர், **சங்கத்தமிழில் கலைஞரின் கருத்து ஆழமும், கலை ஆழமும்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008. பக்.96–102.

கலைஞரின் சங்கத் தமிழில் காணும் கருத்தாழம், கலையழகு ஆகியனவற்றையும், தமிழைப்பற்றியும் தமிழுக்கு கலைஞர் தரும் அடைமொழிகள் பற்றியும் அவரின் உவமைகளின் சிறப்புகளையும், அவர் மொழி நடையில் காணும் காதல் உணர்வுகளையும் விளக்கும் கட்டுரை.

இராசாராம். கே.ஏ, **கலைஞரின் வான்புகழ் கொண்ட வள்ளுவம் காட்டும் சான்றாண்மை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.129–138.

'வான்புகழ் கொண்ட வள்ளுவம் எனும் கலைஞரின் திருக்குறளுக்கான கவிதை நடை உரையின் 'சான்றாண்மை அதிகாரத்தில் காணும் அரும்பெரும் கருத்துக்களைக் கூறும் கட்டுரை.

பிரதீப்குமார். ம, **கலைஞரின் தேன்துளிகள்,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.146–152.

கலைஞரின் குறளோவியத்தின் ஒருசில பகுதிகளைக் கொண்டு அரசியல், போர்முறை, கல்வியின்சிறப்பு, காதலின் வருத்தம், காதலின் சிறப்பு ஆகிய தலைப்புகளில் ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

வழியரசன், பு, **கலைஞரின் வான்புகழ்கொண்ட வள்ளுவத்தில் அறம், பொருள். கலைஞர் படைப்புலகம்**, ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008. பக்.153 – 158.

கலைஞரின் 'வான்புகழ் கொண்ட வள்ளுவம்' கவிதை வடிவ

உரைவிளக்கத்தில் அடங்கியுள்ள அறம், பொருள் பற்றிய சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரை.

கௌரி. ப, **குறளோவியத்தில் காணலாகும் அறக்கருத்துக்கள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.159 – 163.

குறளோவியத்தில் அறக்கருத்துக்களைக் கலைஞர் எவ்வாறு எடுத்தியம்பியுள்ளார் என்பதை விளக்கும் கட்டுரை.

சீதா. இரா, **குறளோவியம்–பன்முக நோக்கில்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.169–175.

கலைஞர் தீட்டிய குறளோவியத்தை இறைத்தத்துவம், அவரது கொள்கை அல்லது நம்பிக்கை, குறளுக்குக் கதை, பெண்ணியம், வரலாறு, ஞானம், வாழ்வியல் அனுபவங்கள், சிக்கலைத் தீர்க்கும் விதம், சமுதாயப் பார்வை, புதுமை விருந்து, உறுதிப்பொருள், ஒப்பீட்டுப்பார்வை, மரபுமீறிய வேறுபாடான கற்பனை ஆகிய உள்தலைப்புகளில் பன்முக நோக்கில் ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

ஸ்ரீதேவி. பி, **குறளோவியத்தில் கலைஞரின் நடைத்திறன்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.183–185.

கலைஞரின் குறளோவியத்தின் வழி, ஒலிநிலையில், சொல்நிலையில், தொடர்நிலையில் காணும் அவரின் தனித்தன்மையுள்ள நடைப்பாங்கினை ஆராயும் கட்டுரை.

குணசேகரன். ஆர், **கலைஞரின் குறளோவியத்தில் மொழிநடை,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்193–195.

கலைஞர் குறளோவியத்தில் நடைத்திறன் எளிமையாகவும் ஆழமாகவும் அமைந்து விளங்கும் பாங்கைக்கண்டு விளக்கும் கட்டுரை. குறளோவியம் என்னும் சொல்லோவியத் தொகுப்பை ஆழ்ந்து பயின்று விளங்கிக்கொண்டால் கலைஞர் தமிழின் மாட்சியை அறியலாம் என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

நீலகண்டபிள்ளை.தா, **கலைஞரின் இலக்கிய இலக்கண உரைவளம்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.824–828.

இலக்கணத்தை இலக்கியமாக்கித் தந்த கலைஞரின் சிறப்பைக் குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா வழி நின்று விளக்கும் கட்டுரை.

முத்து இலக்குமி, **கலைஞரின் படைப்புத்துவத் திறன்கள்,** கலைஞர் படைப்புலகம்–

ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.829–841.

கலைஞரின் படைப்புத்துவத்திறனை, அவரது
தொல்காப்பியப்பூங்கா
சங்கத் தமிழ்
குறளோவியம் – ஆகிய மூன்று நூல்களின் துணை கொண்டு விளக்கும் கட்டுரை

அன்புச்செல்வி.ப, **கலைஞரின் படைப்புகளில் நடையமைப்பு,** கலைஞர்.மு.கருணாநிதியின் படைபபிலக்கியங்கள். தொகுதி 1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009, பக்.36–40.

உண்ண மறுக்கும் குழந்தைக்குத் தாய் கதை சொல்லிச் சோறு ஊட்டுவது போன்று கலைஞரும் கதை தந்து குறளோவியம் எனும் முப்பால் சோற்றைப் பாமர மக்களும் உணரும் வண்ணம் படைத்துள்ள பாங்கைச் சொல்லும் கட்டுரை.

அமுதவள்ளி. இரா, **கலைஞரின் சங்கத்தமிழில் நடப்பியல்,** கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர், 2009, பக்.47–54.

கலைஞரின் சிறப்புமிக்க சங்கத்தமிழில் காணத்தகும் நடப்பியல் கருத்துக்களைக் கண்டு விளக்கும் கட்டுரை.

அமிர்தகடேசுவரர்.மு. **தொல்காப்பியப் பூங்காவில் கலைஞரின் உத்திகள்,** கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியம். தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009, பக்.60–65.

தொல்காப்பியப் பூங்காவில் கலைஞர் தேர்ந்தெடுத்த நூற்பாக்கள் மக்கள் நெஞ்சங்களைச் சென்றடையக் கலைஞர் பயன்படுத்தி உள்ள உத்திமுறைகளைக் கண்டு விளக்கும் கட்டுரை.

கலைச்செல்வி. முனைவர் இரா, **கலைஞரின் குறளோவியம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி – 1, வசந்தா பதிப்பகம் சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக்.139 –143.

கலைஞரின் குறளோவியத்தில் காணப்படும் மொழிநடை, உணர்ச்சிச்சிறப்பு, உவமை, உருவக நயங்கள் முதலியனவற்றைக் கண்டு விளக்கும் கட்டுரை.

சூசை. இ, **தொல்காப்பியப் பூங்கா – ஒரு திறனாய்வு** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 194 – 201.

தொல்காப்பியப் பூங்கா இலக்கணத் திறனாய்வு அன்று, இலக்கணத்திற்கான இலக்கியம் என்பதைச் சொல்லும் கட்டுரை.

செல்வி. சொ, **சங்கத் தமிழின் அமைப்பு முறை**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008. பக். 202 – 206.

தான் பெற்ற இலக்கிய இன்பத்தைப் பிறருக்கும் அளிக்கும் கலைஞரது அறிவுக்கொடை 'சங்கத்தமிழ்' என்பதைச் சொல்லும் கட்டுரை.

திருஞானசம்பந்தன். சி, **கலைஞரின் சங்கத்தமிழில் நடப்பியல் கருத்துக்கள்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 236 – 240.

கலைஞரின் சங்கத் தமிழில் நிரம்பி நிற்கும் நடப்பியல் கருத்துகளைத் தொகுத்துத் தரும் கட்டுரை.

நாகேஸ்வரி. க, **கலைஞரின் வான்புகழ் கொண்ட வள்ளுவம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக்.259 – 266

ஆற்று நீர் போன்ற ஓட்டம், ஊற்றுநீர் போன்ற தெளிவு, மழைநீர் போன்ற தூய்மை ஆகிய மூன்றையும் கலைஞரின் 'வான்புகழ் கொண்ட வள்ளுவம்' நூல் கொண்டுள்ளமையைச் சொல்லும் கட்டுரை.

புஷ்பராஜ். பேரா. பொன், **சங்க இலக்கியமும் கலைஞரின் சங்கத் தமிழும்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 28 –30.

கலைஞர் கட்டியுள்ள 'சங்கத்தமிழ்' என்னும் பன்மலர் மாலையின் ஒருபக்கச்சரம் அகம்; மறுபக்கச்சரம் புறம். சங்ககால மக்களின் கண்களாகிய அகமும் புறமும் கலைஞரின் கைவண்ணத்தில் சங்கத்தமிழ் மாலையில் மணம் பரப்பும் பாங்கு குறித்துப் பேசும் கட்டுரை.

பெண்ணரசி. வி, **சங்கத்தமிழில் நடை நயம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 44–49.

புதுக்கவிதை நடையில் உரை இயற்றி, சங்க இலக்கியத்தின் பெருமைகள் சமுதாயத்தின் கடைக்கோடி மனிதனையும் சென்று சேரும் வண்ணம் 'சங்கத்தமிழ்' தந்துள்ள கலைஞரின் நடைநயத்தை நவிலும் கட்டுரை.

லதா. முனைவர் தா, **குறளோவியம் சுட்டும் வள்ளுவர்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 123 – 128.

கலைஞர் குறளோவியத்தில் திருவள்ளுவரைத் தொட்டுக் காட்டவில்லை; முழுமையாகக் காட்டுகிறார் என்பதைச் சொல்லும் கட்டுரை.

சிவகாமி. முனைவர் க, **கலைஞரின் பார்வையில் வள்ளுவம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 200 – 204.

குறளோவியம் கண்ட கலைஞர் சொல்லிலும் கல்லிலும் வள்ளுவரை வரைந்து போற்றியுள்ளதை வரலாற்று நோக்கில் காணும் கட்டுரை.

கந்தன். முனைவர் ச, **சங்கத்தமிழில் கலைஞரின் கவித்துவம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 222 – 226.

கலைஞரின் சங்கத்தமிழில் காணும் கவித்துவ மாண்புகளை எடுத்துரைக்கும் கட்டுரை.

கீதா ரோஸ்லின், **கலைஞரின் இலக்கிய ஆளுமை பற்றிய ஒரு பார்வை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 257 – 260.

தலைவன் – தலைவி உறவு நிலையைக் கலைஞர் அழகாகப் பதிவுசெய்துள்ளதைக் குறுந்தொகைப் பாடலுக்குக் கலைஞர் எழுதியுள்ள சங்கத்தமிழ் ஓவியம் கொண்டு விளக்கும் கட்டுரை

ஜெயக்கிருஷ்ணா. இரா, **குறளோவியம் காட்டும் வள்ளுவம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 277–281.

இளைஞர்களின் வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் மனித வாழ்க்கையின் நம்பிக்கைத் தீபமாகவும் குறளோவியம் அமைந்துள்ள பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை

மாலதி. ஏ, **குறளோவியத்தில் அகத்திணைக் கருத்தோவியம்**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.92.100.

உள்ளத்துணர்வுகளை உருவகக் கருத்தோவியமாக்கி இன்ப வாழ்வின் இனிமையை அறத்தன்மையுடன் விளக்கியுரைக்கும் கலைஞரின் குறளோவியம், கலைஞரின் இலக்கியத் திறனுக்கும் தமிழுணர்வுக்கும் எடுத்துக்காட்டு என்பதை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

சகாயமேரி. இ, **கலைஞரின் சங்கத்தமிழ்**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.114–118.

தித்திக்கும் கவிதை நடையில் புத்தம் புதிய முறையில் கலைஞர் எழுதியுள்ள சங்கத்தமிழின் உரைவளம், நூலமைப்பு, நூல் உருவான வரலாறு ஆகியனவற்றைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

சரவணன். கோ, **கலைஞரின் குறளோவியம்–ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.147–156.

வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு குறளோவியத்திற்கு வண்ணம் தீட்டியுள்ள கலைஞர் அதற்குத் தமிழக வரலாற்றை மட்டுமன்றி உலக வரலாற்றைக் குழைத்து மெருகினை இழைத்துள்ளார் என்பதைச் சொல்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆண்ரு சுந்தர்ராஜ். சு, **கலைஞரின் சங்கத்தமிழ் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.197–202.

சங்கத்தமிழ் பாடல்களுக்குக் கலைஞர் தந்துள்ள கவிதையிலான விளக்கங்கள் கவியரங்கக் கவிதைச் சாயலைப் பெற்றுள்ள பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மணிமேகலை. சி, **குறளோவியம் காட்டும் கலைஞரின் சிந்தனைகள்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.211–222.

வள்ளுவரின் ஒவ்வொரு குறளுக்கும், பின்னணியாக ஒரு சூழலை அமைத்து, கதைப்பாங்காக வள்ளுவர் கால வாழ்வியலை வாசகரின் மனதில் பதியவைக்கும் கலைஞரின் முயற்சியைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சீதா. இரா, **குறளோவியம் – ஓர் ஆய்வு**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.252–258.

கலைஞர் செதுக்கிய குறளோவியத்தைச் சில கோணங்களில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மாறன். இரா, **கலைஞரின் குறளோவியம் –** ஒரு கண்ணோட்டம். கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.259–270.

தமிழ் மொழியின் சிறப்பு, திருக்குறள் பெருமை, தமிழறிஞர்களின் வரிசையில் கலைஞரின் தமிழாற்றல் ஆகியவற்றோடு கலைஞரின் குறளோவியத்தை நுட்பமாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மலர்விழி. இரா, **கலைஞரின் சங்கத்தமிழ்**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.277–281.

சங்கத்தமிழில் கலைஞர் பழைய கோட்பாடுகளை ஆராய்ந்து புதிய கோட்பாடுகளை வகுத்திருப்பதைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கல்பனா. சே, **குறளோவியக் கலைஞர்**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.315–321.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், வாழ்வியல் நிகழ்வுகள் என அனைத்தையும் உள்வாங்கி எழுதப்பட்டதாகக் கலைஞரின் குறளோவியம் அமைந்திருக்கும் பாங்கினை இக்கட்டுரை விளக்குகிறது.

மெர்லின்மினி. தெ, **கலைஞரின் சங்கத்தமிழில் அரசியல் முறை**, கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009. பக்.322–330.

சங்க காலத் தமிழரின் அரசியல் முறைமைகளை இன்றைய அரசியல் தலைவர்கள் பின்பற்றினால் நாட்டில் நல்லறம் தழைத்து செங்கோலாட்சி மலரும் என்பது கலைஞரின் சங்கத்தமிழ் வெளிப்படுத்தும் அரசியல் முறை என்பதை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது

வரலாறு [தன்/வாழ்க்கை]

இளமுருகு பொற்செல்வி. மீ.சு, **கருணாநிதியார்**, காதலர் பண்ணை, பெரியகுளம், 1951, பக்.16.

கலைஞர் அவர்களுடைய உணர்ச்சிமயமான வாழ்வை எதிர்கால ஏற்றத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட நூல்.

Balasubramanian. K.M, **DR. KALAIGNAR KARUNANITHY,** Thambi Publications, Chennai, 1973, PP. 19.

Kalaignar Karunanithy, Is today the model and mellowed avatar of the mighty Tamil monarchs Karikalan and Rajarajan. He is their integrated editor of the twentieth century என்பதைச் சொல்லும் கட்டுரை.

மங்கள முருகேசன். ந.க, **தமிழக வரலாற்றில் கலைஞர்**, கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை, 1989, பக்.297–302.

அரசுக் கட்டிலில் ஏறாமல் போயிருந்தாலும் தமிழக வரலாற்றில் நிச்சயம் கலைஞர் இடம்பிடித்திருப்பார் என்பதைச் சொல்லும் கட்டுரை.

விசாலாட்சி. **கலைஞர் மு.கருணாநிதி**, பதி பப்ளிகேஷன்ஸ், விஜயபுரம் திருவாரூர், முதற்பதிப்பு, ஜூன் 1990, பக்.163.

பொதுவாழ்வில் கலைஞர் அவர்கள் கடந்து வந்துள்ள பாதைகளையும், ஒவ்வொரு கட்டமாக அவர் உயர்ந்து வந்துள்ள பாங்கையும் அவசியமாக விபரங்களுடன் சுருக்கமாகத் தரும் நூல்.

அகமுடைநம்பி.க.சி. **கலைஞரின் தலைமைத்திறன்**, வாஞ்சிமலர் வெளியீடு, மதுரை, முதற்பதிப்பு, மே 1990, பக்.270.

கலைஞரின் தலைமைத்திறன் குறித்துப் புறம் போகாமல், நெஞ்சாரக் கண்டு கூறப்பட்ட வரலாற்றுப் பதிவு. 16 இயல் பகுப்புகளைக் கொண்டது.

தமிழ்ப்பித்தன். வித்துவான், **உழைப்பால் உயர்ந்த நிதி**, வெங்கு பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, மார்ச் 1970, பக். 108.

உழைப்பால் உயர்ந்த உழைப்பாளியாம் கலைஞரின் வரலாறு பேசும் நூல்.

ரஷித். என், **நான் கண்ட கலைஞர்,** மு.சு. நாராயணன், சென்னை. முதற்பதிப்பு, மே 1976, பக்.16.

நூலாசிரியர் பார்வையில் கலைஞரைப் படம்பிடித்துக்காட்டும் நூல்.

நமச்சிவாயம். மு, **புகழ்பூத்த கலைஞர்**, பாண்டியன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு ஆகஸ்ட் 1977, பக்.136.

கலைஞரின் வரலாறு சொல்வதோடு அவரின் பன்முக ஆற்றலைக் காட்டும் நூல்.

செங்குட்டுவன். மா, **தொல்காப்பியக் கலைஞர்**, கலைஞர் 60, மக்கள் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, செப்டம்பர் 1983, பக்.72.

ஓவியர் செல்லம் கண்ணன் வரைந்த கலைஞர் வாழ்க்கை வரலாறு குறித்த படக்கதை.

வைகைச்செல்வன், **அரசியல் அரங்கில் கலைஞர்**, மக்கள் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, செப்டம்பர் 1983, பக்.72.

பள்ளிப் பருவத்திலேயே அரசியல் அரங்கில் புகுந்த கலைஞரின் படிப்படியான வளர்ச்சியைப் பைந்தமிழ்ச் சொற்களால் ஓவியமாக்கித் தந்துள்ள நூல்.

சஞ்சீவி. ந, **நெஞ்சுக்குநீதி ஒரு கருத்தீடு**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984. பக்.199–207.

இக்கட்டுரை கலைஞரின் நெஞ்சுக்கு நீதி ஒரு தன்வரலாறு என்பதோடு நம் காலத்தின் தமிழ் வரலாறு, தன்மான இயக்க வரலாறு என்பதை நிறுவமுயல்கிறது.

செம்பியன், **கலைஞர்–சமூகப் புரட்சியின் கவித்திறன்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழாமலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.242–247.

இக்கட்டுரை பண்டைய நிலப்பிரபுத்துவச் சிந்தனையாளர்களின் வடிவமான புரோகிதர்களின் மூளைக் கொத்தளங்களை இடிக்கக் கலைஞர் பழந்தமிழர் வரலாற்றுச் செய்திகளைத் துணைகொண்ட பாங்கை எடுத்து விளக்குகிறது.

இளமுருகுபொற்செல்வி, **முத்துமாலை, கலைஞரை முழுதுணர்ந்தோமா**

(மும்மணிக் கோவை), இனப்பாசறை பதிப்பகம், குழித்தலை, முதற்பதிப்பு, 1986, பக்.147.

இந்நூல் முத்துமாலை கலைஞர் மலர், தலைவர் கலைஞர் 65—வது பிறந்தநாள் மலர், தமிழினத் தலைவர் கலைஞர் பொதுவாழ்வு ஐம்பதாண்டு மலர் என்னும் மூன்று பகுதிகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.

இளவரசன். ப, **கலைஞர் வரலாறு**, தமிழோசைப் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1987, பக்.118.

கலைஞரின் வாழ்க்கையில் நடந்த முக்கியச் சம்பவங்களின் ஊடான அவரது வாழ்க்கை வரலாறு.

Subramanian. M.K, **ROLE OF KALAIGNAR IN THE DRAVIDIAN MOVEMENT**, Self-Respecter's Academy Publications, Erode, First Edition, 1988, PP. 30.

திராவிட இலக்கிய வரலாற்றில் கலைஞரின் இடத்தை மதிப்பீடு செய்யும் கட்டுரை.

குலசேகரன். டாக்டர் எஸ். **கலைஞர் கருணாநிதியும் கனியமுதுச் செல்வங்களும்**, அமிழ்தம் பதிப்பகம், வேலூர், முதற்பதிப்பு. ஜூன் 1990. பக்.102

கலைஞரின் வாழ்க்கையைப் பல தலைப்புகளில் காண்பிக்கும் இந்நூல் தமிழகத்துத் தம்பி தங்கையர் அறியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்வாணன். லேனா, **அரசியல் தலைவர்கள் வரிசை – கலைஞர் மு. கருணாநிதி,** மணிமேகலை பிரசுரம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1994, பக். 224.

கலைஞர் வரலாறு சொல்லும் நூல்.

அமுதன் அடிகள், **நெஞ்சுக்கு நீதியில் கலைஞரின் இளமைப்பருவம்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.3–14.

இது கலைஞரின் நெஞ்சுக்கு நீதி—முதல் பாகத்தை அடிப்படையாகக்கொண்டு, கலைஞரின் பிறப்பு முதல் அவரது முதல் திருமணம் வரையிலான செய்திகளை ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரையாகும்.

பச்சையப்பன். ம.வீ, **தனிவழி,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.15–28.

இன்னல்கள் நிறைந்த பாதையில் பயணித்துப் பழக்கப்பட்டுப்போன கலைஞரின் தனிவழிப் பயணத்தின் விளைவாக விளைந்த பயன்களை நெஞ்சுக்கு நீதியின் துணைகொண்டு பட்டியலிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மாசிலாமணி. பா, **கலைஞரின் தன் வரலாறு**, கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1998, பக்.29–44.

நெஞ்சுக்கு நீதி என்பது கலைஞரின் வரலாறு என்பதைவிட கழகத்தின் வரலாறு என்றே குறிப்பிடப்படுகிறது. அந்தக் கழகத்தின் வரலாற்றின் ஊடாகக்

காணத்தகும் கலைஞரின் தன் வரலாற்றைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பாலசுப்பிரமணியன். கு.வெ, **நெஞ்சுக்கு நீதி தரும் சில படிப்பினைகள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1998, பக்.45–53.**

அரசியல் சமூக வரலாறாக விளங்கும் நெஞ்சுக்கு நீதி தரும் படிப்பினைகளைக் கண்டு விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை, எதிர்காலத் தமிழகத்தில் ஆட்சி–அதிகாரத்தில் இருப்போருக்குப் பயன்படும் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது.

வீரபாண்டி ஆறுமுகம், **கலைஞர் நடந்து வந்த பாதை,** கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, **1999.**

எழுத்துலகம், அரசியல் என்னும் இருவேறு நிலைகளில் கலைஞர் நடந்து வந்த பாதையை அவரது எழுத்துலகப் பயணத்தை, அரசியல் பயணத்தைத் திரும்பிப் பார்ப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

செங்குட்டுவன். மா, **கலைஞரின் நெஞ்சுக்கு நீதி,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

இது, நெஞ்சுக்கு நீதி கலைஞரின் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறு அன்று, கழகத்தோடு இணைந்த கலைஞரின் வரலாறு என்பதைக் காட்டும் கட்டுரை.

முத்துக்கிருட்டிணன். நம்நாடு, **கலைஞரின் குருகுல வாசம்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, **1999.**

குருகுல வாசம் மேற்கொண்டவர் கலைஞர் என்பதைச் சொல்லும் கட்டுரை.

மணா, **கலைஞர். மு.கருணாநிதி,** தமிழகப் பிரபலங்களின் நதிமூலம், ருத்ரா பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, **1999, பக்.1–12.**

கலைஞரைப் பார்த்துப் பேசாமலும் கலைஞரிடன் எந்தத் தகவலும் கேட்டுப் பெறாமலும் எழுதப்பட்ட கலைஞரின் வரலாறு.

செகந்நாதன். தா, **கலைஞர் ஒரு காவியம்,** தேன்மொழி பதிப்பகம், உடுமலைப் பேட்டை, முதற்பதிப்பு, நவம்பர் 2000, பக்...241+21,

நெஞ்சிக்கு நீதி நூல்களையும் கலைஞரைப்பற்றிய பத்திரிக்கைச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு கலைஞரைப் பற்றி எழுதப்பட்ட கவிதை நூல்.

இராசா. கி, **தன் வரலாறு வகையும் நெஞ்சுக்கு நீதியும்,** கலைஞர் ஆய்வு,

அன்பு வெளியீடு, ஈரோடு, டிசம்பர் 2005, பக்.29–34.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி அவரின் வாழ்க்கை வரலாற்று நூலாக மட்டும் அமையாது அவரின் ஊடான சமுதாய நிகழ்வுகளின் வரலாறாக அமைந்திருக்கும் பாங்கினைச் சொல்கிறது.

சின்னக்குத்தூசி, **கலைஞர்**. நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2006, பக்.96.

நீண்ட, நெடிய, புகழ்மிக்க வரலாற்றுக்குச் சொந்தக்காரரான கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைக் கடலில் ஒரு துளிபோல் படம்பிடித்துக்காட்ட நினைக்கும் முயற்சியின் விளைவாக அமைந்த கட்டுரைகளின் தொகுப்பு.

யோகா. கலைமாமணி, **கலைஞர் 77**, யோகாசாவித் பப்ளிகேஷன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, ஜுன் 2006, பக்.160.

இந்நூல் புகைப்படங்களால் புனையப்பட்ட பூமாலை, கலைஞரின் வாழ்க்கையைக் காமிராவில் வார்த்திருக்கும் காவியம்.

இரத்தினகிரி. இரா & மா. உமாபதி, **கலைஞரின் காலச்சுவடுகள்**, தலைமைக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, ஜூன் 2006, பக்.96

கலைஞர் அவர்களின் 83–ஆம் பிறந்தநாள் வெளியீடான இந்நூல், கலைஞர் கண்ட போராட்டக் களங்களையும் அவரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களையும் கொண்டுள்ளது. ஓய்வறியாக் கலைஞரின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் சமுதாயப் பணி நோக்கிப் பயணிக்கிற பாங்கை இந்நூல் எடுத்து விளக்குகிறது.

ஸ்ரீவிஷ்ணு, நாஞ்சில் (தொ.ஆர்), **சாதனை நாயகன் கலைஞர்**, ஆச்சி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2006, பக். 228.

எதிர்கால சந்ததிகள் தலைநிமிர்ந்து வாழக் கலைஞர் வரலாறு ஒரு காலத்தின் களஞ்சியம் என்பதை எடுத்துச் சொல்லும் நூல்.

ராம்கி. ஜெ, **மு.க**, கிழக்கு, சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 2006, பக்.199.

'வெறும் வாழ்க்கை வரலாற்றில் ஒரு ஸ்கேன் ரிப்போர்ட் என்பதாக அறிமுகப்படுத்தப்படும் இந்நூல் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழக அரசியல் வரலாற்றுடன் குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றுடன் இணைத்துப் பேசுகிறது.

சிவலை இளமதி, **கலைஞர் மு. கருணாநிதி மணிமேகலை பிரசுரம்**, சென்னை, முதற்பதிப்பு, 2006, பக்.308.

அரசியல் தலைவர்கள் வரிசையில் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைந்த நூல்.

ஆரூர்தாஸ். **மு.கருணாநிதியின் அரசியல் பிரவேசம்,** கோட்டையும் கோடம்பாக்கமும், விகடன் பிரசுரம், ஆனந்தவிகடன், சென்னை 600002, முதற்பதிப்பு ஏப்ரல் 2006. பக் 36–39.

மு.கருணாநிதியின் அரசியல் பிரவேசம் எனும் தலைப்பில் கலைஞரின் திரையுலக வரலாற்றைச் சுருக்கமாகத் தரும் கட்டுரை.

ஏழுமலை. செ, **கலைஞரின் வாழ்க்கைச் சுவடுகள்,** கார்த்திக் வெளியீடு, சென்னை, ஜீன் 2007, பக். 112

கலைஞர் அவர்கள் இளமைக் காலம் தொட்டும் சிற்றோடையாகத் தொடங்கி காட்டாறாக உருவெடுத்துப் பெருங்கடலாக நிறைவுடன் தன்னிகரற்றத் தலைவராக வாழ்ந்து வருவதை எடுத்துக்காட்டும் நூல்.

அக்னிபுத்திரன். எல்.கே, **ஒரு சமூக விஞ்ஞானியின் சரித்திரப் பயணம்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, அக்டோபர் 2007, பக்.168.

கலைஞரின் வரலாறு சொல்லும், கலைஞரின் புகழ் பேசும் ஒரு வரலாற்றுக் களஞ்சியம்.

நீலமணி.கே.பி, **சமத்துவபுரம் தந்த சாதனையாளர் கலைஞர் கருணாநிதியின் கதை.** லியோ பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2007, பக்–80.

கலைஞரின் வரலாறு– கதைவடிவில் அமைந்துள்ளது.

கஸ்தூரிராஜா, பேராசிரியர், **திருக்குறளும் கலைஞரின் கவிதைகளும் – ஓர் ஒப்பாய்வு,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 694–703.

கலைஞரின் கவிதைகளைத் திருக்குறள் என்னும் கருத்துக் கருவூலத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் கட்டுரை.

சதாசிவம். மு, **கலைஞரின் நெஞ்சுக்கு நீதி,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.772–777.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி ஒரு பண்பாட்டு ஆவணம் மட்டுமன்று அது திருவள்ளுவரின் திருக்குறளைப் போன்று ஒரு வாழ்க்கை வழிகாட்டி நூல் என்பதை எடுத்துச் சொல்லும் கட்டுரை.

இளமதி சானகிராமன். க, **கலைஞரின் உள்ளம்,** கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக். 884–888.

கலைஞரின் நெஞ்சுக்குநீதி முதல் பாகத்தை அடிப்படையாகக் கொண்டு கலைஞர் உள்ளத்தைக் கண்டு விளக்கும் கட்டுரை.

அனுராதா, ஆர். **நெஞ்சுக்குநீதி,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர்

பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.898–904 .

எழுத்தால், சொற்றொடரால், அழகான அமைப்பால், கொஞ்சு நடையால், விஞ்சு தமிழால் கலைஞரின் நெஞ்சுக்குநீதி நம் நெஞ்சில் நிலைத்து நிற்கிறது என்பதைச் சொல்லும் கட்டுரை.

கந்தசாமி. எஸ். **கலைஞர் குறளானார்**, புலவர் எஸ். கந்தசாமி, வாழப்பாடி, 2009, பக்.372.

தமிழ்ப்பால், அமுதப்பால், தாய்ப்பால் என்னும் முப்பாலில் 131 அதிகாரங்களில் குறள் வெண்பாவில் எழுதப்பட்ட கலைஞரின் வரலாறு.

அங்கமுத்து. ஆ, **நெஞ்சுக்கு நீதியில் நடை**, கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி.1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2008, பக்.55–59.

காலம், நோக்கம், கருத்து, இடம், மக்கள் முதலிய காரணிகளால் வேறுபட்ட நடைகளைக் கொண்டமையும் கலைஞரின் நெஞ்சுக்கு நீதி மிகுதியும் கவிதை நடையைக் கொண்டமைந்துள்ளமையைக் கண்டு விளக்கும் கட்டுரை.

ஆரோக்கிய தனராசு. **கலைஞர் மு.கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதியில் வாழ்க்கை வரலாற்றுக் கூறுகள்**, கலைஞர் மு.கருணாநிதியின் படைப்புகள் தொகுதி.1. வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2000, பக்.73–78.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி முதற்பாகம், கலைஞரின் வரலாற்றைவிடக் கலைஞரின் இயக்கப் பங்களிப்பை முதன்மையாகக் கொண்டமையும் பாங்கினைச் சொல்லும் கட்டுரை.

இராசு. முனைவர். உ, **கலைஞர் ஒரு போராளி**, கலைஞர் மு.கருணாநிதி படைப்பிலக்கியங்கள் தொகுதி.1. வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2008, பக்.86–94.

சாதி அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளைக் களைதல். மொழி உரிமை என்பது ஒரு கலாச்சார உரிமை, சமூக நீதி, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பனவற்றை இந்தியாவிற்கு அளித்த தனிப்பெரும் தலைவராகத் திகழ்கிற கலைஞரின் போராட்ட வாழ்வியலை எடுத்து விளக்கும் கட்டுரை.

செல்வகணபதி. சண்முக, **நெஞ்சுக்கு நீதி சமகால வரலாறு**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக்.103–118.

எந்தத் தனிமனிதன் வரலாறும் அந்தத் தனிமனிதனோடு நின்றுவிடுவதில்லை. அவன் ஒரு சமுதாய உறுப்பினன் ஆகையால் சமுதாயத்தின் தாக்கம் அவன் வாழ்வில் நிலவுவது இயற்கை என்ற நிலையில் கலைஞரின் நெஞ்சுக்கு நீதியில் சமகால, சமுதாய வரலாறு காணத்தகும் பாங்கினைக் கண்டு விளங்குகிறது இக்கட்டுரை.

கலாநிதி. ப, **மு.க – வரலாற்றின் பயணம்,** இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்) சென்னை, ஜூன் 2008, பக். 18–32.

வரலாற்றின் ஊடாகக் கலைஞரின் வாழ்க்கைப் பயணத்தை மதிப்பீடு செய்யும் கட்டுரை.

இராசா. கி, **இலக்கிய வகைமை நோக்கில் நெஞ்சுக்கு நீதி,** செந்தமிழ்ச்செல்வி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, பக். 10.

கலைஞரின் வாழ்க்கைப் போராட்டங்களை விளக்கியிருக்கும் தன் வரலாற்று நூல் நெஞ்சுக்கு நீதி என்பதை ஆராய்ந்து சொல்லும் கட்டுரை.

கோபாலன். டாக்டர்.ந, **கலைஞர் காவியம்,** தெய்வீசுவரி கோபாலன், சிவில் விமான நிலையம், கோவை,......., பக். 108.

கலைஞரின் வரலாறு– செய்யுள் வடிவில் அமைந்துள்ளது.

.................., **கலைஞர் 85,** மாலைமலர், சென்னை, 31.05.2008, பக். 30.

கலைஞரின் வாழ்க்கைக் குறிப்பு மற்றும் அவரின் அரிய புகைப்படங்களின் தொகுப்பு.

கடிதங்கள்

பொன்முடி சுடரொளி. ஆ. ஆ, **கலைஞர் கருணாநிதியின் மடல்கள் (1970 – 1980) – ஓர் ஆய்வு,** முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.

சென்னை, மாநிலக் கல்லூரி தமிழ்த்துறையில் முனைவர் மெ. சுந்தரம் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட முனைவர் பட்ட ஆய்வு.

ஜெயதேவன். வ, **கலைஞரின் கருத்து வெளியீட்டு முறை,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழாக்குழு, சென்னை, ஜூன். 1984, பக்.217–224

முரசொலியில் வெளியான கலைஞரின் கடிதங்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு கலைஞரின் கருத்து வெளியீட்டு முறையை இக்கட்டுரை விளக்குகிறது.

சிவசுப்பிரமணியம். சோ, **கலைஞரின் மடல்களில் விடுதலை,** ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1987..

கலைஞரின் கடித இலக்கியத்தில் காணப்படும் விடுதலைக் கருத்தியலைக் கண்டு விளக்கும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முனைவர் மா. செல்வராசனின் நெறியாளுகையில்

மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

பாவைசந்திரன், **கலைஞர் கடிதத்தின் சக்தி**, கலைஞர் களஞ்சியம், சி.சு. இராசேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை, 1989, பக்.228–233.

1968 ஆம் ஆண்டு அக்டோபர் 22–ஆம் நாள் ஒரு திருமணச் செய்தியோடு கடிதம் எழுதத் தொடங்கிய கலைஞரின் கடிதங்கள் கழகத் தோழர்களின் வாழ்விலே பிரிக்க முடியாது பின்னிப்பிணைந்து ஓர் அன்புக்குரலாக, தோழமை அழைப்பாக அமைந்திருக்கும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

கண்ணன். இரா, **கலைஞர் மீது கண்ணன் தூவிய கடித மலர்கள்,** மணிமேகலை அச்சகம், இராசபாளையம், 1989, பக்.118.

நூலாசிரியர் 1988 பிப்ரவரி 6 –ஆம் நாள் முதல் தினம் ஒரு கடிதம் என்று கலைஞருக்கு எழுதி அனுப்பிய கடிதங்களின் தொகுப்பு நூல்.

காசாமைதீன், ஆயை மு. **முரசொலியில் கலைஞர் கடிதங்கள் (1990–91)** வெண்ணிலா வெளியீட்டகம், அருப்புக்கோட்டை, முதல் பதிப்பு, செப்டம்பர் 1997, பக். 192.

தமிழில் கடித இலக்கியங்கள்
முரசொலியில் மு.கருணாநியின் கடித விவரங்கள்
முரசொலியில் மு.கருணாநியின் கடிதங்கள் உள்ளடக்கங்கள்
ஆகிய இயல் பகுப்புகளைக் கொண்ட ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேட்டின் அச்சு வடிவம்.

அந்தோனிகுருசு. அ, **கலைஞரின் கடிதக்கலை நுட்பங்கள்**, கலைஞரின் படைப்பிலக்கியத்திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.56–68.

ஒப்பீட்டு உத்திமுறை, கற்பனைப் படைப்பாக்கம், இதழியல் தகவல் மூலங்களை மேற்கோள் காட்டி விமர்சனம் செய்தல், மருட்கையூட்டும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சான்று காட்டல் ஆகிய கலை நுட்பங்களின் ஊடாகக் கலைஞரின் கடிதங்கள் அமைந்திருக்கும் பாங்கினைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

உதயசூரியன். சா, **கலைஞரின் கடிதங்களில் சங்க இலக்கியம்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.69–80.

கலைஞரின் கடிதங்களில் சங்க இலக்கியம் எந்த அளவு, எந்தெந்த வகையில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டு விளக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை கடித இலக்கியத்தின் அனைத்து நுட்பங்களையும் ஆற்றலாகப் பயன்படுத்தி கலைஞர் கடிதங்கள் எழுதியுள்ள பாங்கையும் விவரிக்கிறது.

தமிழ்மாறன்.மோ, **கலைஞரின் கடிதங்கள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.81–92.

கலைஞர் கடிதங்களில் காணத்தகும் உள்ளடக்கம், உத்தி ஆகியவற்றைத் தொகுத்துச் சுட்டுவதுடன், கலைஞரின் கடித அமைப்பு முறை, மொழிநடை ஆகியவற்றை விளக்கி, கடித இலக்கிய உலகில் கலைஞரின் கடிதங்கள் பெறும் இடத்தைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சக்குபாய். இரா, **கலைஞரின் கடித இலக்கியத்தின் உள்ளடக்கம்.** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998, பக்.93–107.

தமது விடாப்பிடியான கொள்கையால், போராட்டத்தால், அரசியல் நுழைவால், தலைமையனுபவத்தால், தமிழருக்காய்ச் சிந்திக்கும் சிந்தனையால் வளம் பெற்ற செழுமையான உள்ளடக்கத்தைக் கலைஞரின் கடிதங்கள் கொண்டுள்ள பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராமசாமி. வே, **ஒப்பு நோக்கில் இருபெரும் கடிதங்கள்**, கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1998 பக்.108–120.

1966, டிசம்பர் 26–இல் அண்ணா எழுதிய கடிதமும், 1996 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் எட்டாவது மாநில மாநாட்டிற்குக் கலைஞர் எழுதிய கடிதமும் ஒப்பு நோக்கப்பட்டு உள்ளடக்க அடிப்படையிலும், சொல்லாடல் உத்திகளிலும் அக்கடிதங்களில் கடைபிடிக்கப்பட்ட முறைகளைத் தெளிவுபடுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கணேசன்.சா. **கலைஞரின் கடிதங்கள் ஓர் ஆய்வு**, தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக்கழகம், சென்னை, 1999.

கலைஞரின் கடிதங்கள் இலக்கியக் காவியங்கள், கருத்துக் கருவூலங்கள், இவற்றில் ஈரம் உண்டு, வீரம் உண்டு, வேகம் உண்டு, தென்றலின் மென்மை உண்டு, புயலின் சீற்றமும்

உண்டு, அரசியல் உண்டு, இலக்கிய ஆராய்ச்சியும் உண்டு என்பதுடன் தேனாக இனிக்கும் எதிரியைத் தேளாகவும் கொட்டும், அனைத்திற்கும் மேலாக தமிழ் தமிழர் நலன் காக்கும் கேடயங்களே என்பதைக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

முத்துக்கண்ணன். அ, **முரசொலியில் கலைஞரின் கடிதங்கள்,** (ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2007, பக்.208.

மார்ச் 2005 முதல் அக்டோபர் 2007 வரை முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்களை முதன்மை ஆதாரமாகக்கொண்ட இவ்வாய்வேடு கலைஞரின் கடிதங்களும் திராவிட முன்னேற்றக்கழக வளர்ச்சியும், அரசியல் நாகரிகம், சமுதாயச்சிந்தனைகள், தலைவர்கள் பற்றிய மதிப்பீடு ஆகிய இயல்களைக் கொண்டுள்ளது.

சாதிக்பாட்சா. முனைவர், மு. **கலைஞரியம்**, இராஜா வெளியீட்டகம்,

திருச்சிராப்பள்ளி, 2007 ,பக்கம்.6+110

கலைஞர் கடிதங்களில் சமூகம்
கலைஞர் கடிதங்களில் அரசியல்
கலைஞர் கடிதங்களில் மொழிப்பற்று
கலைஞர் கடிதங்களில் நடை
கலைஞர் கடிதங்களின் தொகுப்புரை
ஆய்வாளர்களின் நோக்கில் கலைஞர் யார்?
ஆய்வறிஞர்கள் பார்வையில் கலைஞர்
ஆகிய கட்டுரைகளின் தொகுப்பு

உமாமகேஸ்வரி, மு. **அழகியற் பார்வையில் கலைஞரின் கடிதங்கள்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.926–931 .

கலைஞரின் படைப்பிலக்கிய வகைகளுள் ஒன்றான கடித இலக்கியத்தில் அவரின் அழகியற் பார்வை வெளிப்படும் திறனை விளக்கும் கட்டுரை.

இராசேந்திரன். தி.வெ, **மொழிப்போரில் ஒரு களம்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 101–105.

கலைஞரின் மொழிப்போரில் ஒரு களம் என்னும் கடிதங்களின் தொகுப்பு நூல் மொழிவெறியைத் தூண்டக்கூடிய எழுத்து வடிவம் என்று குற்றம் சாட்டும் கட்டுரை.

சார்லஸ். பேரா. லா, **கலைஞரின் கடிதங்களில் கடித இலக்கிய உத்தி முறைகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 178– 183.

கலைஞரின் கொள்கை, பல்துறை உழைப்புகள், பரந்துபட்ட அறிவாற்றல், தமிழின முன்னேற்றத்தின் மீது அவர் கொண்டுள்ள பேரீடுபாடு முதலியனவற்றினைக் கலைஞரின் கடிதங்களில் பொதிந்துள்ள பாங்கினைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பிரவீணா. து, **கலைஞர் கடிதத்தில் காணப்படும் கருத்துக் கருவூலங்கள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 275 – 278.

கலைஞரின் கடிதங்கள் ஒரு காலகட்டத்தின் கருத்துக் கருவூலங்களாகத் திகழ்வதைச் சொல்லும் கட்டுரை.

அசரியாகிருபாகரன், **கடித இலக்கியத்தில் கலைஞரின் கருத்தோவியம்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 216 – 221.

கடித இலக்கியத்தில் கலைஞரின் கருத்தோவியங்கள் பன்முகக்

தோற்றத்துடன் காட்சிதருகின்றன என்பதைச் சொல்லும் கட்டுரை.

கட்டுரைகள்

இராஜேந்திரன். சி.சு, (பதி.ஆர்), **கலைஞர் களஞ்சியம்,** பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு **1989. பக்.328.**

கலைஞர் அவர்களின் பணி குறித்தும் படைப்புகள் குறித்தும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் எழுதியுள்ள 74 கட்டுரைகளின் தொகுப்பு. கலைஞர் அவர்களின் பன்முகப் பரிமாணத்தைக் கண்டு விளக்கும் நூல்.

துரைமுருகன். **சட்டமன்றத்தில் கலைஞர்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம். சென்னை, முதற்பதிப்பு, **1989, பக்.20–22,**

கலைஞரின் சட்டமன்றப் பணிகள் வெற்றிப்பணியாக அமைந்ததற்குக் காரணம் அவரது அயராத உழைப்பு, அற்புதமான நினைவாற்றல், சொற்சிலம்பாட்ட சமத்காரம், வாதிடும் வல்லமை, எதிரிகளை வீழ்த்திட அவர் வகுத்திடும் வியூகம் என்பதனை விளக்கும் கட்டுரை.

குழந்தைசாமி. டாக்டர். வா.செ. **கலைஞரின் பல பரிமாணங்கள் பல பக்கங்கள்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன். (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு **1989, பக்.33–35.**

இலக்கியப் படைப்பாளர், அரசியல் தலைவர், சமுதாயப் புரட்சியாளர் என்ற பரிமாணங்களில் கலைஞரின் பக்கங்களைக் கண்டு விளக்கும் கட்டுரை.

இராஜேந்திரன். டாக்டர்.மு, **கலைஞரின் மேடைத் தமிழ்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்.) பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, **1989, பக்.85–89.**

உணர்ச்சியுடனும் கேட்போருக்கு ஆவலைத் தூண்டும் படியாகவும் அமைவதே சிறந்த பேச்சு என்பதற்கிணங்கக் கலைஞரின் சொற்பொழிவுத் திறன் நிறைந்து விளக்கும் தன்மை பற்றிப் பேசும் கட்டுரை.

நடராசன். ஔவை. **தானைத் தலைவரும் தமிழியற் கட்டுரைகளும்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை, **1989, பக்.183–184.**

தமிழ்த்தாய்க்கு மலர்ந்த தன் உள்ளத்தையே மனக்கோயிலாக்கிய மானமறவர் கலைஞர் என்பதை நிறுவும் கட்டுரை.

செல்வராசன். டாக்டர்.மா, **புரட்சிக்கவிஞரும் டாக்டர் கலைஞரும்,** கலைஞர் களஞ்சியம் சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்.) பாரதி பதிப்பகம். சென்னை, **1989. பக்.219.**

கொள்கை மாற்றல், திருட்டுத்தனம் எனக் குறிக்கோள் உறுதியை வரைந்தவர் பாரதிதாசன், அத்தகு உறுதிமாறாக் குறிக்கோள் உள்ளத்தினர் கலைஞர்

சுந்தரம்.டாக்டர்.மெ. **இலக்கிய வரலாற்றில் கலைஞர்,** கலைஞர் களஞ்சியம், சி.சு. இராஜேந்திரன் (பதி.ஆர்) பாரதி பதிப்பகம், சென்னை, 1989. பக்.313–315.

கலைஞரின் இலக்கியப் படைப்புகளை, கவிதைகள், கதைகள், நாடகங்கள், காப்பியங்கள், மடல்கள், சொற்பொழிவுகள், இலக்கிய விளக்கங்கள் எனப் பாகுபடுத்தி, தமிழ் இலக்கிய வரலாற்றில் கலைஞருக்கான இடத்தை மதிப்பீடு செய்வதாக அமைகிற கட்டுரை.

மகாதேவன் கொண்டல்.சு. **கலைஞர் காலத்தில் வளரும் தமிழ்– கழகக்குரல்,** ஆண்டுமலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975. பக்.42–43.

கலைஞர் தமிழருக்கு ஆற்றும் பணி தமிழ்மொழி ஆலின் விழுதுகளாக ஊன்றி அதனை நிலைப்படுத்தும் என்பதை எடுத்துச் சொல்லும் கட்டுரை.

இராசசேகரன்.ச, **தமிழாய்ந்த தமிழ் மகன் கலைஞர்,** அன்பு பதிப்பாலயம், விருதாசலம், முதல்பதிப்பு, ஜுலை 1988, பக். 62.

தமிழாய்ந்த தலைமகன். 1–19.
திரைஉலகில் கலைஞர் 20–30
மொழிப்போர் களத்தில் கலைஞர் 31–44
ஆட்சியில் தமிழ்மாட்சி கண்ட கலைஞர் 45–53.
தமிழினக் காவலர் கலைஞர் 54–62
ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

அக்பா கவுஸா, **மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் மாமனிதா டாக்டா கலைஞா வாழ்க்கை வரலாறு,** மணிமேகலை பிரசுரம், சென்னை, 2007, பக். 316

மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் மாமனிதா டாக்டா கலைஞா வாழ்க்கை வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டும் நூல்.

கலாவதி. க, **கலையரசர் கண்ட கவியரசர் இளங்கோவடிகள்,** கலைஞர் படைப்புலகம் ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக். 68–73.

கலைஞரின் மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று எனும் உரைத் தொகுப்பில் இளங்கோவடிகள் என்னும் தலைப்பில் அமைந்த உரையை ஆய்வு செய்து கலைஞரின் பார்வையில் இளங்கோவடிகளைக் காட்டும் ஆய்வு.

சுரேசு. பா, கலைஞர். மு. **கருணாநிதியின் படைப்புகளில் பழந்தமிழிலக்கியத் தாக்கம்,** கலைஞர் படைப்புலகம், ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு மே 2008, பக். 115–120.

கலைஞர் அவர்கள் தம் படைப்புகளில் சங்கச் சான்றோர் தம் சிந்தனைகளை

இன்றைய மக்களுக்குப் புரியும் வகையில் எளிமைப்படுத்தித் தரும் விதத்தை விளக்கும் கட்டுரை.

நிர்மலா மோகன், **கலைஞர் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.812–819.

கலைஞரின் 'சிந்தனையும் செயலும்' என்ற நூல் வளரும் தலைமுறைக்குத் தேவைப்படும் 50 வாழ்வியல் சிந்தனைகளைத் தந்துள்ள பாங்கினை எடுத்து விளக்கும் கட்டுரை.

ஜெயலட்சுமி, க. **கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகளின் வழி ஆட்சி அமைப்பு,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.869–876.

ஆட்சியியலின் தத்துவங்களையும், அரசியல் அடிப்படை நெறிகளையும் கலைஞரின் உரைகள் கொண்டிருக்கும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

அமுசு. மு, **கலைஞர் கண்ட முத்தமிழ்,** கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி 1, வசந்தா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2009, பக்.10–15.

தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் உள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது என்னும் உண்மையைத் தம் படைப்புகள் மூலம் உணர்த்தியவர் கலைஞர் என்பதைச் சொல்லும் கட்டுரை.

சுரேஷ். ஆ, **கலைஞரின் பேசும் கலை வளர்ப்போம் – தொகுப்பில் மேடைப்பேச்சு,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி 1 , வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 188 – 193.

கலைஞரின் 'பேசும் கலை வளர்ப்போம்' என்ற கட்டுரைத் தொகுப்பில் மேடைப் பேச்சு பற்றி இடம்பெற்ற கருத்துகளின் தொகுப்பு.

குழந்தைசாமி. அ, (தொ.ஆர்), **கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள்.** தொகுதி.1, வசந்தா பதிப்பகம். சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2008, பக்.294.

பிப்ரவரி 12, 13, 2009, இருநாட்கள் திருச்சி, தூய வளனார் கல்லூரியின் தமிழாய்வுத் துறையில் நடைபெற்ற கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் குறித்த தேசியக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற 50 கட்டுரைகளின் தொகுப்பு.

குழந்தைசாமி. அ, (தொ.ஆர்), **கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள்.** தொகுதி. 2, வசந்தா பதிப்பகம். சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2008, பக்.294.

பிப்ரவரி 12, 13, 2009, இருநாட்கள் திருச்சி, தூய வளனார் கல்லூரியின் தமிழாய்வுத் துறையில் நடைபெற்ற கலைஞர் மு.கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் குறித்த தேசியக் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு.

சொற்பொழிவுகள்

இரகுராமன். வ, **கலைஞரின் சொற்பொழிவுகளில் அணிநலன்கள்,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக். 108–116.

இயற்கையோடு இயற்கை, இயற்கையோடு மனிதன் மனிதனோடு மனிதன் போன்றவைகளை ஒப்புமைப்படுத்திப் பேசி சொற்பொழிவுக் கலைக்குத் தனியொரு இடத்தைக் கலைஞர் ஏற்படுத்தியிருக்கும் பாங்கைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராசேந்திரன். மு, **கலைஞரின் மேடைத் தமிழ்–அமைப்பும் அழகியலும்,** அலமேலு பதிப்பகம், சி.அய்யம்பட்டி, முதற்பதிப்பு, 1989, பக்.162.

கலைஞரின் சொற்பொழிவுகளை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு அதன் அமைப்பியலையும் அழகியலையும் ஆராய்வதாக இந்நூல் அமைந்துள்ளது. இது நூலாசிரியரின் முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவம்.

மனோகரன். பே, **நெருக்கடி நிலையில் கலைஞரின் சொற்பொழிவுகள்,** கலைஞரின் படைப்பிலக்கியத் திறனாய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, டிசம்பர் 1998, பக்.326–338.

ஆற்றல்மிக்க நாவன்மைக்கும் கேட்டாரைப் பிணிக்கும் சொல்லாற்றலுக்கும் அரசியல் மாற்றத்தைப் பேச்சால் சாதிக்கமுடியும் என்பதற்கும் கலைஞரின் நெருக்கடிக் காலச் சொற்பொழிவுகள் எடுத்துக்காட்டாய் அமைந்திருக்கும் பாங்கை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

வெங்கடேசன். ந. **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் சட்டமன்ற உரைகள்,** முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர், ஜூன் 1998, பக்.305+ 29.

சட்டமன்ற உரைகளில் கலைஞர் உரை,கலைஞரின் அரசியல் கோட்பாடு, கலைஞரின் தமிழ் உணர்வு, கலைஞரின் சமுதாய உணர்வு, கலைஞரின் பகுத்தறிவுச் சிந்தனைகள், கலைஞரின் மொழிநடை, கலைஞர் உரையின் விளைவுகள் ஆகிய ஏழு தலைப்புகளில் அமைந்த ஆய்வேடு.

கதிர்வேல். கு, **கலைஞரின் சொற்சிலம்பம்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிடமுன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

கலைஞரின் சொற்பெருக்காற்றலைச் சான்றுகளுடன் விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வெங்கடேசன். ந, **கலைஞர் சட்டமன்ற உரைநயம்,** காந்தி பதிப்பகம், நாட்டுச்சாலை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2007, பக்.191.

கலைஞரின் சட்டமன்ற உரைகள் அமைந்துள்ள பாங்கு, அவற்றின் வெளிப்பாட்டால் ஏற்பட்டுள்ள பயன்கள், எதிர்க்கட்சியினரால் அவை எவ்வாறு மதிக்கப்பட்டன, மதிக்கப்படுகின்றன என்பனவற்றை ஆராய்ந்து அறியும் நோக்கில் இந்நூல் அமைந்துள்ளது.

கதிர்வேல். கு, **கலைஞரின் சொற்சிலம்பம்**, தலைவர் கலைஞர் 84 அன்றும் இன்றும், இசைவேளாளர் முற்போக்கு நலச்சங்கம், சென்னை, 2007, பக்.55–59.

கலைஞர் அவர்களின் சொற்பெருக்காற்றலைக் கண்டு விளக்கும் கட்டுரை.

இராசேந்திரன்.மு, **கலைஞரின் மேடை இலக்கியம்**, கலைஞரின் படைப்பிலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 2008, பக்.295–306.

அமைப்பியல், அழகியல் ஆகிய இரண்டு நிலைகளில் நின்று கலைஞரின் பேச்சுக்கலையின் சிறப்பைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வேழவேந்தன், க. **நாடு போற்றும் நாயகரின் நகைச்சுவைத் தோரணங்கள்,** கலைஞர் படைப்புலகம்– ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.778–784.

கலைஞரின் சொற்களில் அற்புதமான நகைச்சுவை உணர்வு இயல்பாகவே இழைந்து நடைபோடும் பாங்கை அவரின் சட்டமன்றப் பொழிவுகளின் துணை கொண்டு விளக்கும் கட்டுரை.

புகழேந்தி, முனைவர் த. **கலைஞரின் கல்வி உரைகள்**, கலைஞர் படைப்புலகம் – ஆய்வுக்கோவை, அறிஞர் பேரவை, சென்னை, முதற்பதிப்பு, மே 2008, பக்.850–855.

மாணவர் பற்றிய கலைஞரின் கருத்துகளையும், மாணவர்களிடையே உரையாற்றுவதற்குக் கலைஞர் கைக்கொண்ட உத்திகளையும் கண்டு விளக்கும் கட்டுரை.

கலைமணி. கவிஞர் பி, **இளைய சமுதாயம் எழுகவே–கலைஞர் மு. கருணாநிதி,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 121 – 126.

இளைய சமுதாயமே எழுக என்னும் நூலில் சொற்பொழிவுகளின் தொகுப்பு கலைஞர் முன்வைத்துள்ள குறிக்கோள் நிலைகளை ஆராய்ந்து விளக்கும் கட்டுரை.

காளீஸ்வரி. அ, **கலைஞரின் மேடைப்பேச்சுகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி – 1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு,

டிசம்பர் 2008, பக். 144–146.

கலைஞரின் மொழிப்பற்று அவருடைய பேச்சாற்றலில் வெளிப்படும் பாங்கைக் கண்டு விளக்கும் கட்டுரை.

பொற்சிலம்பு. இரா, **அஞ்சுகப் புதல்வரின் அருந்தமிழ் உரைகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 56–64.

குற்றால அருவியெனத் துள்ளிவரும் தெள்ளுதமிழ்நடை, வற்றாத சிந்தையின் வளம் பொதிந்த கருத்துக்கள், ஆங்காங்கே சுவைசேர்க்கும் அழகிய உவமைகள், உருவகங்கள், சொற்பொழிவின் நோக்கத்திற்கு அரண் சேர்க்கும் கிளைக்கதைகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து கலைஞரின் சொற்பொழிவு தமிழினத்தைத் தட்டியெழுப்பும் எழுச்சிப் பண்ணாக விளங்குவதைச் சுட்டிக்காட்டும் கட்டுரை.

ராதிகா. ப, **கலைஞரின் நகைச்சுவை நயம்**, கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2008, பக். 119 –122.

கலைஞரின் பேச்சுகளில் ததும்பும் நகைச்சுவை நயத்தைக் கண்டு விளக்கும் கட்டுரை.

வேல்முருகன். சி, **கலைஞரின் சட்டமன்ற உரைகளில் நகைச்சுவை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி 2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 169–173.

சட்டமன்றத்தில் உரையாற்றும்போது தம்முடைய இயல்பான நகைச்சுவையால் அனைவரையும் மகிழ்விக்கும் பண்பு கொண்டவராகக் கலைஞர் விளங்கும் பாங்கைக் கண்டுவிளக்கும் கட்டுரை.

சலேத். ஜா, **பகுத்தறிவும் நுண்ணறிவும் நிறைந்த கலைஞரின் நகைச்சுவை,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள், தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 205 – 209.

சொல்லவந்த செய்திக்கு வல்லமை சேர்க்கும் வகையிலும் சிரிப்பை மட்டுமின்றிச் சிந்தனையையும் தூண்டும் முறையிலும் பகுத்தறிவுக் கருத்தும் நுண்ணறிவுத் திறமும் பளிச்சென வெளிப்படும் பாங்கிலும் கலைஞரின் நகைச்சுவைகள் திகழ்வதை ஆய்ந்து விளக்கும் கட்டுரை.

ஞானதாஸ். செ, **கலைஞரின் மேடைப் பேச்சுத் திறன்கள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி –2, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 231– 234.

சொற்பொருள் நயங்களால், சொல்லும் முறையால் அனைவரையும்

சொக்கவைக்கும் ஆற்றல் கொண்ட கலைஞரின் பேச்சுத்திறன் பற்றிப்பேசும் கட்டுரை.

திலகவதி. க, **கலைஞரின் சட்டமன்ற உரைகளில் சமுதாய உணர்வு,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோவில், முதற்பதிப்பு, 2009, பக்.37–43.

டிசம்பர் 1972 நவம்பர் 1970, 15 மார்ச் 1974, 4 மார்ச் 1974, 11 டிசம்பர் 1977 ஆகிய நாட்களில் கலைஞர் தமிழக சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளிலிருந்து அவரது எண்ணம், மொழி, செயல் ஆகிய மூன்றும் சமுதாய நலம் பற்றியே அமைந்திருந்தது என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

சுந்தரம். எஸ்.எஸ், **கலைஞர் ஒரு பேச்சாளர்,** கலைஞர் 51, பிரபு பதிப்பகம், சென்னை, ..., பக். 70–84.

கேளாதவரும் விரும்பிக்கேட்கும்படியான கலைஞரின் மேடைப்பேச்சுச் சிறப்பை விளக்கும் கட்டுரை.

இதழியல்

இன்னாசி. சூ, **கலைஞரும் இதழ்களும்,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.89–96.

இளமையிலிருந்தே இதழ்களோடு தொடர்புகொண்டிருந்த கலைஞரின் இதழியல் பணிகளை மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சண்முகநாதன். ஐ, **ஒரு பத்திரிக்கையாளன் பார்வையில் கலைஞர்,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, 1999.

தலைவர் கலைஞரின் சிறப்புக்களைப் பத்திரிக்கையாளன் என்ற நிலையில் நின்று கண்டு விளக்கும் கட்டுரை.

செங்குட்டுவன். மா, **இதழியல் துறையில் தடம்பதித்த சாதனையாளர் கலைஞர்,** மீண்டும் கவிக்கொண்டல், சென்னை, ஜனவரி 2002, பக்.11–18.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் 2001–இல் நடைபெற்ற இதழியல் கருத்தரங்கில் 'இதழியல் துறையில் தடம்பதித்த சாதனையாளர் கலைஞர்' அவர்கள் என்ற தலைப்பில் ஆற்றிய உரை

பிரபஞ்சன். **கலைஞரின் முரசொலி முழக்கம்,** இந்தியா டுடே (மு.கருணாநிதி சிறப்பிதழ்), சென்னை, ஜூன் 2008, பக்.106–107.

புதிய மரபு சார்ந்து முரசொலி இதழைக் கலைஞர் நடத்திய பாங்கை வியந்து பேசும் கட்டுரை.

இருதயராஜ் .து, **கலைஞரின் இதழியல் பணிகள்,** கலைஞர் மு. கருணாநிதியின் படைப்பிலக்கியங்கள் தொகுதி–1, வசந்தா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, டிசம்பர் 2008, பக். 112–114.

கலைஞரின் இதழியல் பணியில் முரசொலி முதன்மை இடம்பெறும் பாங்கைச் சொல்லும் கட்டுரை.

கதிரவன். க, **ஆய்வு நோக்கில் கையில் அள்ளிய கடல்,** கலைஞர் படைப்பிலக்கியப் பார்வை, தமிழ்த்தாய் அறக்கட்டளை, மாரியம்மன் கோயில், முதற்பதிப்பு, 2009, பக்.203–210.

இதழாளர் கேள்வி கேட்பதற்கும் கலைஞர் பதில் கூறுவதற்கும் இடைப்பட இருப்பது ஓரிரண்டு நொடிகளே. ஆனால் கலைஞர் கூறும் பதில்களில் எள்ளலும், சிலேடையும், சமூகப் பொறுப்புணர்வும் பொதிந்திருப்பதை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

பயண இலக்கியம்

தருமன். நாகை, **கலைஞரின் இனியவை இருபது,** அஞ்சுகம் – கலைஞர் மலர் – 52–வது பிறந்த நாள் சிறப்பு மலர், மீ.அ. இளமுருகு பொற்செல்வி, சென்னை, 1975.

இனியவை இருபது – என்னும் பயண இலக்கியத்தின் மூலம் கலைஞர் வாசகரைத் தன்பக்கம் கவர்ந்திழுத்திருக்கின்ற பாங்கைச் சொல்லும் கட்டுரை.

பிற/பொது

புரட்சிமணி, **கலைக்களஞ்சியத்தில் கலைஞர்,** புரட்சிமணி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1951, பக்.20.

கலைஞரின் புகழ் பேசும் எழுத்து, மக்களை மதியுள்ளவர்களாக்கக் கலைஞரின் கலையைப் பயன்படுத்த வேண்டுகிறது.

பேறறிஞர் அண்ணா, **அரசியல் வாரிசு,** அன்னை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1969, பக்.35.

கலைஞர் அவர்களின் 45–வது பிறந்தநாள் விழாவில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை

இராசேந்திரன். பி.எல், (தொ.ஆர்.), **பொன்னாரம்,** பூங்கொடி பதிப்பகம், சென்னை,

மே 1973, பக்.240.

கலைஞரின் பொன்விழா வெளியீடான இந்நூல் கலைஞரோடு அவரது இளமைப் பருவம் முதல் பழகிய அருமை நண்பர்கள் முப்பத்து ஒருவரின் கலைஞர் குறித்த கட்டுரைகளின் தொகுப்பு.

கலைச்செல்வி. பெங்களூர், **சகாப்தநாயகன்**, கலைச்செல்வி பதிப்பகம், பெங்களூர், 1974, பக்.32.

கலைஞரின் 48–வது பிறந்தநாள் மலரில் திரு.பக்தவத்சலம் எழுதிய பல்லாண்டு காலம் வாழ்ந்து பார் சிறந்திட வழிவகுத்திடுக என்னும் கட்டுரையுடன் அண்ணா, எம்.ஜி.ஆர், உள்ளிட்ட பலர் கலைஞர் குறித்துத் தெரிவித்துள்ள கருத்துக்களின் தொகுப்பாக இந்நூல் உள்ளது.

ரஷீத். என், **பெரியார் கருணாநிதி**, சந்திரா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1977, பக்.48.

பெரியார் கலைஞர் நம் பெரியாரின் கரு, அண்ணாவின் உரு. பெரியாரின் சிந்தனைகளைச் செயற்படுத்திக் காட்டியவர் கலைஞர் என்பதைச் சொல்லும் நூல்.

கயிலைமன்னன், **களத்தில் கருணாநிதி**, லிங்கம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, செப்டம்பர் 1978, பக்.72.

நெருக்கடிநிலைக் காலத்திலும் அதன்பிறகு எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்திலும் கலைஞருக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு களத்தில் கலைஞர் நின்றமையைக் காட்டும் நூல்.

இராசு. கே.எஸ், **கரிகாலன் சகாப்தம்**, இராணி பதிப்பகம், பெரம்பலூர், முதற்பதிப்பு, 1979, பக்.48.

தன்னலமற்ற தியாக உள்ளங்களை வழிநடத்தும் நம்பிக்கைக்குரிய தளபதியாக வழிகாட்டியாகக் கலைஞர் திகழ்ந்துகொண்டிருப்பதைப் பற்றிப் பேசும் நூல்.

இரகுராமன். வ, **கலைஞரின் மொழித்திறன்**, ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. 1983.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் கலைஞரின் மொழித்திறன் குறித்து, முனைவர் மா. செல்வராசன் அவர்களின் நெறியாளுகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

செங்குட்டுவன். மா, **கலைஞர் கண்ட வள்ளுவர் கோட்டம்**, திருமாறன் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1983, பக். 76.

வள்ளுவர் கோட்டம் காண வருவோருக்குப் பயன்படும் வகையிலும், கலைஞர் எழுதிய சித்திரத்தை மறைக்க முயன்றோருக்கு வியப்பளிக்கும் வண்ணமும் எழுதப்பட்ட நூல்.

விசுவநாதம். கி.ஆ.பெ, **திருக்குறளின் செயல்திறன் கலைஞர்**, கலைஞர் மணிவிழா மலர், சென்னை, 1984.

திருக்குறளின் செயல்திறனாகக் கலைஞர் விளங்கும் பாங்கினைச் சொல்லும் கட்டுரை.

சரோஜா. மு, **கலைஞரின் படைப்புகள் – ஓர் ஆய்வு**, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை. 1984.

கலைஞரின் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள், திரைப்படங்கள் எனக் கலைஞரின் படைப்புகள் குறித்து சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் மெ. சுந்தரம் அவர்களின் நெறியாளுகையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

கனகராசன். இராவி, **நெருப்பாற்றில் மலர்ந்த சிவப்புரோசா கலைஞர்**, புரட்சிக்குயில் பதிப்பகம், பெங்களூர், முதற்பதிப்பு, 1984, பக்.58.

நெருப்பாற்றில் மலர்ந்த சிவப்பு ரோசாவாம் கலைஞர் என்னும் பொற்குடத்திற்குத் திலகமிடும் முயற்சியின் விளைவு.

தென்னரசு எஸ்.எஸ், **இவர்தான் கலைஞர்**, பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1984, பக்.84.

கலைஞரின் மணிவிழா வெளியீடான இந்நூல் கலைஞரைப் பற்றிய துணுக்குச்செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியனவற்றின் தொகுப்பாக அமைந்துள்ளது.

பொன்னுசாமி. அரங்க, **கலைஞரும் கலையுணர்வும்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.46–53.

கலைஞரின் பேனாமுனை வழி வெளிப்பட்டுக்கொண்டிருந்த தமிழ்க்கலை உணர்வானது, அவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததற்குப் பின்னர் செயல் வடிவம் பெற்றதைப் பேசுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பிரசன்னா. செ. இரா, **கலைஞரும் மகளிர் நலத் திட்டங்களும்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக். 79–88.

இக்கட்டுரை, கலைஞர் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட மகளிர் நலத்திட்டங்கள் அறிவார்ந்த மகளிர் நெஞ்சங்கள் மகிழக் கூடிய வகையில் அமைந்திருந்த பாங்கைக் கண்டுவிளக்குகிறது.

சரோஜா. மு, **கலைஞரின் எழுத்தும் காலமும்**, அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க்குழு, சென்னை, ஜூன் 1984, பக்.177–191.

இலக்கியப் படைப்புகளின் கொள்கைகளில் மட்டுமின்றி குரலிலும் மாற்றமும் மென்மையும் ஏற்பட்டதனைக் கலைஞர் வாயிலாகவே அறியலாம் என்பதைச் சொல்லுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

Adiseshiah.Malcom.S,**Union State Economic Relation,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க் குழு, சென்னை, ஜுன் 1984, பக்.249–267.

மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான பொருளாதார உறவு குறித்த கலைஞரின் சிந்தனைகளைப் பேசும் கட்டுரை.

Krishna Shetty. K.R, **Dr. Kalaignar Karunanidhi's Concept of State Autonomy,** அறிஞர்கள் பார்வையில் கலைஞர், கலைஞர் மணிவிழா மலர், கலைஞர் மணிவிழா மலர்க் குழு, சென்னை, ஜுன் 1984, பக்.268–281.

கலைஞரின் மாநில சுயாட்சிக் கொள்கை குறித்துப் பேசும் கட்டுரை.

